**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு: 22-3-2013 Issued: 22-3-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, அக்டோபர் 31, 2012—தொகுதி 35—எண் 3**

**Wednesday the 31st October, 2012—Volume 35—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 31–10–2012

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் — *95-143*

**2. தகவல் கோரல்—** — *143-144,146-177*

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — *143-144*

(ஆ) தமிழகத்தில் நிலவும் மின்சாரப் பற்றாக்குறை — *146-177*

திரு. துரைமுருகன் — *146-148*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — *147,1 51, 153*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — *148, 149, 150, 154 157-170, 172-177*

*திரு. அ. சவுந்தரராசன் — *149, 154-155*

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் — *151-153,170-172*

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி — *150-152*

திரு. எம். ஆறுமுகம் — *156*

திரு. என்.ஆர். ரெங்கராஜன் — *156*

திரு. அ. கணேஷ்குமார் — *157*

டாக்டர் க. கிருஷ்ணசாமி — *157*

**3. அறிவிப்புகள்—** — *144-145,184*

(அ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுதரக் கோரி தே.மு.தி.க. உறுப்பினர்கள் சிலர் பேரவைத் தலைவருக்கு கடிதம் அளித்த பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல் — *144-145*

பக்கங்கள்


(ஆ) தே.மு.தி.க. உறுப்பினர்கள் இருவர் பேரவை லாபியில் தன்னைத் தாக்க முற்பட்டதாக உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அளித்துள்ள புகாரை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல் 145

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, முன்மொழிதல் (ஆ.செ.) 184

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** 178-184

(அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 178

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 179

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி

(இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 179-180

(ஈ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 180-181

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2012

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 181

(ஊ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக திருத்தச் சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 182




பக்கங்கள்


(எ) தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 183

(ஏ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் 183-184

**5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—** 185-237

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 185,188,191, 193,201,203

*திரு. க. பாண்டியராஜன் 187-197, 200, 202

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 188, 194-195, 233

*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 189

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 190

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 193-194,216-217

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 195,-199, 211-216,229

திரு. க. பாலகிருஷ்ணன் 186,209-211, 213-217,220

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 200-202

*திரு. ஆர். மனோகரன் 203-209

*மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் 218-219, 230-231

*திருமதி விஜயலட்சுமி பழனிசாமி 220-227

திரு. சு. குணசேகரன் 227-233

*திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 234-237

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 235-236

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 237

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**


****

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043-ஐப்பசி 15

## 2012 அக்டோபர் 31, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉம் மழை"*

*உண்பவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவிப்பதற்கு உதவுவதுடன், உண்ட பின் பருகுவதற்கும் உணவாகப் பயன்படும் சிறப்பினை உடையது மழை நீர்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**1—**

### பேருந்து நிலையம்

***290—திரு. ம. முத்துராமலிங்கம்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்தில் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் நகராட்சியில் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில், நகரின் வெங்கலசமுத்திரம் பகுதியில், நான்குவழிச் சாலை அருகில் 11.62 ஏக்கர் பரப்பில் அமைக்க, 8.99 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலமும், 2.63 ஏக்கர் தனியார் பட்டா நிலமும் அடையாளம் காணப்பட்டு, இந்நிலங்களைக் கையகப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்றம் தருவதே தன் வாழ்நாள் இலட்சியம் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் எண்ணுகிற எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கக்கூடிய திருமங்கலம் நகராட்சியில், போக்குவரத்து நெரிசல் உள்ளதால் வெளியூர் செல்லக்கூடிய பேருந்துகள் ரோட்டில்தான் நின்று செல்கின்றன. எனவே, இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களை விட்டால் வேறு வழி இல்லை என்று அங்கே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, வெளியூர் செல்லும் பேருந்துகளும், உள்ளூர் பேருந்துகளும் வந்து செல்லக்கூடிய வகையில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை இவ்வாண்டே அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, திருமங்கலம் நகராட்சியிலுள்ள பேருந்து நிலையம் மிகச் சிறிய பேருந்து நிலையமாக அமைந்துள்ளது. காரணம் 1.33 ஏக்கர் நிலப்பரப்பில்தான் அந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், மதுரையிலிருந்து திருநெல்வேலி, மற்ற நகரங்களுக்கு செல்லக்கூடிய பேருந்துகள், அந்தப் பேருந்து நிலையத்திற்குள் செல்ல முடியாமல் வெளியிலேயே நின்று சென்றுவிடுகின்றன. அதனால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் நான்குவழிச் சாலையிலுள்ள புதிய இடங்களைத் தேர்வு செய்து, 8.99 ஏக்கர் அரசு நிலத்தையும், 2.63 ஏக்கர் தனியார் நிலத்தையும், ஆக மொத்தம் 11.62 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலத்தைக் கையகப்படுத்தப்பட்டவுடனேயே முறையாக ஆணை பிறப்பிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நெரிசலைப் போக்குவதற்கு விரைந்து முயற்சிகளை மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், நான்குவழிச் சாலை என்ற காரணத்தை அதிகாரிகள் கூறி வருவதாக அறிகிறேன். அதற்கான தனி சர்வீஸ் ரோடு, மற்ற வசதிகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால், இவ்வாண்டே இறுதி ஆய்வினை முடித்து, விரைவில் அந்தப் பேருந்து நிலையம் அமைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவல்களை இங்கே கூறிக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே, அந்த நிலம் பார்வையிடப்பட்டிருக்கிறது. அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தனியாருக்குச் சொந்தமான, பட்டா நிலமான 2.63*

[2012 அக்டோபர் 31

ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த நில உரிமையாளர்களிடம் பேசப்பட்டு, அவர்களுடைய சம்மதத்தினைப் பெற்று, அந்நிலத்திற்கு உரிய தொகையாக 1 கோடியே 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மயிலாடுதுறை பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி விரைவில் முடிக்கப்படும் என்று மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பணிகள் எப்போது துவங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பேருந்து நிலையம் அமைக்கும் பணிகளை நாங்கள் நேரடியாக ஆய்வு செய்தோம். அதற்கு முறையாக நடவடிக்கை எடுத்து, விரைவாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் பகுதியை தனி வட்டமாக அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகின்றேன். அந்தியூர் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 அக்டோபர் 31]

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய பேரூராட்சிகளில், நகராட்சிகளில் மக்கள் பெருக்கம் அதிகமாக உள்ள காரணத்தினால், பேருந்துகளை நிறுத்த போதிய இட வசதி இல்லாமல் இருப்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறியும். அதன் அடிப்படையிலே எந்தெந்தப் பேரூராட்சிகள், நகராட்சிகளுக்கு இடம் தேவையோ, அங்கெல்லாம் புதிய இடங்களைக் கண்டறிந்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுத்து புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கும், அவ்வாறு இல்லாமல் ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்களின் அருகில் ஏதாவது அரசு நிலங்கள் இருக்கின்றபட்சத்தில், அந்த அரசு நிலங்களைக் கையகப்படுத்தி, அந்தப் பேருந்து நிலையங்களை விரிவாக்கம் செய்து போக்குவரத்தை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பேருந்து நிலையத்தையும் விரிவுபடுத்துவதற்குரிய வாய்ப்பு இருப்பின் அந்தப் பணியும் செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, ஆரப்பாளையம் பேருந்து நிலையம் போக்குவரத்து நெருக்கடிக்கு இடையிலே செயல்படுகிறது. அதனைக் கோச்சடைக்கு மாற்ற அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக ஆய்வு செய்து அதற்கு சாத்தியக் கூறு இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்கு உட்பட்ட கெங்கவல்லி தாலுகாவில் பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முன்பு நடந்த கூட்டத்தொடரிலே கோரிக்கை வைத்தேன். பேருந்து நிலையம் இல்லாததால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தாலுகா என்கிறார். எந்த ஊர் என்று சொன்னால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதிக்கு உட்பட்ட கெங்கவல்லி தாலுகா தலைவாசல் தாலுகாவாக இருந்தது அது தொகுதி மறு சீரமைப்பில், இப்பொழுது புதிதாக கெங்கவல்லி தாலுகாவாக ஆக்கப்பட்டது. அதனால், கெங்கவல்லி தாலுகாவில் பேருந்து நிலையம் வேண்டும் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கெங்கவல்லி ஊருக்கே கேட்கிறீர்களா?

**திருமதி ர. சுபா:** ஆமாம், பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாலுகா நினைவிலேயே சொல்லிக்கொண்டிருக்கிறார். தாலுகாவினுடைய தலைநகரமான கெங்கவல்லி நகரத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பு இருப்பின் செய்யப்படுமா என்று





மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கவேண்டும். அவர் வேறு சிந்தனையிலேயே இருக்கின்ற காரணத்தினால், இது சரியாக வரவில்லைபோல் தெரிகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.

**திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 60 ஆயிரம் மக்களுக்கும் அதிகமாக இருக்கக்கூடிய ஜோலார்பேட்டை நகரத்திற்கு தனியாக ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 8 நகராட்சிகளில் பேருந்து நிலையங்கள் இல்லாத நிலை இருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நகரமான ஜோலார்பேட்டையிலும் பேருந்து நிலையம் இல்லாமல் சாலையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு சரியான இட வசதி இல்லை. இட வசதி சரியாக இல்லாத காரணத்தினால், ஒரு பக்கம் இரயில்வே நிலம், இன்னொரு பக்கம் நெடுஞ்சாலை, மற்ற பகுதிகளிலே விவசாய நிலங்களாக இருக்கின்றன. அரசு நிலங்களும் அந்தப் பகுதியிலே இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், தனியார் நிலங்களைக் கையகப்படுத்திதான் அங்கே பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினரை வேண்டுவதெல்லாம்—தனியார் நிலங்களை யாராவது கொடுக்க முன்வருவார்கள் என்று சொன்னால், அதன்மீது நடவடிக்கை எடுத்து, அதற்குரிய நிதியையும் அரசின் வாயிலாகக் கொடுத்து, அதைக் கையகப்படுத்தி, புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட திருப்பனந்தாள் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்காக கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தருகிறேன் என்று சொல்லி, பேரூராட்சி நிருவாகத்திடம் அனுமதி கேட்டபோது, அரசின் சார்பாக அந்தப் பேருந்து நிலையம் அமைக்க இருக்கிறோம், எனவே, நிதி தேவையில்லை என்ற கருத்து வந்தது. அதை ஒட்டி, அந்த நிதியை நான் தரவில்லை. இந்த ஆண்டும் பேருந்து நிலையம் அமைக்க நிதி தருகிறேன் என்று சொன்னபோது, அதையும் பேரூராட்சி நிருவாக அலுவலர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, பேரூராட்சி நிருவாக அலுவலர் சொன்ன வாக்குறுதியின்படி திருப்பனந்தாளில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருப்பனந்தாள் பேரூராட்சியில் பேருந்து நிலையம் ஏற்கெனவே இருக்கின்றபட்சத்தில் அதை விரிவாக்குகின்ற ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நிதி வழங்குவதாகக் கூறியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழங்குகின்ற அந்த நிதியானது அரசு நிதிதான். அப்படியிருக்கின்றபட்சத்தில், அந்த நிதியைப் பெற்றுக்கொண்டு, அதை விரிவாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், அவர் வழங்குகின்ற நிதி போதாதபட்சத்தில் கூடுதலாக நிதி தேவைப்படுகிறபட்சத்தில், அந்தப் பேரூராட்சிக்கு நிதியாதாரம் இருந்தால் அதை எடுத்துக்கொண்டும், அப்படி இல்லை என்று சொன்னால், அரசின் வாயிலாக பணத்தை அளித்தும் அதை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட பேரணாம்பட்டு நகரம் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கின்ற முக்கிய நகரம். ஆந்திர, கர்நாடக எல்லையோரம் அமைந்திருக்கின்ற நகரம். நகராட்சியை ஒட்டிய ஒன்றியப் பகுதியில் 2 ஏக்கர் நிலத்தை பஸ் ஸ்டாண்டிற்காக விலையில்லாமல் கொடுக்க முன்வருகிறார்கள். எனவே, இந்த நகரத்தில் புதிய விரிவடைந்த பேருந்து நிலையம் அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற நகரம் ஒதுக்குப்புறத்தில் இருக்கிறது. போக்குவரத்து கூடுதலாக இல்லாத ஒரு நகரம். தேசிய நெடுஞ்சாலையிலிருந்து, செல்ல வேண்டும் என்று சொன்னால் தனியாக அந்த நகரத்திற்கு மட்டும் சென்று மீண்டும் திரும்பக்கூடிய நிலையிலேதான் அந்த நகரம் இருக்கின்றது இருக்கின்ற நகரப் பேருந்து நிலையத்தை சீர்படுத்தினாலே போதும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, அந்தப் பேருந்து நிலையத்தைச் சீர் செய்து மற்ற வாகனங்கள் வந்து செல்வதற்கு உரிய வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் தொகுதிக்குட்பட்ட திங்கள்சந்தை பேரூராட்சியிலே பழமைவாய்ந்த ஒரு பேருந்து நிலையம் இருக்கின்றது, அது இரண்டு பகுதிகளாக இருக்கின்றது. மக்களுக்கு வசதியே இல்லை; கழிப்பிடம்கூட வசதியாக இல்லை. ஆகவே, ஒரு நவீன பேருந்து நிலையத்தை கட்டித் தர

வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நகர்ப்புறங்கள் பல்வேறு வகைகளில் முன்னேற்றம் அடைவதற்காக நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்றவொரு திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் முதன்முறையாக அரசு நிதியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே தாங்கள் சொன்ன அந்தப் பேரூராட்சிக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை அங்குள்ள உரிய அதிகாரிகளிடத்திலே நீங்கள் சொல்லி Project Report போட்டுக் கொடுப்பீர்கள் என்று சொன்னால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அதைக் கனிவோடு பரிசீலனை செய்து, நிதி ஒதுக்கி சீர் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி பேரூராட்சி மையப் பகுதியான தலைநகரத்தில் பேருந்து நிலையம் இல்லாமல் பொது மக்களும், வாகன ஓட்டிகளும் பெரிதும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, அவர்களின் நலனைக் கருதி தலைநகரான எருமப்பட்டி பேரூராட்சியில் ஒரு புதிய பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எருமப்பட்டி பேரூராட்சி ஒரு ஊராட்சியாக இருந்து இப்போது பேரூராட்சியாக மாறிய ஒரு பகுதி. அந்தப் பகுதியை ஆய்வு செய்து அதற்கு அவசியம் இருப்பின் அதை விரிவுபடுத்துவதற்கோ அல்லது புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட சோழவந்தான் பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. இதனைப் புதுப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதைப்போல மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரூராட்சிகளை மேம்படுத்துவதற்காக நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், வருங்காலத்தில் நகர்ப்புறங்களிலும் பேரூராட்சி பகுதியிலும்தான் மக்கள் நெருக்கம் கூடுதலாக இருக்கும் என்பதை அறிந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துப் பேரூராட்சிகளிலும் இருக்கின்ற பேருந்து நிலையங்களும் நகராட்சிகளில் இருக்கின்ற பேருந்து நிலையங்களும் மேம்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே ஒவ்வொரு நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி பேருந்து நிலையங்களை ஆய்வு செய்து எந்தெந்த வகையில் அவற்றை மேம்படுத்த முடியுமோ அந்த வகையில் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்தில் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் அமைந்துள்ள மேல்மலையனூரில் ஒரு தனி பேருந்து நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு திருக்கோயில் நகரமாக இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு சுற்றுலாப் பயணிகள் அந்தப் பகுதியிலே நிறைய வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அதை நாங்கள் ஆய்வு செய்து இருக்கிறோம். ஆய்வின் அடிப்படையிலே அந்தப் பகுதியிலே வருகின்ற பேருந்துகளுக்கு ஏற்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட அதிராமபட்டினம் பேரூராட்சியில் பேருந்து நிலையப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருந்தன. தற்போது நிதிப் பற்றாக்குறையின் காரணமாக அந்தப் பணி நிறுத்தப்பட்டிருப்பதாக பேரூராட்சி நிருவாகத்தினர் தெரிவித்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பணி ஏன் தடைப்பட்டு நிற்கிறது என்பதை ஆய்வு செய்து அதற்கான நிதியினை வழங்கி, அந்தப் பணி முழுமையாக நிறைவடைய ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று ஏற்கெனவே கூறியிருக்கிறார். மீதமுள்ள பணிகளுக்கு நிதியாதாரம் தேவைப்படுகின்ற பட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துகூட அதற்காக நிதி ஒதுக்கலாம். கிட்டத்தட்ட 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அதை ஒதுக்குங்கள். அதுவும் போதவில்லை என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் சார்பாக மீதியுள்ள நிதியை ஒதுக்கி, அந்தப் பேருந்து நிலையம் சிறப்பான முறையில் செயல்பட ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுவான கேள்வி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அதற்கு பதில் சொல்வார் என்று நம்புகிறேன். போன கூட்டத் தொடரில் நான் கேட்ட கேள்வி. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடங்களுக்கு நிதி ஒதுக்குகின்றபோது, அந்த நிதி போதவில்லை என்ற காரணத்தினால் ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பணியை எடுப்பதற்கு தாமதிக்கிறார்கள். ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், முக்கியமாக நகராட்சி, பேரூராட்சி கிராமங்கள் அனைத்தும் நமது உள்ளாட்சித் துறையின்கீழ் வருவதால் அந்தப் பகுதிகளில் பள்ளிக் கட்டடம், அங்கன்வாடிக் கட்டடம், திருமண மண்டபம், பஸ் ஸ்டாண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், நீங்கள் மூலக் கேள்வியை விட்டு விட்டு எங்கேயோ போகிறீர்கள். மூலக் கேள்வியையொட்டிக் கேளுங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான கேள்விதான். அந்தப் பணிகளுக்கு நிதி ஒதுக்குகின்றபோது அந்த நிதி போதவில்லையென்ற காரணத்தினால் ஒப்பந்தக்காரர்கள் வர மறுக்கிறார்கள். ஆகவே, அதை ஆய்வு செய்து அந்தப் பணிகளுக்குக் கூடுதல் நிதி பெற்றுத்

தருவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறியாளராக இருக்கிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. காரணம் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நிதி ஒதுக்க வேண்டுமென்று அரசு பொறியாளர்களை வைத்து இவ்வளவுதான் நிதி தேவைப்படுகிறது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறைமூலம் ஆண்டாண்டிற்கு பொருள்களுடைய விலையேற்றத்தினைப் பொறுத்து அதனுடைய விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதன் அடிப்படையிலேதான் கட்டடங்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. வருகின்ற மார்ச் திங்களுக்குப் பிறகு புதிய விலை நிர்ணயம் செய்யப்படும். எனவே, இப்போது இருக்கின்ற கட்டடங்களுக்கு ஏற்கெனவே ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒப்பந்தக்காரர்கள் மகிழ்ச்சியோடு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சியில் 2 பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. பழைய பேருந்து நிலையம் ஏறத்தாழ ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டி முடிக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்று நான்கு மாதங்கள் ஆகின்றன. தற்காலிகமாக ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியின் மைதானம் பேருந்து நிலையமாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே, அதிலே அடிப்படை வசதிகள் இல்லை. எனவே, அந்த நிலையைப் போக்குவதற்காகவும், பொதுமக்கள் பயன்பாட்டிற்காகவும் கட்டி முடிக்கப்பட்ட அந்தப் பேருந்து நிலையத்தை விரைவிலே திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார். ஆனால் அந்தத் துறை அலுவலர்கள் கட்டி முடிக்கப்பட்டதற்கான தாக்கீதை அரசுக்கு அனுப்பவில்லை. அரசுக்கு தாக்கீது அனுப்பினால் உடனே பேருந்து நிலையம் திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு விடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.*

**திரு. எஸ். அப்துல் ரஹீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் பேரூராட்சியிலே புதிய பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேருந்து நிலையம் இருப்பின் அல்லது புதியதாக ஒரு பேருந்து நிலையம் உருவாக்க வேண்டும் என்று சொன்னால், அந்தப் பகுதியினுடைய போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், நெரிசலைப் பொறுத்தும், அந்தப் பகுதியிலேயே பேருந்து நிலையம் அமைப்பதா அல்லது வேறு இடத்தில் நிலம் கையகப்படுத்தி அமைப்பதா என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**2—**

## வீட்டு வசதி

**6049—திரு. கே. குப்பன்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருவொற்றியூர் திட்டப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர சுனாமி மறு குடியமர்வு திட்டத்தின்கீழ் 3,616 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.139.51 கோடி செலவில் கட்டி முடிவுறும் நிலையில் உள்ளது. இவ்வீடுகள் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. குப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதித்தபோது மீனவ சமுதாய மக்களை மின்னல் வேகத்தில் காப்பாற்றிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக அம்மா அவர்களுக்கு மீனவ சமுதாய மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 3,616 வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை அடையாளம் காணும்போது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பாதிக்கப்பட்ட மக்கள் விடுபட்டிருப்பதால் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்கார்ந்து பேசுவது நல்லதல்ல, உட்கார்ந்து பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டு பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் உண்மையான பயனாளிகளுக்குக் கொடுக்காமல், அவர்கள் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதைத்தான் சொல்கிறார். அதுபோல் தவறுகள் நிறைய நடைபெற்றிருக்கின்றன. ஆதாரத்தோடு சொல்கிறேன், நொச்சிக்குப்பம் மற்றும் சுனாமி மறு குடியமர்வில் பயனாளிகளுக்கு வீடுகள் கிடைக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. அதனால் நான் குற்றச்சாட்டு சொல்வதை விட்டுவிட்டு உறுப்பினருக்கு பதிலைத் தெரிவிக்கின்றேன். அப்படி ஏதாவது உண்மையான பயனாளிகளுக்குக் கிடைக்கவில்லை என்று உறுப்பினர் தெரிவித்தால் உண்மையான பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.

**திரு. கே. குப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர்கள், ஏதோ நான் தவறான கருத்தைச் சொன்னதைப்போல அவர்கள் இங்கே எழுந்து பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கே. குப்பன்:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒதுக்கப்பட்ட நிதி—மீனவ சமுதாய மக்கள் சுனாமியால்

பாதிக்கப்பட்டபோது பல்வேறு திட்டங்களைக் கொடுத்த ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் கொடுத்த நிதியால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீட்டை அடையாளம் காணுகிறபோது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பாதிக்கப்பட்ட மீனவ சமுதாய மக்கள் இன்றைக்கு விடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றுதான் அமைச்சரிடத்திலே நான் கேள்வியைக் கேட்டேன். அமைச்சர் அவர்களும் விடுபட்டிருந்தால் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் அமைச்சருக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

*முற்பகல் 10-25*

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கேசவபிள்ளை பார்க் குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடுகள் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது புதிய கட்டடம் கட்டும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டடங்களை அப்பகுதி மக்களுக்கு விரைவாகக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எந்தத் திட்டமும் நிறுத்தப்படவில்லை, நடந்துகொண்டிருக்கின்றது. உறுப்பினர் சொல்கின்ற பகுதியில் உள்ள பழுதடைந்த வீடுகளுக்கு நிதியொதுக்கி பழுதுகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது வேளச்சேரி தொகுதியில் உள்ள திருவான்மியூர் குப்பம், ஓடை குப்பம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதியில் வீடுகள் அவசியம் என்ற தேவை ஏற்படின் ஆய்வு செய்து நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**3—**

## முதியோர் இல்லம்

***581—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், கொல்லிமலையில் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் முதியோர் மற்றும் ஆதரவற்றோர் குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளதைச் செயல்படுத்தும் ஒரு முன்னோடி முயற்சியாக, தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா இரண்டு வட்டாரங்கள் வீதம் 64 வட்டாரங்களில் முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் 5-9-2012 அன்று காணொளிக் காட்சிமூலம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் இந்தத் திட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் உள்ள இதர வட்டாரங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் கொல்லிமலை ஒன்றியப் பகுதியிலும் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதியோர் இல்லத்தை கொல்லிமலையில் அமைத்துத் தருகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனை உடனடியாக அமைத்துத்தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலைப் பகுதியில் ஏழ்மையான, ஆதரவற்ற முதியோர்கள் நிறைய பேர் உள்ளார்கள். அவர்கள் மருத்துவம் செய்து கொள்ள என்று சொன்னால் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். அதுமட்டுமல்ல இரவு நேரத்தில் கழிப்பிடம் செல்ல வேண்டும் என்று சொன்னால்கூட அவர்கள் காடு, மேடு, பள்ளம், குண்டும் குழியுமாக உள்ள இடங்களில் செல்வதோடு மட்டுமல்லாமல் அவர்களை பாம்பு கடிக்கக்கூடிய நிலைகூட உள்ளது. இந்தச் சிரமத்தினையெல்லாம் கருத்தில்கொண்டு கொல்லிமலை மையப் பகுதியில் ஒரு முதியோர்





இல்லத்தினை உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொண்டு, நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெகுவிரைவில் தொடங்கப்பட வேண்டும் என்று சொன்னார். இந்தத் திட்டம் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு உதவியோடு செயல்படக்கூடிய ஒரு திட்டம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களது தொகுதியில் உள்ள தொண்டு நிறுவனத்தினர் யாரேனும் ஒருவர் இதனை எடுத்துச் செய்வதற்கு முன்வருவார்களேயானால், அதற்கு நீங்கள் பரிந்துரை செய்தால் உடனடியாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

## வேளாண் இயந்திரங்கள்

***21496—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் வாடகைக்கு வழங்கப்படும் டிராக்டர்கள் மற்றும் கதிரடிக்கும் இயந்திரங்களைக் கூடுதலாக வாங்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம் விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறைமூலம் 16 டிராக்டர்கள் மற்றும் 2 கதிரடிக்கும் இயந்திரங்கள் குறைந்த விலையில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

[2012 அக்டோபர் 31

இதுதவிர தஞ்சை மாவட்டத்திற்கு சம்பா சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின்மூலம் மூன்று 65 H.P. டிராக்டர்கள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தஞ்சை மாவட்டத்திற்கு டிராக்டர் மற்றும் கதிரடிக்கும் இயந்திரங்கள் கூடுதலாக வாங்கும் பிரேரணை அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் என்பது தமிழகத்தினுடைய நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் இடம். அங்கு தனியார்களுடைய கதிரடிக்கும் இயந்திரம், நடவு நடும் இயந்திரம் போன்றவற்றையெல்லாம் எடுத்தோம் என்று சொன்னால் விவசாயிகள் அதிகமான அளவிலே வாடகை கொடுக்க வேண்டியுள்ளது. எனவே, அரசின் சார்பிலே அதிக அளவிலே இயந்திரங்கள் வாங்கவேண்டியது மிக அவசியம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதிரடிக்கக்கூடிய இயந்திரம், நடவு நடும் இயந்திரம் போன்றவற்றை வாங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இப்போது தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு இடங்களிலே கரும்பு விவசாயத்தையும் செய்து வருகின்றார்கள். எனவே, அதற்கான கருவிகளையும் எதிர்காலத்தில் வாங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியத்திலே விவசாயிகளுக்கு டிராக்டர்கள் 12-ம் மற்றும் நெல் அறுவடை இயந்திரங்கள் 11-ம் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு மானியத்திலே 5 டிராக்டர்களும், நெல் அறுவடை இயந்திரங்கள் 10-ம் வழங்க இருக்கிறோம். விவசாயிகள் இதனை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்ளலாம். தேவையிருப்பின் அதுபற்றி



2012 அக்டோபர் 31]

பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான குடந்தை, விவசாயம் நிறைந்த பகுதி. எனவே, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு கரும்பு வெட்டும் இயந்திரமும், அதுபோல கதிரடிக்கும் இயந்திரமும், நடவு நடும் இயந்திரமும், உழவடிக்கும் டிராக்டர்களும் கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக 5 டிராக்டர்களும், 10 நெல் அறுவடை இயந்திரங்களும் வாங்க இருக்கின்றோம். அப்படி வாங்கும்போது உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**5—**

**வன உரிமைக் குழுக்கள்**

***7903—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வனக் கோட்டத்தில் மலைவாழ் மக்கள் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 15 கான் குடியிருப்புகளில் கிராம சபைகள்மூலம் 6 கான் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய கான் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் அமைக்கும்வண்ணம் வன உரிமைச் சட்டம் தொடர்பான முழு விவரங்களும் மலைவாழ் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த கான் குடியிருப்புகளில் சில அமைப்புகள், உள்ளாட்சி நிருவாகம் மூலமே வன உரிமை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என மலைவாழ் மக்களிடம் கூறி வருகின்றன. இதனால் இக்குடியிருப்புகளில் உடனடியாக வன உரிமைக் குழு அமைக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தாலுகாவில் இருக்கக்கூடிய வனப் பகுதியில், 18 செட்டில்மென்ட்டுகளில் 5 செட்டில்மென்ட்டுகளில் ஏற்கெனவே குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மீதியிருக்கக்கூடிய 13-ல் குழு அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதுமட்டுமல்ல, அதிகாரிகளே வனக் குழுக்களுக்கான பெயர்களை தயார் செய்து, அவர்களிடத்திலே படித்து கையெழுத்து வாங்குகின்ற முறையிலேதான் அந்தக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, மீதியிருக்கக்கூடிய செட்டில்மென்ட்டுகளிலும் அந்த வனக் குழுக்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். புலிகள் காப்பகம் என்ற பெயரால் எந்த வளர்ச்சி வேலைகளையும் செய்வதில்லை. குடிதண்ணீர் வசதிகூட அமைக்கப்படுவதில்லை. இதில் கவனம் செலுத்தப்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 அக்டோபர் 31]

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை புலிகள் காப்பகம், திருப்பூர் வனக் கோட்டத்தில் உள்ள குடியிருப்புகளில் புலையர், முதுவர், இரவலார் என்னும் இன மக்கள் வசித்து வருகின்றனர். வன உரிமைச் சட்டம், 2007, பிரிவு 2, உட்பிரிவு (ஜி)-ன்படி கிராம சபைமூலம் விண்ணப்பம் பெற அங்கீகாரம் அளிக்கும்படி மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு உரிய முன்மொழிவுகள் மாவட்ட வன அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளன.

கிராம சபை எனப்படும் இம்மக்களின் கூடுகை மூலம் அமைக்கப்பட்ட வன உரிமைக் குழு மூலம் உரிமை அமைக்க விண்ணப்பங்கள் பெறவும் அவற்றினை பரிசீலனை செய்து உட்கோட்ட அளவிலான குழுவிற்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலே மொத்தம் உள்ள 15 கான் குடியிருப்புகளில் ஆறு கான் குடியிருப்புகளில் கிராம சபைகள்மூலம் வன உரிமை குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய கான் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் அமைக்கும்வண்ணம், மலைவாழ் மக்களிடம் வன உரிமைச் சட்டம் தொடர்பாகவும், வன உரிமைக் குழுவின் முக்கியத்துவம் குறித்தும், அதனுடைய பயன்கள் பற்றிய உரிமை பட்டா வழங்கும் முறைகள் குறித்தும் ஆதி திராவிடர் நலத் துறை, வனத் துறைமூலம் தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. உள்ளூர் மக்கள் ஒப்புதலுடன் மீதம் உள்ள ஒன்பது கான் குடியிருப்புகளிலும் வன உரிமைக் குழுக்கள் அமைக்க தேவையான தொடர் நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. மீதம் இருக்கக்கூடிய செட்டில்மென்ட்டுகளிலும் குழுக்கள் அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அதேசமயத்தில் அங்கு மனுக்கள் கொடுத்து கிராம சபைகள்மூலம் தேர்ந்தெடுக்கிற முறை ஏன் இல்லை என்பதை ஆய்வு செய்யவேண்டும். சமவெளிப்பகுதியான கீழே இருந்து அதிகாரிகள்

[2012 அக்டோபர் 31

மூலமாக அது அமைக்கப்படுகிறது. மேலே மனுக்கள் கொடுத்து ஜனநாயக முறையிலே அது நடைபெறுவது இல்லை. அதை ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என்பதை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

**தூர் வாருதல்**

*__19762—திரு. எம். ஆறுமுகம்:__

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலுள்ள வாய்க்கால்களைத் தூர் வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின்மூலம் ஆண்டுதோறும் வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு நிதிகள் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல இந்த ஆண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலுள்ள வாய்க்கால்களைத் தூர் வாருவது சம்பந்தமாக, அந்தப் பகுதியில் மொத்தம் 43,000 ஏக்கர் பாசன பகுதிகளாக உள்ளன. மூன்றாவது கிளை வாய்க்கால்களில் 5,500 ஏக்கர் பாசனம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்கே இருக்கக்கூடிய மூன்றாவது கிளை வாய்க்கால்களில் வேட்டைக்காரன்புதூர், காளியாபுரம்,



2012 அக்டோபர் 31]

ஆனைமலை, சேத்துமடை, ஆழியாறு, ஊத்துக்குளி ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய வாய்க்கால்களில் தூர் வாராத ஒரு சூழ்நிலையில், வரக்கூடிய தண்ணீர் முழுவதும் பூமிக்கு அடியில் சென்று விடுகிறது. விவசாயத்திற்கு பயன்படுத்த முடியவில்லை. எனவே, அவற்றை தூர் வாருவதற்கான நடவடிக்கைகளையும், செப்பனிடுவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை விரைவிலே பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது கிளை வாய்க்கால்களில் 5,500 ஏக்கர் பாசன பகுதியில் பாசன சபை பராமரித்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்து, அவர்களுக்கு நிதி இல்லாத காரணத்தால் பராமரிப்பு இல்லாமலே இருந்து வருகிறது. அவர்களுக்கு போதிய நிதியை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை உடனடியாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள கால்வாய்கள் பிளாஸ்டிக்

பைகளாலும், குப்பைகளாலும் நிறைந்து அகலம் சுருங்கிப் போய் இருக்கின்றன. நேற்று பெய்த மழையில் சென்னை நகரின் பல இடங்கள், குறிப்பாக என்னுடைய பெரம்பூர் தொகுதி தண்ணீரில் மிதக்கிறது. குறிப்பாக, கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் இதர கால்வாய்களில் தூர் வாரி அகலப்படுத்தி அங்கு இருக்கிற ஆகாயத் தாமரைகளையும் அகற்றுவதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுத்து சென்னை நகர மக்களைக் காப்பாற்றுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேற்பாடான நடவடிக்கைகள் மூலம் பல்வேறு பகுதிகளிலே தூர் வாரப்பட்டு கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை உடனடியாக பரிசீலனை செய்யப்படும். இப்போது அங்கே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருகின்றன. பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

*முற்பகல் 10-40*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம், தொகுதிக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்திருக்கின்ற பில்லூர் அணைக்கட்டு தற்போது நீர்மின் நிலையமாகவும் இயங்கிக்கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்திற்குக் குடிநீர்க் கொண்டு செல்கின்ற இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு ஜீவாதாரத் திட்டங்களையும் கொண்டிருக்கின்ற அணைக்கட்டில் நீண்ட நாட்களாகத் தூர் வாராத காரணத்தினாலே கொள்ளளவு குறைந்திருக்கிறது. ஆகவே, நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி அங்கே தூர் வாரி அந்த அணைக்கட்டினுடைய கொள்ளளவை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அணை மின் வாரியத்தின் கட்டுப்பாட்டிலே உள்ள அணையாகும். இருந்தாலும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு இரண்டு அணைகளைத் தூர் வாருவதற்குண்டான நடவடிக்கையை எடுத்து இருக்கிறது. படிப்படியாக தூர் வாரும் பணிகள் விரிவுபடுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துகொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் உள்ள மதுராந்தகம் ஏரி பெரிய ஏரியாகும். அப்பகுதியில் விவசாய மக்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அங்கிருக்கும் வரத்துக் கால்வாய்களைத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிறைய கால்வாய்கள் அந்தப் பகுதிகளிலே தூர் வாரப்பட்டிருக்கின்றன. விடுபட்ட பகுதிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டினால் அந்தப் பகுதிகள் உடனடியாகச் சீரமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

**திரு. எம்.கே. செல்வராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சேலம் (தெற்கு) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

[2012 அக்டோபர் 31

அம்மாபேட்டை பகுதியைச் சார்ந்த பழமைவாய்ந்த குமரகிரி ஏரி சாயக் கழிவுகளாலும், சாக்கடைக் கழிவு நீராலும் சூழப்பட்டு, பொதுமக்கள் நடமாட முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுகிறது. நிலத்தடி நீரும் மாசுபட்டு மோசமான சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகிறது. அதனை தூர் வாரி, சுத்தப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே அந்த ஏரியைத் தூர் வாரும் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை 120 அடி கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்க நிலையமாகும். அந்த அணை கட்டப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தூர் வாரப்பட்டுள்ளதா என்பதையும், அப்படி தூர் வாரவில்லை என்று சொன்னால், மேட்டூர் அணை இன்றைய காலகட்டத்தில் தூர் வாரப்படுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுதான் பரீட்சார்த்த முறையிலே இரண்டு அணைகளைத் தூர் வாருவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வருகின்ற காலங்களிலே அனைத்து அணைகளையும் தூர் வாருவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, வருகின்ற காலங்களிலே அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சீவலப்பேரி அருகே ஆங்கிலேயருடைய காலத்திலேயே மருதூர் அணைக்கட்டு கட்டப்பட்டு, இதுநாள் வரையிலும் அது தூர் வாரப்படாததால், தூத்துக்குடி மாவட்டத்தினுடைய பல்வேறு வறட்சிப் பகுதிகள் பயனற்று இருக்கின்றன. எனவே, மருதூர் அணைக்கட்டை தூர் வாருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டு பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

**டாக்டர் ச. துரையப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, எனது வாசுதேவநல்லூர் தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலே அமைந்துள்ளது. அங்கே செண்பகவல்லி அணை இருக்கிறது. அதன் தடுப்புச் சுவர் உடைந்து, தண்ணீர் மேற்குப் பக்கமாக கேரளாவை நோக்கிப் பாய்கின்றது. அங்கே தடுப்புச் சுவர் கட்டி முடித்தால், மூன்று மாவட்டங்களில் மூன்று முறை விவசாயம் செய்யலாம். ஆகவே, தடுப்புச் சுவர் கட்டப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து திட்ட மதிப்பீடு இந்த ஆண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. வருகின்ற நிதியாண்டிலே அந்தப் பணிகள் முடிவுறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

*முற்பகல் 10-45*

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் சோத்துப்பாறை அணையை எழுப்புகிறபோதே வெட்டப்பட்ட மண் உள்பகுதியிலேயே போடப்பட்டுவிட்டதால் அணையின் கொள்ளளவு குறைந்துவிட்டது. அதனால் அந்த அணை போதுமான அளவிற்கு நீர்ப்பிடிப்பு இல்லாமல் இருக்கிறது. விவசாயிகளுக்கு பயன்படவில்லை. அதன் உள்பகுதியைத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வாய்ப்பிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

### சுற்றுலாத் தலம்

*4245—**திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், திடியன் மலை சிவன் கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியத்திலுள்ள திடியன் மலை சிவன் கோயிலுக்கு அதிக அளவில் ஆன்மிகச் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவதாகவும் அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார். அந்த இடத்தில் அதிகமான சுற்றலாப் பயணிகள் வருவதாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பினால், செல்லம்பட்டி ஒன்றியம் திடியன் மலை சிவன் கோயில் பகுதியில் சுற்றுலாத் துறைமூலம் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், எனது வேடசந்தூர் தொகுதி மானம்பாடியில் பிரசித்தி பெற்ற, பழமைவாய்ந்த புனித அந்தோனியார் திருத்தலம் உள்ளது. அந்தத் திருத்தலத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் எங்கெங்கே அதிகமாக ஆன்மிகச் சுற்றுலாத் தலங்கள், அதாவது கிருத்துவத் தலம் உட்பட, இருக்கின்றன என ஆய்வு செய்ய ஆணையிட்டார்கள். கடந்த நிதியாண்டிலேயே இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரியூர் பகுதி, சிவகங்கையில்

[2012 அக்டோபர் 31

இடைக்காட்டூர் பகுதி, தூத்துக்குடி மாவட்டத்தில் மணல்மாதா ஆலயப் பகுதி 1 இப்படி அனைத்து இடங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுறுத்தலின்பேரில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கருத்துரு பெறப்பட்டு நிச்சயமாக இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்து ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர் அவர்கள்.

**திரு. பி.ஆர். மனோகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோளிங்கர் தொகுதியில் ஸ்ரீலஷ்மி நரசிங்கப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இது 108 திவ்ய தேசங்களில் ஒன்று. இந்தத் தலம் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுவதற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளது. ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் கேள்வியாக எழுப்பியிருக்கிறேன். இந்தத் தலம் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில். இந்தக் கோயில் மலை மேல் அமைந்திருக்கிறது. அங்கே நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டு என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமென்ற கருத்துரு பெறப்பட்டு நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் ஆன்மிகச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.



2012 அக்டோபர் 31]

**திருமதி ஆர். ராஜலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொச்சிக்குப்பம் மற்றும் நொச்சி நகரைச் சார்ந்த மீனவர்களுக்கு சுனாமி மறுவாழ்வுக் குடியிருப்புத் திட்டம் அமைவதற்காக நிதி ஒதுக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் குவிக்கிறேன். நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், நொச்சி நகர் போன்ற பகுதிகள் சுற்றுலாவிற்கு மிகுந்த வாய்ப்புள்ள பகுதிகளாக அமைந்துள்ளன என்கிற கருத்து பொதுமக்களிடையே நிலவுகிறது. ஆகவே, மெரினா கடற்கரையைப் போலவே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம், நொச்சிக்குப்பம், நொச்சி நகர் பகுதிகளிலே சுற்றுலாத் தலத்தை மிகச் சிறப்பான முறையில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துரு பெற்று, ஆய்வு செய்து ஏற்பாடுகள் செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி இது சென்னை பகுதியிலேயே அமைந்திருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Vision 2023-லே சுற்றலாத் துறை மட்டுமே 10,000 கோடி ரூபாய் அளவுக்கு தனியார் பங்களிப்போடு வளர்ச்சி பெறும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரையும் அழைத்து, இதுகுறித்து நேரடியாக ஆய்வு செய்து கருத்துரு பெறப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட நாய்க்கநேரி மலைப் பகுதி, மிகுந்த குளிர்ச்சிப் பகுதியாகவும், வற்றாத ஏரி உள்ள பகுதியாகவும் இருக்கிறது. அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள்

[2012 அக்டோபர் 31

கோரிக்கையாக அதை சுற்றுலாத் தலமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாய்க்கநேரி மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பார்களா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி நேரடியாக அவரையும் அழைத்துச் சென்று ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு பெறப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இலக்கியத்தில் கவிநயமிக்க கம்பராமாயணத்தைக் கொடுத்தவர் கம்பர். “கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்” என்று மகாகவி பாரதியார் சொல்லியிருக்கின்றார். கம்பர் மட்டுமல்ல அவருடைய புதல்வன் அம்பிகாபதி அமராவதி மேல்கொண்ட காதல் என்பது உலகத்தில் எல்லோரும் போற்றப்படக்கூடிய காதல் கவிதைகளைத் தந்தது. அப்படிப்பட்ட கம்பரின் சமாதி சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டையில் இருக்கிறது. அது ஒரு தனியார் இடத்தில் இருக்கிற காரணத்தால் அதை முழுமையாக சீரமைப்பதற்கான வழியில்லாமல் இருக்கிற ஒரு சூழ்நிலையில், தனியாரிடமிருந்து அந்த இடத்தைக் கையகப்படுத்தி சுற்றலாத் தலமாக அறிவிக்கிற நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சிவகங்கை தொகுதியிலே உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அதை நேரடியாக



2012 அக்டோபர் 31]

ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதற்கான நடவடிக்கையை விரைவிலே எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**8—**

### சுற்றுச் சுவர்

***5640—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கம் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியின் சுற்றுச் சுவர் மொத்தம் 420 மீட்டர் ஆகும். அதில் நபார்டு வங்கி கடனுதவியுடன் 210 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 210 மீட்டர் அளவுக்கு சுற்றுச் சுவர் அமைக்கப்பட வேண்டும். இதற்கு ரூபாய் 3.5 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சுற்றுச் சுவர் கட்டாமல் காலியாக உள்ள 210 மீட்டர் நீளத்திற்கு மத்திய அரசின் ஆதி திராவிடர் நல துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி திட்டத்தின்கீழ் பெறப்படும் 10 சதவிகிதம் நிதியிலிருந்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

[2012 அக்டோபர் 31

*நல்லாசியுடன் உடனடியாக சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

**திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் வரலாற்றிலே எந்த ஒரு முதல்வரும் செய்யாத அற்புதமான திட்டத்தை முதன்முதலில் தமிழகத்தில் இளைஞர் நலன் காக்க காவல் துறையில் இளைஞர் படையை உருவாக்கி வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழும் வரலாறே, தங்களுடைய பாதங்களை வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈஞ்சம்பாக்கத்திலே இருக்கின்ற ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுத்ததற்கு நெஞ்சார்ந்த நன்றியினை தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

*முற்பகல் 10-55*

**திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிகிறேன். எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரசு ஆதி திராவிடர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு ஆதி திராவிடர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்டு தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களின் தாயாக விளங்கி வரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த இரண்டு பள்ளிகளுக்கும் புதியதாக பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரக்கோணம் பகுதிக்காக ஏற்கெனவே என்னிடத்தில் மனு கொடுத்துள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனை பெற்று, வரும் நிதியாண்டில் அந்தப் பள்ளிகளை சீர்செய்து மாற்றிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி, அபிஷேககட்டளையில் சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஆதி திராவிடர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் இல்லாத சூழல் இருக்கிறது. அந்தப் பள்ளியைச் சுற்றி விவசாய நிலங்களும், கருவைக் காடுகளும் உள்ளதால், அந்தப் பள்ளிக்கு பாதுகாப்பு தேவை என்பதைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச் சுவர் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுற்றுச் சுவர் அமைப்பதற்குக் கோரியுள்ளார். சுற்றுச் சுவர் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே நிதி கொடுக்கலாம். இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக இந்த ஆண்டில் அந்தச் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

**திரு. கே.பி. கந்தன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழிங்கநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட பாலவாக்கம் கந்தசாமி நகர், ஆறாவது குறுக்குத் தெருவில் உள்ள ஆதி திராவிடர்*

நடுநிலைப் பள்ளி பழுதடைந்து இருக்கிறது. அதைச் சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்தான் ஆதி திராவிடர் நலத் துறைக்கென்று அதிகப்படியான நிதியினை ஒதுக்கி, எங்கெல்லாம் பராமரிப்புப் பணிகள் செய்யப்படாமல் இருக்கின்றதோ அந்தப் பள்ளிகளையெல்லாம் எடுத்து பராமரிப்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பள்ளியையும் ஆய்வு செய்து அதற்கான நிதியை ஒதுக்கி இந்த ஆண்டே பராமரிப்பு செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**9—**

## சாலை விபத்துகள்

***165—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலை விபத்துகளைத் தடுக்கவும், விபத்துகளிலிருந்து விலை மதிப்பற்ற மனித உயிர்களைக் காப்பாற்றவும் மூன்று வகையான





தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவும், செயலாக்க நடவடிக்கை எடுக்கவும், பொன்னான நேரத்திற்குள் அவசர சிகிச்சை அளிக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் வாரம் சாலைப் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. சாலையைப் பயன்படுத்துவோரிடையே மாநிலம் முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு 33 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைப் பணிவோடு எடுத்துச் சொல்லி, சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்பை ஆராய்ந்து அறிவதற்காக போக்குவரத்துத் துறை, காவல் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல வாகனப் பெருக்கத்தினால் ஏற்படும் சாலை விபத்துகளின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு தமிழகத்திலுள்ள அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும் மாநில நெடுஞ்சாலைகளிலும் 100 விபத்து அவசர சிகிச்சை மையங்கள் அமைக்க 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, விலைமதிப்பற்ற மனித உயிர்களைக் காப்பாற்றியவர் வாழும் மனித தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 100 விபத்து அவசர சிகிச்சை மையங்களை இடையில் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு 37 மையங்களாகக் குறைத்து அந்த விபத்து அவசர மையங்களுக்கு மூடுவிழா கண்டது. தமிழகத்திலே ஏற்படுகின்ற சாலை விபத்துகளைக் குறைக்க வேண்டும், ஏற்படுகின்ற மனித உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு இந்த ஆண்டு 50 அவசர சிகிச்சை மையங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு அதற்கான பணிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2001 ஆம் ஆண்டு சாலைப் பாதுகாப்பு நிதி இரண்டு கோடி ரூபாயாக இருந்தது. இதுவரை தமிழக அரசினுடைய நிதிநிலை வரலாற்றில் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு 65 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாலைப் பாதுகாப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

[2012 அக்டோபர் 31

தரமான ஓட்டுநர்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கும்மிடிப்பூண்டியில் சர்வதேச தரத்திலான ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு 15 கோடி ரூபாய் நிதியினை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 13 மாவட்டங்களில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு மாவட்டத்திற்கு தலா ஒரு கோடி வீதம் 13 கோடி ரூபாயினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** 2010 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட விபத்துகளின் அளவு 0.11 சதவீதமாக இருந்தது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதாயானை ஒதுக்கீடு செய்ததாலும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணமாகவும் 2011 ஆம் ஆண்டு 0.10 சதவீதமாக விபத்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை மதிப்பற்ற மனித உயிர்கள் சாதாரண விபத்துகளால் இழக்கப்படுவது, நாளுக்கு நாள், ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவது என்பது கவலைக்குரியது. தமிழகம் வளர்ந்து வரக்கூடிய ஒரு மாநிலம் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், இப்பொழுது நம்முடைய கவலையெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துகளால் இந்த மாநிலத்தில் ஏற்படக்கூடிய உயிரிழப்புகள் அதிகரித்து வருவதுதான். கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொர் ஆண்டும் 60 ஆயிரத்திலிருந்து 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விபத்துகள் ஏற்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டில் மட்டும் 14,359 பேர் உயிரிழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும் ஓட்டுநர்களும், சாலைகளுமே இதற்கு முக்கியமான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.



2012 அக்டோபர் 31]

எனவே, ஓட்டுநர்களுடைய குறைபாட்டைப் போக்குவதற்கு அரசு வேறு என்ன விசேஷமான நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது? தனியார் மற்றும் அரசு ஓட்டுநர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த அல்லது அவர்களுடைய தகுதியை மேம்படுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருந்த வாகனங்களின் எண்ணிக்கை என்பது 52 இலட்சம். 2012 ஆம் ஆண்டு வாகனப் பெருக்கத்தின் எண்ணிக்கை ஒரு கோடியே 54 இலட்சமாகும் அளவிற்கு தமிழகத்தில் இன்று வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இருந்தபோதும்கூட, தரமான ஓட்டுநர்கள் உருவாக வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே சொன்னதுபோல கும்மிடிப்பூண்டியில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓட்டுநர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்க ஆணையிட்டு, அதேபோல 13 மாவட்டங்களில் அமைப்பதற்கும், மாவட்டத்திற்கு ஒரு கோடி வீதம் 13 கோடிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விபத்துகளை ஏற்படுத்துகின்ற ஓட்டுநர்களுக்கு ஓட்டுநர் புத்தாக்கப் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து எடுக்க உத்தரவிட்டு, அதன்படி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு புத்தாக்கப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வாகனங்களின் எண்ணிக்கை ஒருபுறம் உயர்ந்து கொண்டே செல்வதாலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணமாக நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, வாகனங்களால் ஏற்படும் விபத்துகளைக் குறைக்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்தின் அடிப்படையில் விபத்துகள் ஏற்படுகின்றபோது உடனடியாக அவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றும், தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் 50 விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு அந்தப்

[2012 அக்டோபர் 31

பணிகளும் நடைபெற்று வருகின்றன. தரமான ஓட்டுநர்களை உருவாக்க வேண்டும் என்பதோடு, விபத்துகளைக் குறைக்க வேண்டும் என்ற சீரிய நடவடிக்கைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் காரணமாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணமாக, 2010 ஆம் ஆண்டு 0.11 சதவீதமாக இருந்த விபத்துகளின் அளவு 2011 ஆம் ஆண்டில் 0.10 சதவீதமாக படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகளின் புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபொழுது, கடந்த 2011 ஆம் ஆண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,359. ஏற்பட்ட விபத்துகளின் எண்ணிக்கை 65,873. இந்த விபத்துகளில் 5,285, தேசிய நெடுஞ்சாலைகளில்தான் அதிகமாக நடந்துள்ளன. அடுத்தது, மாநில நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ளன. அதற்கடுத்துதான் மற்ற சாலைகளில் ஏற்பட்டுள்ளன. தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகள் அதிகமாவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, வாகனங்கள் வேகமாகச் செல்வதுதான். அடுத்தது, தங்க நாற்கர சாலை அமைக்கப்படுகின்றபோது, சாலைகள் குறுக்கே செல்கின்றபோது போதிய பாதுகாப்பு வசதிகள் எல்லா இடங்களிலும் ஏற்பாடு செய்வது, தேவையான இடங்களில் river bridge, road under bridge, river over bridge . ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைத் தெளிவாக, சீக்கிரமாகக் கேளுங்கள்.

முற்பகல் 11-05

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இது ஒரு முக்கியமான கருத்து River over bridge, River under bridge அமைத்து அடர்வுள்ள தேவையான இடங்களில் இரு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர கார்கள் போன்ற வாகனங்கள் செல்வதற்கும் வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படவில்லை. அதேபோல தேவையான இடங்களில் மேம்பாலங்களும் அமைத்துத் தரப்படவில்லை. எனவே, தங்க



2012 அக்டோபர் 31]

நாற்கரச் சாலையின் வழியாக வாகனங்கள் வேகமாகச் செல்லுகின்றபோது அதைச் சரியாகக் கணக்கிட முடியாத இரு சக்கர வாகனங்கள் அல்லது டிராக்டர்கள், கார்கள் அடிக்கடி விபத்துக்கு ஆளாகின்றன.

அடுத்தது, இந்த விபத்தினுடைய இன்னொரு புள்ளிவிவரம், இந்த ஒட்டுமொத்த விபத்திலே அதிகமாக உயிரிழந்தவர்கள் இரு சக்கர வாகனங்களில் செல்லக்கூடியவர்கள்தான். 14 ஆயிரம் பேரில் 3,761 பேர் என்பது மூன்றில் ஒரு சதவீதமாகிவிடுகிறது. தேசிய நெடுஞ்சாலைகளிலே மட்டுமல்லாமல் முக்கியமான எல்லாச் சாலைகளிலும் நடைபாதைப் பயணிகளுக்கும், அதேபோல இரு சக்கர வாகனங்களுக்கும் கண்டிப்பாக தனிப் பாதை அமைத்திட வேண்டும். இதுதான் விபத்துகளைத் தடுப்பதற்குண்டான வழி. அது இல்லாதது விபத்திற்கு மூன்றாவது காரணமாக இருக்கின்றது.

அடுத்தது, பேருந்தில் அரசுப் பேருந்துகள் 1,225, தனியார் பேருந்துகள் 855. எனவே, அரசுப் பேருந்துகள் அதிகமான விபத்துகளுக்கு காரணமாக இருக்கின்றன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி கேள்வியாகக் கேளுங்கள். சீக்கிரம் (குறுக்கீடு) உட்காருங்கள். என்ன, நீங்கள் பேசிக் கொண்டே போகிறீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு துறை சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்டால் பரவாயில்லை. அந்தத் துறைக்கான அமைச்சர் அதற்கு பதில் சொல்ல முடியும். ஆனால், Highways-நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் சொல்ல வேண்டிய பதில்களுக்கெல்லாம் அவர் Transport Minister-இடம் கேள்வியைக் கேட்டால் எப்படி பதில் கிடைக்கும்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன்பேரில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, டெல்லியில் நடைபெற்ற அனைத்து மாநில

[2012 அக்டோபர் 31

போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் கூட்டத்தில் மத்திய சாலைப் போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் நமது மாநிலத்தைப் பற்றி விரிவாகப் பேசி, சாலைப் பாதுகாப்பைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டு தமிழகத்தில் செயல்படுத்தப்படுகின்ற சாலைப் பாதுகாப்புத் திட்டங்களை இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களும் பின்பற்றி நடக்க வேண்டுமென்று சொல்லுமளவுக்கு பாராட்டுரையைப் பெற்ற அரசு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் சாலைப் பாதுகாப்புக்கென்று நிதிகள் ஒதுக்கப்படுவதில்லை. இதுவரை தமிழகத்தினுடைய வரலாற்றில் இல்லாத அளவுக்கு சாலைப் பாதுகாப்பிற்கென்று 65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாதம் ஒரு முறை அந்தந்த மாவட்டங்களில் ஏற்படுகின்ற விபத்துகளைப் பற்றி, விபத்துகள் ஏற்படுகின்ற இடங்களைப் பற்றி ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டு, அந்தக் கருத்துருக்கள் வரப்பெற்றபின் எங்கெல்லாம் விபத்துத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதற்குண்டான நிதிகளை ஒதுக்குகின்றவர் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கடந்த 2012 மே மாதம் வரை தேசிய நெடுஞ்சாலைகளில் 2,253 விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. அதில் உயிரிழப்புகள் 2,458. இந்த நேரத்தில் நான் ஒரு உண்மையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். மற்ற மாநிலங்கள் எல்லாம் Toll வசூல் செய்யும் சாலைகள் தங்களுக்கு வேண்டாமென்று சொன்னபோதும்கூட கடந்த முறை ஆட்சியில் இருந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள், அவர்களுடைய அமைச்சர் மத்திய அமைச்சராக அத்துறையில் இருந்தபோது தமிழகத்தில் மட்டும் 3,700 கிலோ மீட்டர் அளவிற்கு Toll வசூலிக்கக்கூடிய சாலையை அமைத்தார்கள். அரசு அதிகாரிகள் ஆய்வு செய்து எங்கெல்லாம் பாலங்கள் தேவை என்பதை முடிவு செய்து தேசிய நெடுஞ்சாலைகளில் அவற்றை அமைத்திருந்தால் விபத்துகள் கண்டிப்பாக குறைக்கப்பட்டிருக்கும். இருந்தபோதும்கூட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த நெடுஞ்சாலைகளில் ஏற்படக்கூடிய விபத்துகளைத் தவிர்ப்பதற்கு செயல்முறைக் கருவிகள், சாலைத் தடுப்பான்கள், குறியீட்டுப் பலகைகள், அதிவேகம் கண்டறியும் கருவிகள் என அதற்குண்டான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்கு நிதிகளைக் கொடுத்து தற்போது அந்தப் பொருட்கள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, போக்குவரத்துத் துறையினுடைய அலுவலர்களிடத்திலே வழங்கப்பட்டு சிறப்பான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**10—**

## அவசர சிகிச்சைப் பிரிவு

***1110—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கம்பம் அரசு மருத்துவமனையில் இரண்டு படுக்கை வசதி கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு கட்டி முடிக்கப்பட்டு 21-6-2011 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம்-குமுளி தேசிய நெடுஞ்சாலையில் ஆயிரக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் சபரி மலைக்கு சென்று வரும் மிகவும் முக்கியமான இடத்தில் கம்பம் அரசு

[2012 அக்டோபர் 31

மருத்துவமனை அமைந்திருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலை மற்றும் மலைப் பாதைகளில் ஐயப்ப பக்தர்கள் அவர்தம் வாகனங்களில் செல்லுகின்றபோது விபத்து ஏற்பட்டு அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை தருவதற்குண்டான மருத்துவ வசதி கம்பம் மருத்துவமனையில் இல்லாத காரணத்தினால் 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆண்டிப்பட்டி மருத்துவக் கல்லூரிக்கும், 120 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கும் பாதிக்கப்பட்டவர்களை அனுப்புவதில் ஏற்படுகின்ற காலதாமதத்தால் உயிரிழப்பு ஏற்படுகின்றது. அந்த உயிரிழப்பைத் தவிர்க்கின்ற வகையில் கம்பம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் துவக்குவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் அரசு பொது மருத்துவமனை தற்பொழுது 98 படுக்கைகளைக்கொண்ட மருத்துவமனையாகத் திகழ்கிறது. கேரள மாநிலத்தை ஒட்டியுள்ள இம்மருத்துவமனையில் சராசரியாக 1,000 வெளிநோயாளிகளும், 90 முதல் 110 வரை உள்நோயாளிகளும் பயன்பெற்று வருகிறார்கள். பல் மருத்துவம், சித்தா, பால்வினை நோய் பிரிவு, ICDS, மகப்பேறு பின்கவனிப்புப் பிரிவு ஆகியவை அங்கு உள்ளன. தற்போது அவசரகால மகப்பேறு மற்றும் சிசு பராமரிப்புப் பிரிவும் உள்ளது. Poison treatment-விஷ முறிவுப் பிரிவு 4 படுக்கை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் அவசரச் சிகிச்சைப் பிரிவு இரண்டு படுக்கை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு 21-6-2011 முதல் பயன்பாட்டில் உள்ளது. வருங்காலத்தில் மக்களின் பயன்பாட்டிற்கேற்ப கூடுதல் படுக்கை வசதிகள் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 இல் 500 சாலை விபத்துகளில், அவசரச் சிகிச்சைக்காக 3,900 பேர்களும், அதைப்போல மேல் சிகிச்சைக்காக 390 பேர்களும், 2012-2013 இல் 400 சாலை விபத்துகளில் 4,090 பேர் அவசரச் சிகிச்சைக்காகவும், 350 பேர் மேல் சிகிச்சைக்காகவும் ஆண்டிப்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிற இந்த நிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எனது இந்த மெய்யான, உண்மையான கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, இல்லையென்று மறுக்காது, அவசர முக்கியத்துவம் வாய்ந்த, அவசியம் நிறைந்த விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவை அங்கு துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்குக் கருத்துரு பெற்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஓர் அறிவிப்பு இருக்கிறது. நான் படித்துவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு பேசலாம், உட்காருங்கள். ஓர் அறிவிப்பு இருக்கிறது. படித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். எனக்குத் தெரிகிறது. (குறுக்கீடுகள்)

என்னுடைய அறிவிப்பு இருக்கிறது. எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். எல்லாவற்றையும் இப்பொழுதுதான் ஆய்வுக்கு அனுப்பியிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகள் அவர்கள் கேட்டதற்கு நான் அனுமதி தருகிறேன். எல்லோரும் உட்காருங்கள். நான் அறிவிப்பு செய்த பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அறிவிப்பை நான் படித்த பிறகு நீங்கள் பேசுவதற்கு அனுமதியளிக்கிறேன், உட்காருங்கள்.

## 3. அறிவிப்புகள்

### (அ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத்தரக் கோரி தே.மு.தி.க. உறுப்பினர்கள் சிலர் பேரவைத் தலைவருக்கு கடிதம் அளித்த பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *29-10-2012* அன்று பேரவைக் கூட்டம் முடிவுற்ற பின்னர் நண்பகல் *12.00* மணியளவில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன், திரு. து. முருகேசன் மற்றும் திருமதி ஆர். சாந்தி இராஜமாணிக்கம், மற்றும் திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாக சந்திக்க அனுமதி பெற்றுத்தர வேண்டுமென்று ஒரு கடிதத்தை அளித்தனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதல்வர்தான் என்றும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்திக்க நேரம் ஒதுக்குவதற்கு கோரிக்கை வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளரிடம் நேரடியாகக் கடிதம் அளிப்பதுதான் சரியான நடைமுறை என்றும் தெரிவித்தேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் மாண்புமிகு முதலமைச்சரிடம் தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசவேண்டியிருப்பதால் அதற்கு பேரவைத் தலைவர் ஆவன செய்யவேண்டுமென்று மீண்டும், மீண்டும் வற்புறுத்தி கடிதத்தினைத் தந்துவிட்டு வெளியிலே சென்று பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும், மலிவான விளம்பரம் தேடும் வகையிலே அரசியல் நோக்கத்திற்காகப் பேட்டி அளித்ததாகவே கருதத் தோன்றுகிறது.





*முற்பகல் 11-15*

சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு மாநில முதலமைச்சரைச் சந்திக்கவுள்ள அடிப்படை நடைமுறையைக்கூட கடைப்பிடிக்காமல், அதைப்பற்றி நான் பல முறை எடுத்துச் சொல்லியும் கேட்காமல், என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்துவிட்டு, உள்நோக்கத்துடன் பேட்டி அளித்துள்ளதாகத் தெரிகிறது. எனவே, இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி *226*-ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

### (ஆ) தே.மு.தி.க. உறுப்பினர்கள் இருவர் பேரவை லாபியில் தன்னைத் தாக்க முற்பட்டதாக உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அளித்துள்ள புகாரை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் *29-10-2012* அன்று பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வெளியில் வரும்பொழுது அவரைப் பேரவை லாபியிலே வைத்து தே.மு.தி.க. உறுப்பினர்கள் திரு. ப. பார்த்தசாரதி மற்றும் திரு. க. தினகரன் ஆகியோர் தரக்குறைவாகப் பேசியதாகவும், அவரது சட்டையைப் பிடித்துத் தாக்க முற்பட்டதாகவும், எனவே, தனக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுப்பதோடு, தனது உரிமையைப் பாதிக்கும் வகையிலே மேற்கூறிய உறுப்பினர்கள் செயல்பட்டதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படியும் தன்னுடைய கடிதத்திலே திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி *226*-ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கின்றேன்.

திரு. துரைமுருகன், சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். பேரவைத் தலைவரின் முடிவிற்குப் பின்னர், அதன்மீது மேற்கொண்டு எதுவும் பேசக்கூடாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவை உரிமைக் குழுவில் உங்கள் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதன்மீது ஏதாவது சொல்ல கட்சி வேண்டுமென்றால், அங்கு சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* என்னுடைய தீர்ப்பிற்குப் பின்னர் நீங்கள் மேற்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். திரு. துரைமுருகன், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவரம் குறித்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்குக் கொண்டு சென்ற பின்னர், அது குறித்து கருத்துச் சொல்வதற்கோ, விவாதிப்பதற்கோ இங்கு இடமில்லை. அவர் ஏதாவது கருத்துகள் சொல்ல வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட உறுப்பினரிடம் சொல்லி, அவர் உரிமைக் குழுவில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) தமிழகத்தில் நிலவும் மின்சாரப் பற்றாக்குறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டினால் நாடு என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தாங்களும் அறிவீர்கள், நாடும் அறியும். ** (குறுக்கீடுகள்) இது குறித்து விவாதிப்பதற்காகவும், அதேபோல, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்குப் பதில் சொல்லவிருக்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** அதேபோன்று, ** நாங்கள் adjournment motion கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னிடம் கேட்கும்போது மின்சாரம் குறித்துக் கேட்டீர்கள். மின்சாரம் குறித்து மட்டும் பேசுங்கள். ** குறித்துப் பேசவேண்டாம். மின்சாரம் குறித்து மட்டும் பேசுங்கள். ** குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** அதுகுறித்துப் பேசுவதற்கு இந்த அவையிலே நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மின்சாரம் குறித்துப் பேசியது தவிர மற்றவையெல்லாம் நீக்கப்படுகின்றன. மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் ஒரே சப்ஜெக்ட்தானே? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் Zero hour-ல் பேசுவதற்குத்தான் அனுமதித்தேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உங்களை Zero hour-ல் பேசச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் அதில்தான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் அவையை ஒத்திவைப்பதற்குக் கேட்கவில்லை. நான் அதற்கு அனுமதியும் கொடுக்கவில்லை. நீங்கள் பிரச்சினையை எழுப்பிவிட்டு உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசுவார், கேளுங்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், கையை நீட்டிப் பேசாதீர்கள், உட்காருங்கள். இனிமேல் அம்மாதிரிப் பேசினால், நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் எழுந்து மின்சாரத்தைப்பற்றி சில கருத்துகளை இங்கே சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) பொறுமையாக இருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் தெரியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சித் தலைவர்தான் கேட்டார். அதற்குத்தான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குள் நீங்கள் எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது என்ன பேசுகிறேன் என்று திரு. ஜெ. அன்பழகன் முதலிலே கவனமாகக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு எழுந்து பேச வேண்டும். (குறுக்கீடுகள்) நான் பேசும்போது குறுக்கிட்டால் அது என்ன நடைமுறை? இது ஜனநாயக நடைமுறை இல்லை. உறுப்பினர் இதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும் (குறுக்கீடு) நீங்கள் உங்கள் உறுப்பினருக்குச் சொல்லுங்கள்.

*முற்பகல் 11-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் எழுந்து, மின்சாரத்தைப் பற்றி சில வினாக்களை இங்கே எழுப்பினார். அதற்குரிய பதில்

வருவதற்கு முன்பாகவே, அடுத்த பொருள் பற்றி இங்கே பேசுகிறார். அதற்கு இங்கே இடமில்லை. முதலில் நீங்கள் சொன்னதற்கு பதில் வரும். உரிய பதிலை மாண்புமிகு அம்மா அவர்கள் தருவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மின்சாரம் மட்டும்தான். (குறுக்கீடுகள்) மின்சாரத்தைப் பற்றிப் பேசினீர்கள் (குறுக்கீடு) இது zero hour. (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன், இல்லையா?

**திரு. துரைமுருகன்:** நான் கொடுத்திருப்பது Adjournment motion. Adjournment motion என்று சொன்னால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, zero hour-தான் இப்போது.

**திரு. துரைமுருகன்:** உங்கள் கருத்துக்கு நான் மாறுபடவில்லை. உங்கள் தீர்ப்புக்கு நான் எதிர்ப்பாகப் போகவில்லை. ஆனால், நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Adjournment motion—க்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. அதைப்பற்றிப் பேசக்கூடாது. Zero hour-ல் raise பண்ணுவதற்குத்தான் அனுமதி கேட்டீர்கள்; அதற்குத்தான் நான் அனுமதி கொடுத்தேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அதெல்லாம் இல்லை. அதை நான் allow பண்ணவில்லை. (குறுக்கீடுகள்) நான் அதை allow பண்ணவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை நான் இப்போது எடுத்துக்கொள்ளவில்லை. மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Zero Hour-ல் மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், தமிழகத்தில் நிலவுகின்ற மின்சாரப் பற்றாக்குறை நிலைமையைப்பற்றி பேசவேண்டும் என்று அனுமதி கோரினார். அதற்கு அந்தப் பிரச்சினையை எழுப்ப தாங்கள் அனுமதி அளித்தீர்கள். மின்சாரப் பற்றாக்குறையைப்பற்றி இங்கே





பேசவேண்டும் என்றால், அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்றால், அதன் நோக்கம் என்ன? இந்த நிலைமை குறித்து அரசினுடைய விளக்கம் என்ன, அரசினுடைய பதில் என்ன என்பதைக் கேட்டுப் பெறுவதற்காகத்தானே? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சபாநாயகர் அவர்கள் அனுமதி அளித்தீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பிரச்சினையை எழுப்பினார். இதற்கு நான் பதில் சொல்ல ஆயத்தமாக இருக்கிறேன். அதற்கு ஏன் இவர்கள் தடையாக நிற்கிறார்கள் என்று புரியவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிக்கை படிக்கவிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள்; நான் எழுந்து நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவைத் தலைவர் நிற்கிறேன், உட்காருங்கள். நீங்கள் zero hour-ல் மின்சாரத்தைப் பற்றி பேசவேண்டும் என்று தெரிவித்து பேசினீர்கள். அதற்கு நான் அனுமதி கொடுத்தேன். Zero hour-ல்தான் பேசுவதற்கு அனுமதி கொடுத்தேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. அதற்குண்டான விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நீங்கள் அதைக் கேளுங்கள். அவ்வளவுதானேயொழிய, ஒத்திவைப்புத் தீர்மானமாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. (குறுக்கீடு) அதை நான் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளவில்லை. Zero hour-ல் பேசுவதற்குத்தான் நான் அனுமதி கொடுப்பதாகச் சொன்னேன். நான் அறிவிப்பைப் படித்துவிட்டு Zero hour-ல் பேசுவதற்கு கூப்பிடுவதாகச் சொன்னேன். நான் சொன்னபடி கூப்பிட்டேன். கூப்பிட்ட பிறகு அதை raise செய்துவிட்டு உட்கார வேண்டும். அதற்கான பதிலை மாண்புமிகு அம்மா அவர்கள் அளிப்பார்கள். அதை நீங்கள் கேட்பதற்குத் தயாராக இல்லையென்றால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கெல்லாம் கேட்க முடியாது. உங்கள் சௌகரியத்திற்கெல்லாம் அவையை நான் நடத்த முடியாது. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம்.

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதை நான் ரெக்கார்டு செய்துகொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள்* yield *ஆகாதீர்கள். உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உங்களை நான் உட்காரச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினரை நான் உட்காரச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) அதற்கு அனுமதி கொடுப்பதும், கொடுக்காமல் இருப்பதும் பேரவைத் தலைவருடைய விருப்பம். பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இன்றைக்கு* adjournment motion *-ஆக எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்)* Adjournment motion-*ஆக நான் எடுத்துக்கொள்ளவில்லை. நீங்கள்* zero hour-*ல் கேட்டதற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னதால், நான் உங்களுக்கு அனுமதி அளித்தேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் அவர்கள்* 'we want adjournment motion' *என்கிறார். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ......... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், (குறுக்கீடுகள்)* I am not prepared to grant the demand for adjournment motion *என்கிறார். ஆகவே,* Speaker's decision is final. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதற்குமேல் நீங்கள் நின்றால், நான் நடவடிக்கை எடுக்கவேண்டி இருக்கும். (குறுக்கீடுகள்) கண்டிப்பாக நான் நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவை நடப்பதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .......... (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் தெளிவாக என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அவை நடப்பதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையென்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கும். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைப்புத் தரமாட்டீர்களா? (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரையும் அவைக் காவலர்கள் அவையிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அவையைவிட்டு வெளியேறுவதற்கு நாடகம் போடுகிறார்கள். தைரியம் இருந்தால் அம்மா அவர்களின் பதிலை கேட்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மின்சாரப் பற்றாக்குறையைப் பற்றிக் கேள்வி எழுப்பினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அதற்கு அனுமதி அளித்தீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதில் சொல்கிறபட்சத்தில், அதற்கு. . . (குறுக்கீடுகள்)*

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *லாபியில் கோஷம் செய்ய யாரையும் அனுமதிக்காதீர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *யாரால் இந்த மின்சாரப் பற்றாக்குறை வந்தது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளக்கமாகச் சொல்லவிருக்கின்ற நேரத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியாலும், அந்தத் துறையில் அங்கம் வகித்த ஆற்காடு வீராசாமியாலும்தான் இவ்வளவு பெரிய இழப்பு ,தமிழகத்திற்கு வந்தது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரபூர்வமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளக்க இருந்தார்கள். அதைக் கேட்டால் அவர்களால் திருப்பி பதில் சொல்ல முடியாது. வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு அவல நிலைக்கு அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வந்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பதிலுரையைக் கேட்டால், மின்சாரப் பற்றாக்குறையினுடைய இன்றைய நிலைமை எப்படி இருக்கிறது, அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவு கடுமையாக உழைத்து நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை அறிவீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள், நான் படிக்கிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள், நான் படிக்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள், நான் படிக்கிறேன்.*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற தற்காலிக மின்வெட்டிற்கு முழு முதற்காரணமே கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதை ஆதாரபூர்வமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளக்கிச் சொல்வார்கள். குற்றமுள்ள நெஞ்சு, அதற்காகக் குறுகுறுக்கிறது.*



2012 அக்டோபர் 31] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

*(குறுக்கீடுகள்) எனவே, அந்தப் பிரச்சினைக்கான பதிலை அவர்கள் கேட்பதற்குத் தயாராக இல்லாமல், எழுந்து ஓடுகிறார்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்; நீங்கள் இப்படி எழுந்து நிற்கிறீர்களே? இது என்ன நடைமுறை? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான்தான் ஒவ்வொன்றாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். Zero hour-ல் பேச வேண்டும் என்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் அதற்குப் பதில் சொல்கிறேன் என்று ஒப்புக் கொண்டார்கள். அதனால் நான் அனுமதி கொடுத்தேன். நான் அறிவிப்புக் கொடுத்தவர்களைப் பேசச் சொல்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் இப்போது சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்)*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ................ (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, zero hour-ல் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசுவதற்கு அனுமதி இல்லை. குறிப்பிட்ட பிரச்சினை குறித்து ஒரு வரியிலே தெரிவிக்க வேண்டும். அதுதான் நடைமுறை. அந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு, அதற்கு விளக்கம் சொல்வதற்கு அனுமதி கொடுப்பதும், அனுமதி கொடுக்காததும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருடைய உரிமை. அதை முதலில் உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் விளக்கம் கேட்டார்கள்; 'உரிய விளக்கத்தைத் தருகிறேன்' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதற்குப் பிறகும், அவர்கள் பிடிவாதமாக நின்று கொண்டு, அவர்களுடைய வாதங்களை எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த ஆட்சியில் இருந்த குட்டுகளையெல்லாம் இங்கே சொல்லிவிடுவார்; மாண்புமிகு அம்மா அவர்களிடம் குட்டு வாங்க வேண்டுமே என்று அவர்கள் திட்டமிட்டு வெளிநடப்புச் செய்துவிட்டார்கள்; (குறுக்கீடுகள்) வெளியேற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள்; நான் பேசி விடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் பேச வேண்டும். நீங்கள் எழுப்புகிற இந்தப் பிரச்சினை சம்பந்தமாக, திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. ந. நஞ்சப்பன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கே. உலகநாதன், திரு. என்.ஆர். ரெங்கராஜன், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. ம. கலை அரசு, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகிய இவ்வளவு பேரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். "இன்றைக்கு zero hour-ல் இந்தப் பிரச்சினையை எழுப்பினால், நான் அதற்கு பதில் சொல்கிறேன்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சொன்னார்கள். நான் இதைப் படித்துவிட்டு, அதைச் சொல்லலாம் என்று இருந்தேன். அதற்குள்ளாக நீங்கள் அனைவரும் ஆளாளுக்கு எழுந்து நின்றால், நான் எவ்வாறு சபையை நடத்துவது? எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். வேண்டுமென்றே அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காக தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் எழுந்து நின்று கொண்டிருந்ததால், அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பிரச்சினையைப் பேசித் தீர்க்க வேண்டுமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பதிலை, அனைத்துக் கட்சித் தலைவர்களும் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சினையை நீங்கள் எல்லாம் எழுப்புகிறீர்கள் என்று நான்தான் சொல்லிவிட்டேனே? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு தூரம் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்திக் கேட்பதால், தாங்கள் அவர்களுக்குத் தலா இரண்டு நிமிட நேரம் ஒதுக்கலாம் என்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சிக்கு ஒருவரைப் பேச அனுமதிக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல், இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடவேண்டும். திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*__திரு. அ. சவுந்தரராசன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழத்தில் இதுவரை காணாத மின்வெட்டு நிலவுகிறது; தொழில்கள் பாதித்திருக்கின்றன; வேலை இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன; சிறு தொழில்களும், குறுந்தொழில்களும், மத்திய தரத் தொழில்களும் வெளி மாநிலங்களுக்குக்கூடப் போகிற அபாயம் இருக்கிறது; தொழில் முனைவோர், தொழில் நடத்திக் கொண்டிருப்போர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிற அவல நிலை இருக்கிறது. இந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து படிப்படியாக மின்வெட்டு குறையும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே அறிவித்திருந்தார்கள். ஆனால், படிப்படியாக அது குறையவில்லை; அதிகரித்துவிட்டது. இப்போது உடனடியாக அதைச் சரிசெய்வதற்கு என்ன வழி இருக்கிறது? மின் தடம் இல்லை; மற்ற தடம் இல்லை என்றெல்லாம் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக நான் மறுக்கவில்லை. ஆனால், எட்டு மணி நேரம் தொடர்ச்சியாக தொழில் நடத்துகின்றவர்களுக்கு-அதேபோன்று, எட்டு மணி நேரம் தொடர்ச்சியாகக் குறிப்பிட்ட பகுதிக்கு, மின்சாரம் வழங்குவதில் முறையான திட்டமிடல் இல்லாத காரணத்தினால், தொழில்கள் முடங்கிவிட்டன. ஒரு மணி நேரத்திற்கு மின்சாரம், அடுத்த ஒரு மணி நேரத்திற்கு மின்வெட்டு என்பது கடுமையான பாதிப்பை உண்டாக்கியிருக்கிறது. நம்முடைய மின்சார வாரியமோ, அது தொடர்பான அதிகாரிகளோ, இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நடவடிக்கை தேவை.





இரண்டாவது, போதுமான உபகரணங்கள் இல்லாத காரணத்தினால், கேபிள் இல்லை, மற்றவை இல்லை என்று சென்னை நகரத்திலும் சரி, மற்ற இடங்களிலும் சரி, அறிவிக்கப்படாத மின் வெட்டுகள் அமலாகிக் கொண்டேயிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நிறைய விளக்கமாக பேசிக் கொண்டிருக்காதீர்கள். அவையின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** எனவே, அரசின் கவனத்தை இந்தப் பிரச்சினையில் ஈர்த்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

[2012 அக்டோபர் 31

*முற்பகல் 11-35*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நிலவி வரக்கூடிய மின்வெட்டு என்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தொடங்கி, இப்பொழுதும் நீடித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழில்கள் முடங்கியிருக்கின்றன; தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள்; பல்வேறு வகையில் பொது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, சமச்சீரான மின்சாரத்தை வழங்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், மத்தியத் தொகுப்பிலிருந்தும், தமிழகத்தில் இயங்கக்கூடிய கல்பாக்கம் அணு மின் நிலையம், தூத்துக்குடி, நெய்வேலி அனல் மின் நிலையங்களில் உற்பத்தி ஆகக்கூடிய மின்சாரத்தை முழுமையாகத் தமிழகத்திற்கே கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், இந்த மின்வெட்டிலிருந்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய இந்தச் சூழலிலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்கான முறையிலே கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. தமிழகத்தில் இயங்கக்கூடிய மின் நிலையங்களில் கூடுதலான மின்சாரத்தை முழுமையாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதன் அடிப்படையில் விவாதிக்க வேண்டுமென்பது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் மின்வெட்டின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் போன்ற பகுதிகளில் சிறு தொழில்கள் செய்யும் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறித்து இந்த நேரத்தில் அவையின் கவனத்தை ஈர்த்து, மின்வெட்டைத் தீர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். இன்றைக்குத்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். எனினும், மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருப்பதால், உங்களை பேச அனுமதிக்கிறேன்.



2012 அக்டோபர் 31]

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்று நிலவும் அறிவிக்கப்படாத மின்வெட்டின் காரணமாக குறு, சிறு தொழில்கள் முற்றிலும் முடக்கப்பட்டிருக்கின்றன. மேலும், விவசாயத்திற்கு வேண்டிய சரியான மின்சாரம் வழங்கப்படாத காரணத்தால், விவசாய உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. படிப்படியாக மின்வெட்டு குறையும் என்று கடந்த முறை அறிவித்தும், இன்றும் அது முழுமையாக நிறைவு பெறாத நிலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். ஒரு நிமிடத்தில் அவையின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சில மாதங்களாக நீடித்து வருகின்ற, அசாதாரணமான மின்வெட்டைப் போக்குவதற்கு, ஏற்கெனவே பன்னாட்டுக் குழுமங்களுக்கு 600 மெகா வாட் தங்குதடையற்று வழங்கப்படுவதற்குப் பதிலாக, அவர்களுக்கும் மின்வெட்டை அமலாக்க வேண்டும் என்பதற்கும், தமிழ்நாடெங்கும் தற்காலிகமாக ஏற்பட்டிருக்கக்கூடிய 16, 18 மணி நேர மின்வெட்டைக் குறைப்பதற்கும், அண்டை மாநிலங்களில், தனியார் நிறுவனங்களில் உற்பத்தி ஆகக்கூடிய மின்சாரத்தை வாங்க வேண்டும் என்பதற்கும், தற்பொழுது டில்லி அரசால் மத்தியத் தொகுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள 1,821 மெகா வாட் மின்சாரத்தைப் பெறுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையில் தமிழகத்தினுடைய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் டில்லிக்கு அழைத்துச் சென்று பிரதமர் அவர்களைச் சந்திப்பதற்கும் ஆவன செய்யப்படுமா என்பதைக்கேட்டு இந்த நேரத்திலே அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையில், சற்று முன்பு

மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் ஒரு நாடகத்தை அரங்கேற்றி நடத்தினார்கள். இன்று தமிழ்நாட்டில் நிலவுகின்ற மின் நிலைமை குறித்து அனைவருக்கும் கவலைதான். அனைவரும் இதைப்பற்றிதான் பேசுகிறார்கள். ஆகவே, இன்று 'Zero Hour' நேரத்தில் இந்த மின்சார நிலைமை பற்றி பிரச்சினை எழுப்புவதற்கு தங்களிடம் அனுமதி கேட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதி அளித்தீர்கள்.

இந்தப் பேரவையில் எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும் ஒரு பொதுப் பிரச்சினையை எழுப்புகின்றபோது அதன் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? அந்தப் பிரச்சினை குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையெல்லாம் தெரிந்துகொள்ளவும், ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்து அரசின் விளக்கம் என்ன என்பதைக் கேட்டு, அரசின் பதிலைப் பெறவும்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பிரச்சினைகளை எழுப்ப அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், பிரச்சினையை எழுப்பிவிட்டு, அதன் பின்னர் அதற்கு நான் பதில் சொல்ல எழுந்தால் என்னைப் பேச விடாமல், அவர்கள் இங்கே ஒரு பெரிய நாடகத்தை நடத்தினார்கள். இறுதியில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வேறு வழியின்றி நடவடிக்கை எடுத்து, அவர்களை அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலையை, ஒரு கட்டாயத்தை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு ஏற்படுத்திவிட்டார்கள். இதனுடைய நோக்கம் என்ன? இதற்குப் பின்னால் இருக்கின்ற உள்நோக்கம் என்ன? என்னைப் பேச அனுமதித்தால், எனது பதிலைக் கேட்டுவிட்டால் தவறு எங்கே இருக்கிறது, தவறு யார்மீது இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பது தெரிந்துவிடும். இன்று தமிழகத்தில் அனைத்துத் தரப்பு மக்களையும் பாதித்திருக்கும் கடுமையான, மோசமான மின்வெட்டுக்குக் காரணமே முந்தைய தி.மு.க. அரசுதான் என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவிக்கப் போகின்ற உண்மைகளுக்கு அவர்களால் பதில் சொல்ல முடியாது என்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையைவிட்டு அவர்கள் வெளியேறிவிட்டார்கள். அதன்பிறகு மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதே பிரச்சினையைக் குறித்து இங்கே பேசினார்கள், அரசின் கவனத்தை ஈர்த்தார்கள். மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் நோக்கம் bonafide ஆக இருக்கிறது; அதாவது உண்மையாக ஒரு பிரச்சினையை





எழுப்பி, அரசினுடைய விளக்கம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உண்மையான ஆர்வத்தோடு அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பதால், இப்போது நான் பதில் சொல்ல விழைகிறேன்.

*முற்பகல் 11-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற மின் பற்றாக்குறை குறித்து அனைவரும் மிகுந்த கவலை தெரிவித்து வருகின்றனர். இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கான காரணங்களையும், அவற்றையெல்லாம் சீர் செய்து தமிழகத்தை மீண்டும் மின் மிகை மாநிலமாக மாற்ற இந்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் நான் விரிவாக அண்மையில் தொலைக்காட்சிமூலம் தமிழக மக்களுக்கு விளக்கியிருந்தேன். நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, தற்போது தமிழகத்தில் நிலவி வரும் மின் பற்றாக்குறைக்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசும், காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசும்தான் காரணம். அவற்றையெல்லாம் நீக்கி மின் நிலைமையைச் சீர் செய்யும் மிகப் பெரும் பொறுப்பை எனது தலைமையிலான அரசு செய்து வரும் இந்த வேளையில், இந்த மின் தட்டுப்பாட்டு நிலைமைக்குக் காரணம் எனது அரசுதான் என்று ஒருசில எதிர்க்கட்சிகள் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

நான் ஆட்சிக்கு வரும்போதெல்லாம், எதிர்கால மின் தேவையைக் கருத்தில்கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் மின் நிறுவுதிறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். 1991 முதல் 1996 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் புதியதாக 1,302 மெகா வாட் மின் நிறுவுதிறனும், 2001 முதல் 2006 வரையிலான ஆட்சிக் காலத்தில் புதியதாக 2,518 மெகா வாட் மின் நிறுவுதிறனும் ஏற்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 1996-லிருந்து 2001 வரையில் 561 மெகா வாட்டும், 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில் வெறும் 206 மெகா வாட் மட்டுமே கூடுதல் மின் நிறுவுதிறன் ஏற்படுத்தப்பட்டது.

2001 முதல் 2006 வரை எனது தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றபோது, மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாத நிலைதான் நிலவியது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், மின் மிகை மாநிலமாகத் தமிழகம்

விளங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் மின்சாரத்தை பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்ததன்மூலம் கூடுதல் வருவாயும் தமிழகத்திற்குக் கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

2006-ல் நான் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்றபோது, தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத்தான் விளங்கியது. இதனை, அடுத்து ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசே ஏற்றுக்கொண்டது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி, 3-4-2007 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான எரிசக்தி மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில், "...நாம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாகத்தான் இருக்கிறோம். இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான். இப்போது மராட்டிய மாநிலத்திற்கு உபரி மின்சாரத்தை விற்பனை செய்கிறோம். பஞ்சாப் மாநிலத்திற்கு விற்பனை செய்கின்றோம்." என்று பேசி இருக்கிறார் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

அதன் பின்னர், ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, எனது ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட புதிய மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்காததாலும், தொலைநோக்குப் பார்வையோடு மாநிலத்தின் மின் நிறுவுதிறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காததாலும், மின் நிலையங்களைச் சரிவரப் பராமரிக்காததாலும், 2006-ல் மின் மிகை மாநிலமாக இருந்த தமிழகம், 2008-ல் மின் குறை மாநிலமாக ஆகிவிட்டது. இது இன்று வரை தொடர்ந்து வருகின்றது.

மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கான நிருவாகத் திறமைதான் இல்லை. நீண்டகால அடிப்படையிலாவது மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருக்கலாம். அதாவது Case-1 bidding என்கிற அடிப்படையில் ஒப்பந்தத்தை மேற்கொண்டு இருக்கலாம். அதையும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யவில்லை. மாறாக, குறுகிய கால அடிப்படையில், மின்சாரத்தைக் கொள்முதல் செய்தார்கள். அதாவது, அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டது. இதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது.



2008 ஆம் ஆண்டிலேயே நீண்டகால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருந்தால், மிகக் குறைந்த விலையிலேயே மின்சாரத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க முடியும். இதனை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யத் தவறியதால், தற்போது கடுமையான மின் தட்டுப்பாடு நிலவுகிறது.

தென் மாநிலங்கள், மற்ற மாநிலங்களுடன் இணைக்கப்படுகின்ற வகையில், தேவைக்கேற்ப மின் வழித்தடங்களை, அதாவது transmission corridor-களை மத்திய அரசு ஏற்படுத்தாத காரணத்தால் மின்சாரத்தைக் கடத்தும் வழித்தடத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மின் கடத்தும் வழித்தடத்தில் நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து, நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்களைச் செய்துகொண்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நீண்டகால கொள்முதல் ஒப்பந்தங்களை ஏற்படுத்தாததன் காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குப் போதுமான மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முடியாத நிலை உள்ளது. தற்போதும்கூட பிற மாநிலங்களிலிருந்து 1,100 மெகா வாட் மின்சாரம் பெறக்கூடிய ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ஆனாலும், மின் வழித்தடத்தில் உள்ள நெருக்கடி காரணமாக 85 மெகா வாட் மட்டுமே பெற முடிகிறது.

இந்தச் சூழ்நிலையில்தான், 1,000 மெகா வாட் மின்சாரத்தை மையத் தொகுப்பிலிருந்து வழங்குமாறும், தென் மாநிலங்களை மற்ற மாநிலங்களோடு இணைக்கும் வகையில் உயர்திறன் கொண்ட மின் வழித்தடங்களை அமைக்கக் கோரியும் பாரதப் பிரதமருக்கு பல கடிதங்கள் எழுதியிருந்தேன். நாம் கேட்ட 1,000 மெகா வாட்டிற்கு பதிலாக 100 மெகா வாட் மின்சாரத்தை மட்டுமே மத்திய அரசு அளித்தது. இருப்பினும், மின் வழித்தடத்தில் உள்ள நெருக்கடி காரணமாக, அதிலும் 78 மெகா வாட் மின்சாரம் மட்டுமே தற்போது கிடைக்கப்பெற்று வருகிறது.

1-11-2012 முதல் 31-3-2013 வரையிலான காலத்திற்கு டெல்லி மாநில அரசால் தனக்குத் தேவையில்லை என்று ஒப்படைக்கப்பட்ட 1,721 மெகா வாட் மின்சாரத்தை தமிழகத்திற்கு அளிக்க வேண்டும் என்று நான் பாரதப் பிரதமருக்கு கோரிக்கை விடுத்திருந்தேன். இதற்கும் மத்திய அரசு செவிசாய்க்காத காரணத்தால், இது தொடர்பாக மத்திய அரசுக்கு உத்தரவு

வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தை அணுக எனது தலைமையிலான அரசு முடிவெடுத்தது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதல் அலகில் உற்பத்தி செய்யப்படும் 1,000 மெகா வாட் மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நான் பாரதப் பிரதமருக்கு கடிதங்கள் எழுதியுள்ளேன். நேரிலும் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளேன். இதற்கும் சாதகமான பதிலை மத்திய அரசு அளிக்கவில்லை.

எனவே, நீண்ட கால அடிப்படையில், அதாவது Case-1 bidding அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முன்னுரிமை அளிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டும், இதன்மூலம் மலிவான விலையில் கணிசமான மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முடியும் என்பதாலும், நீண்டகால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யும் வகையில் புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கான அனுமதி வேண்டி தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஆணையத்தின் அனுமதி பெற்ற பின் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், புதிய மின் நிலையங்கள் அமைப்பதிலும் மத்திய அரசு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது. மாநிலங்கள் அமைக்க விரும்பும் புதிய மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைத் தருவதற்கான ‘எரிபொருள் வழங்கல் ஒப்பந்தம்’ (Fuel Supply Agreement) செய்ய மறுத்து வருவதோடு, ஏற்கெனவே இயக்கத்தில் உள்ள மின் நிலையங்களுக்கும் போதுமான நிலக்கரியை மத்திய அரசு வழங்குவதில்லை.

தேவையில் 80 விழுக்காடு நிலக்கரியை மட்டுமே, ஒதுக்கீடு செய்து Linkage அளித்து, அதிலும் மொத்தத் தேவையில் 70 விழுக்காட்டிற்கும் குறைவாகவே, மத்திய அரசு நிறுவனமான இந்திய நிலக்கரி நிறுவனம் Linkage அளித்து வருகிறது. இதுமட்டுமல்லாமல், புதிய திட்டங்களுக்கான அனுமதியை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் காலவரையின்றி தாமதப்படுத்துகிறது.

முற்பகல் 11-50

2001-2006 ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக விளங்கியபோதிலும், நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில்





கொண்டு, புதிய மின் உற்பத்தித் திட்டங்களை கண்டறிந்து அவற்றை நிறைவேற்றுவதில் நான் மிகுந்த கவனம் செலுத்தினேன். அவை, எனது அரசால் தொடங்கப்பட்டவை என்ற காரணத்தினாலோ அல்லது அலட்சியத்தினாலோ அல்லது நிர்வாகத் திறமையின்மையினாலோ அல்லது கையாலாகாத்தனத்தாலோ, பின்னர் பொறுப்பிற்கு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, இவற்றை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை.

உண்மை நிலை இவ்வாறிருக்க, மின் துறையில், தான் ஏதோ மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்திவிட்டதுபோல், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அடங்கிய கடிதத்தினை தி.மு.க.வினருக்கு எழுதியுள்ளார் திரு. கருணாநிதி.

அந்தக் கடிதத்தின் ஆரம்பத்திலேயே சீருடைப் பணியாளர்களுக்கான வீடுகள் கட்டித் தரும் பணிக்கு அடிக்கல் நாட்டிய விழாவிலே மின்சாரத்தைப் பற்றி நான் பேசியதாகக் கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. மின்சாரத்தைப் பற்றி காவல் துறை விழாவிலே நான் ஒரு வரி கூடப் பேசவில்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். “முதல் கோணல் முற்றும் கோணல்” என்று சொல்வார்கள். அதுபோல அந்தக் கடிதம் முழுவதும் உண்மைக்கு மாறான தகவல்களைக் கொண்டதாக உள்ளது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்னென்ன திட்டங்கள் தொடங்கப்பட்டன என்பதை நான் ஏன் தெரிவிக்கவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் திரு. கருணாநிதி. மின் பற்றாக்குறை நிலையைப் பற்றி சுருக்கமாக எடுத்துக்கூறிய ஒரு உரையில் பலமுறை தெரிவித்த விவரங்கள் தேவையில்லை என்பதால்தான் நான் அவற்றைக் குறிப்பிடவில்லை. இருப்பினும் திரு. கருணாநிதியின் கடிதத்தில் உள்ள தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துரைப்பதும், அதே சமயத்தில் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளை இங்கே சுட்டிக்காட்டுவதும் எனது கடமை என்று கருதுகிறேன்.

எனது முந்தைய ஆட்சிக் காலமாகிய 2001-2006 ஆம் ஆண்டுகளில் வல்லூரில் 1,000 மெகா வாட் திறன் கொண்ட

அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12-7-2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் எனது முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடியில் 1,000 மெகா வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19-6-2003 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (மேசையைத் தட்டும் ஒலி)

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 500 மெகா வாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவ 12-12-2005 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

500 மெகா வாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் 8-9-2005 அன்று துவக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

இராமநாதபுரம் மாவட்டம், வழுதூரில் 95 மெகா வாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் நிலையத்தை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 29-9-2004 அன்று எரிவாயு வழங்குவதற்காக இந்திய எரிவாயு ஆணையத்தோடு ஒப்பந்தம் கையெழுத்தானது. (மேசையைத் தட்டும் ஒலி) மார்ச் 2006-ல் ஒப்பந்தம் கோருவதற்கான பணிகள் முடிவடைந்தன. அதாவது 3,095 மெகா வாட் அளவுக்கான மின்சார உற்பத்தித் திட்டங்களை அப்போதே எனது ஆட்சிக் காலத்தில் தொடங்கினோம்.

திரு. கருணாநிதி தன்னுடைய கடிதத்தில் எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் 8-12-2006 அன்று முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டதாகவும், அதன் உற்பத்தி 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கும் என்றும் தெரிவித்திருக்கிறார். இது முற்றிலும் உண்மைக்கு மாறானது. உண்மை நிலை என்னவென்றால், நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழகத்தின் மின் நிலைமை குறித்து விரிவாக ஆய்வு நடத்தியபோது, இந்தத் திட்டம் ஆரம்பகட்ட நிலையிலேயே உள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். இதனையடுத்து, எண்ணூரில் 660 மெகா வாட் திறன் கொண்ட Super Critical மின் திட்டத்தை செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், 26-10-2012 அன்று சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.



முற்பகல் 11-55

அடுத்தபடியாக, வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு மின் திட்டம் 26-6-2007 அன்று தொடங்கப்பட்டதாகவும், 2011 மே மாதம் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்றும், இதன் உற்பத்தி விரைவில் தொடங்க இருப்பதாகவும் திரு. கருணாநிதி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதிலும் பல உண்மைகளை மறைத்துள்ளார் திரு. கருணாநிதி. இந்த அனல் மின் திட்டத்தை துவங்குவதற்கு 12-12-2005 அன்று எனது ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தத் திட்டம் 2011 ஆம் ஆண்டு மே மாதம் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்று தனது அறிக்கையிலேயே திரு. கருணாநிதியே கூறியிருக்கிறார். 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இரண்டு வாரங்கள் வரை முதலமைச்சராக திரு. கருணாநிதிதான் இருந்தார். எனவே, இந்தத் திட்டத்தை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்பதை திரு. கருணாநிதிதான் தெளிவுபடுத்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மை நிலை என்னவென்றால், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, இந்தத் திட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே நடந்திருந்தன. பின்னர், நான் அந்தத் திட்டத்தை துரிதப்படுத்தியதன் காரணமாக, 2013 ஏப்ரலில் இருந்து 600 மெகா வாட் மின்சாரம் நமக்கு கிடைக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, உடன்குடியில் பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து ஒவ்வொன்றும் 800 மெகா வாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள் அக்டோபர் 2007-ல் தொடங்கப்பட்டதாகவும், இவற்றிலிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் மின்சாரம் பெறப்படும் என்றும் கூறியுள்ளார் திரு. கருணாநிதி. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை நிலை. உண்மை நிலை இவ்வாறிருக்க, 2013 ஆம் ஆண்டு முதல் இங்கிருந்து மின்சாரம் கிடைக்கும் என்று திரு. கருணாநிதி கூறியிருப்பது நகைப்புக்குரியதாக உள்ளது. திரு. கருணாநிதியின் கற்பனைக்கு அளவே இல்லை. இந்தத்

திட்டம் துவங்கப்படாததன் காரணமாக, இதனை விரைந்து நிறைவேற்றும்பொருட்டு, தமிழ்நாடு அரசின் திட்டமாக செயல்படுத்த நான் ஆணையிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது இந்த மாமன்றத்திலும் என்னால் எடுத்துரைக்கப்பட்டது. தமிழக அரசே செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டம் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்றும், எனது தலைமையிலான அரசு விரைந்து நடவடிக்கை எடுக்காததால், மின் உற்பத்தி தாமதமாகிறது என்றும் தெரிவித்துள்ளார் திரு. கருணாநிதி. இதில் எள்ளளவும் உண்மை இல்லை. உண்மை நிலை என்னவென்றால், நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, இந்தத் திட்டத்தில் 40 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிவடைந்திருந்தன. அப்படி இருக்கும்போது திரு. கருணாநிதி கூறுவதைப்போல் இந்தத் திட்டம் 2011 ஆகஸ்ட் மாதம் எப்படி நடைமுறைக்கு வந்திருக்க முடியும்? முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினரால் விட்டுச் செல்லப்பட்ட இந்தப் பணிகளை நான் தற்போது முடுக்கிவிட்டுள்ளேன். இதன் காரணமாக, 2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இந்தத் திட்டத்தின்மூலம் நமக்கு 600 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

600 மெகா வாட் மின் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 2011 ஆம் ஆண்டு மே மாதம் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, சுமார் 55 விழுக்காடு பணிகளே முடிவடைந்திருந்தன. பின்னர் மீதமுள்ள பணிகளை நாங்கள் விரைவுபடுத்தியதன் காரணமாக, இந்த அனல் மின் நிலையம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது உற்பத்தியை துவங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குஜராத்திலிருந்து மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போடும்போதே அதைத் தமிழகத்திற்கு கொண்டு செல்ல வழி இருக்கிறதா என்றுகூடத் தெரியாமல் நான் ஒப்பந்தம் போட்டதாக திரு. கருணாநிதி தனது கடிதத்தில் கூறியிருக்கிறார்.





நண்பகல் 12-00

விவரம் புரியாதது எனக்கா அல்லது திரு. கருணாநிதிக்கா என்பதை இப்போது நான் விளக்கிக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் போட்ட பிறகுதான் வழித்தடத்தை ஒதுக்கீடு செய்ய மத்திய மின் தொடர் அமைப்பு நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதுகூட ஐந்து முறை முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதிக்குத் தெரியவில்லையே என்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, தமிழ்நாடு வேறு ஒரு மாநிலத்தோடு மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் போட்ட பிறகுதான் நாம் மத்திய மின் தொடர் அமைப்பை அணுகி எங்களுக்கு வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று கேட்க முடியும். ஆனால், இவர் என்ன கேட்கிறார், திரு. கருணாநிதி? வழித் தடத்தில் நெருக்கடி இருக்கிறது, மின்சாரத்தைக் கொண்டுவர முடியவில்லை, குஜராத்துடன் போட்ட ஒப்பந்தப்படி மின்சாரத்தை இங்கே கொண்டுவர முடியவில்லை என்று சொன்னால், திரு. கருணாநிதி கேட்கிறார், "ஏன் நீங்கள் ஒப்பந்தம் போடும்போதே இதற்கு வழி இருக்கிறதா, இல்லையா என்று நீங்கள் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை?" என்கிறார். ஆகவே, மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் போட்ட பிறகுதான் வழித்தடத்தை ஒதுக்கீடு செய்ய மத்திய மின் தொடர் அமைப்பு நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதுகூட ஐந்து முறை முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதிக்குத் தெரியவில்லையே என்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்கு தற்போதுள்ள மின் வழித்தடங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. அதை மத்திய அரசு செய்யத் தவறியுள்ளதால்தான், தற்போது நாங்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

நான் அளித்துள்ள இந்த விளக்கங்களிலிருந்து, பல்வேறு மின் திட்டங்கள் மூலமாக 2014 வரை 7,798 மெகா வாட் மின்சாரம் கிடைப்பதற்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு வழி செய்ததாக திரு. கருணாநிதி கூறியிருப்பது வெறும் கற்பனைக் கதை என்பது மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்திருக்கும்.

*2011 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல் சுற்றுப் பயணத்தின்போது, தமிழ்நாட்டின் மின்வெட்டு நிலைமையை மூன்றே மாதங்களில் சீர் செய்வேன் என்று வாக்குறுதி கொடுத்ததாக தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியும், இன்னும் சிலரும் தவறான தகவல்களை மக்களிடையே பரப்பி வருகின்றனர். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இதுபோன்ற எந்த வாக்குறுதியையும் நான் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மின்வெட்டு என்பது மிகவும் மோசமடைந்து, மக்களுக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என்பதே தெரியாத நிலை தமிழகத்தில் நிலவியது. மின் உற்பத்திக்கும், மின் தேவைக்கும் இடையே கிட்டத்தட்ட 4,000 மெகா வாட் இடைவெளி இருந்தது. திரு. கருணாநிதி தலைமையிலான ஆட்சி என்றாலே அனைத்தும் அதலபாதாளத்திற்குச் சென்றிருக்கும் என்பதும், அதை சீர்செய்ய பல ஆண்டுகள் ஆகும் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று. இதை நானும் நன்கு அறிவேன். இந்தச் சூழ்நிலையில் மின்வெட்டை மூன்றே மாதங்களில் சீர்செய்வேன் என்ற வாக்குறுதியை நான் எப்படிக் கொடுத்திருக்க முடியும்? இத்தகைய வாக்குறுதியை, நான் எந்த நேரத்திலும் அளிக்கவில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.*

*அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, புதிய மின் திட்டங்களை முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் காரணமாக 600 மெகா வாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் மற்றும் 500 மெகா வாட் மின் திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் முதல் அலகு டிசம்பர் 2012-லிருந்தும், 500 மெகா வாட் திறன்கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மார்ச் 2013-லிருந்தும், 600 மெகா வாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் முதல் அலகு ஏப்ரல் 2013-லிருந்தும் முழு உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன. இவற்றிலிருந்து தமிழ்நாட்டிற்கு 1,900 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும்.*

*அதுபோலவே, 600 மெகா வாட் மின் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மே 2013-லிருந்தும், 500 மெகா வாட் மின் திறன் கொண்ட வல்லூர்*





*அனல் மின் திட்டத்தின் மூன்றாவது அலகு அக்டோபர் 2013-லிருந்தும், 1,000 மெகா வாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் இரண்டு அலகுகள் டிசம்பர் 2013-லிருந்தும் முழுமையாக செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட உள்ளன. இவற்றிலிருந்து தமிழ்நாட்டிற்கு 1,330 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும்.*

*பிற்பகல் 12-05*

*ஆக, மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள்மூலம் 2013 ஆம் ஆண்டில் 3,230 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இவைமட்டுமல்லாமல், கூடங்குளம் அணுமின் திட்டத்திலிருந்து 925 மெகா வாட் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது கட்ட விரிவாக்க திட்டத்திலிருந்து 230 மெகா வாட் கிடைக்கும். மொத்தத்தில் 2013 ஆம் ஆண்டு இறுதியில் 4,385 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் எதிர்காலத் தேவையைக் கருத்தில்கொண்டு புதிய மின் திட்டங்களைத் தொடங்கவும் எனது தலைமையிலான அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. 660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம் நிறுவுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் 26-10-2012 அன்று கோரப்பட்டுள்ளது.*

*1,600 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்கள் பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து உடன்குடியில் நிறுவ வகுக்கப்பட்ட திட்டம் நான்கு ஆண்டுகளாகியும், துவக்கப்படாமலேயே இருந்தது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க ஆட்சியினரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்த இந்த மின் திட்டத்தை விரைந்து செயல்படுத்தும் வகையில், பாரத மிகுமின் நிறுவனத்துடனான கூட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டு, தமிழ்நாடு மின் வாரியமே மாநில அரசின் திட்டமாகச் செயல்படுத்த ஆணையிட்டேன். இதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் வெகு விரைவில் கோரப்பட உள்ளன. அதுபோலவே, 800 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்களை வடசென்னையில் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்பட உள்ளன.*

1,600 மெகா வாட் திறன் கொண்ட உப்பூர் அனல் மின் திட்டம், 800 மெகா வாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் விரிவாக்கத் திட்டம், 660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர் மாற்று மின் திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் பல்வேறு ஒப்புதல்கள் கோரப்பட்டுள்ளன. மத்திய அரசின் ஒப்புதல்கள் கிடைக்கப் பெற்றவுடன் இவற்றை நிறுவும் பணிகள் துவங்கும்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க அரசின் செயலற்ற தன்மையால், அக்கறையின்மையால், அலட்சியத்தால், சுயநலப் போக்கால், இன்று தமிழ்நாடு சந்தித்து வரும் மின்வெட்டு கடினமானது என்றாலும் தற்காலிகமானதே. நான் ஏற்கெனவே கூறியதுபோல், புதிய மின் திட்டங்கள், ஒன்றன்பின் ஒன்றாக முழுத் திறனுடன் இயக்கத்திற்கு வரவிருப்பதால், இனி வரும் மாதங்களில் மின் தடையின் தாக்கம் படிப்படியாகக் குறையும். 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டில் மின் தடை அறவே நீக்கப்பட்டுவிடும் என்று உறுதி அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத்தில் தமிழகம் விரைவில் தன்னிறைவு பெறும் மின் மிகை மாநிலமாக மாறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்__: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தற்காலிகமாக ஏற்பட்டிருக்கின்ற மின்வெட்டு பிரச்சினைக்கு முழு முதற்காரணம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிதான் என்பதை புள்ளிவிவரங்களுடனும், ஆதாரங்களுடனும் அம்மா அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். அன்றைக்கு அவர்கள் விட்டுச் சென்ற ஐந்தாண்டு காலத்திலும் அவர்களால் தீர்க்கமுடியாத, சீர் செய்யமுடியாத அந்தப் பிரச்சினையை என்னுடைய ஆட்சிக் காலத்தில் நான் செய்து காட்டுகிறேன் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே சூளுரை ஏற்று, வெறும் வார்த்தையோடு நின்றுவிடாமல் அதற்கு என்னென்ன திட்டங்கள் எல்லாம் இங்கே செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை எல்லாம் புள்ளிவிவரங்களுடனும், ஆதாரங்களுடனும் இங்கே எடுத்து வைத்ததற்கு பின்பு இங்கே இருக்கின்ற நண்பர்கள் நிச்சயமாக நிலைமையை புரிந்துகொண்டு ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.





பிற்பகல் 12-10

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அவர் மட்டுமல்ல, பலரும் முழுமையான விவரங்களைத் தெரிந்துகொள்ளாமல் பல்வேறு பிரச்சினைகளை தமிழகம் முழுவதும் பரப்பி வருகின்றார்கள்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும் இப்பொழுது மின்சாரம் கிடைக்கிறது; பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும் தனி சலுகை அளித்து 600 மெகா வாட் அளவுக்கு அவர்களுக்கு தடையில்லாத மின்சாரம் வழங்கப்படுகிறது என்ற ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். உள்ளபடியே அவருக்கு—அவருக்கு மட்டுமல்ல— இந்தப் பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஒரு உண்மையைச் சொல்கிறேன். இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, dedicated feeder என்று சொல்வார்கள். அவர்கள் மட்டுமே பயன்படுத்திக் கொள்கின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு, MoU-இன்மூலமாக வந்திருக்கின்ற மொத்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு—பன்னாட்டு நிறுவனம் மட்டுமல்ல, சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் சிறப்பு சலுகைகளைப் பெறுகின்ற வகையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற தொழில் நிறுவனங்களுக்கு —இங்கே—மின்சார வாரியத்திலே 28 தொழில் நிறுவனங்கள் உள்ளன. அந்த 28 தொழில் நிறுவனங்களுக்கும் dedicated feeder கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மின்சார அளவே 231 கே.வி.ஏ. அதாவது ஏறத்தாழ 219.95 மெகா வாட் அளவுக்குத்தான் அனுமதிக்கப்பட்டது. ஆனால் அனுமதிக்கப்பட்ட அளவு முழுவதும் அவர்கள் பயன்படுத்துவதில்லை. மாறாக கடந்த ஓராண்டு காலத்திலே சராசரியாக அவர்கள் பயன்படுத்தி இருக்கின்ற மின்சார அளவு—அனுமதிக்கப்பட்ட அளவு 219 மெகா வாட்டாக இருந்தாலும், அவர்கள் வெறும் 163 மெகா வாட் அளவிற்குதான் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆக, அவர்களது மொத்த தேவையே 163 மெகா வாட்தான். 600 மெகா வாட் என்று தவறான தகவலை பரப்புகிறார்கள். அதில் மற்றொரு கருத்தையும் சொல்லிக்கொள்கிறேன். அதிலும் மற்றவர்களைப்போல, மற்ற தொழிற்சாலைகளைப்போல 40 சதவீத மின்வெட்டை அவர்களுக்குக் கொண்டுவந்தாலும்கூட, அதிலே நமக்கு கிடைக்கப்போவது வெறும் 65 மெகா வாட்தான். இந்த

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 அக்டோபர் 31

*65 மெகா வாட் பிரச்சினையை பூதாகரமாக உருவாக்குகிறார்கள். ஒட்டுமொத்த பிரச்சினையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இதுவொரு பிரச்சினையே இல்லை. ஆனால், தவறான தகவல்களை மக்களிடம் பரப்பி ஏதோ பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும், இங்கே சலுகை வழங்குவதைப்போலவும், உள்நாட்டு நிறுவனங்களுக்கு பாரபட்சம் காட்டுவதைப்போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்ற முயற்சியிலே தயவுசெய்து ஈடுபட வேண்டாம் என்று கேட்டு, இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள், இனிமேலாவது இந்தப் பிரச்சினைகளை பெரிய அளவிலே பூதாகரமாக விளம்பரப்படுத்தவேண்டாம் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்ற விளக்கங்களை ஏற்று ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் மின்வெட்டு காரணமாக சிறு தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன என்று கூறினார். சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில், சிறு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் குறைந்தபட்சம் தொடர்ந்து 4 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*விவசாயத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பொறுத்தவரையில், டெல்டா மாவட்டங்களில் 12 மணி நேரம் மின்சாரம் வழங்க நான் ஆணையிட்டேன். இம்மாவட்டங்களில் குறைந்தபட்சம் 3 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரம் வரை மின் உற்பத்திக்கு ஏற்றவாறு மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், தமிழகத்தின் பிற பகுதிகளில் விவசாயத்திற்குக் குறைந்தபட்சம் 3 மணி நேரம் மும்முனை மின்சாரமும், மின்தடை இல்லாத நேரங்களில் இருமுனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2012 அக்டோபர் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் நிலவுகின்ற மின் பற்றாக்குறை நிலைமை அனைவருக்கும் கவலை அளிப்பதாக இருக்கிறது. பொதுமக்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அனைத்துத் தரப்பினரும் எப்படி கவலைப்படுகிறார்களோ, அதைப் போலவே, அதைவிட ஆயிரம் மடங்கு, இந்த அரசு கவலைப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. மின்சாரம் வழங்க வேண்டிய கடமையிருக்கிறது. எல்லோருக்கும் சீரான முறையில் மின்சாரத்தை விநியோகிக்க வேண்டிய கடமையிருக்கிறது. ஆகவே, மற்ற அனைவரையும்விட ஆயிரம் மடங்கு, ஒரு இலட்சம் முறை அதிகமாக நாங்கள் கவலைப்படுகிறோம்; நான் கவலைப்படுகிறேன்.*

*இந்த நேரத்தில் அனைவருக்கும் சில உண்மைகளை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்; சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த மோசமான சூழ்நிலைக்கு நாங்கள் காரணம் அல்ல. நிச்சயமாக எனது தலைமையிலான அரசு காரணம் அல்ல. 2006 ஆம் ஆண்டு நான் ஆட்சியைவிட்டுச் செல்கின்றபோது தமிழ்நாடு, மின்சாரத்தில் உபரி மாநிலமாக இருந்தது; (மேசையைத் தட்டும் ஒலி) மின் மிகை மாநிலமாக இருந்தது. அதன்பிறகு கடந்த ஆண்டு 2011 இல் நான் மீண்டும் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றேன். திரும்பி வந்து பார்க்கின்றபோது, தமிழ்நாடு மின் குறை மாநிலமாக இருந்தது. மோசமான மின் பற்றாக்குறை சூழ்நிலை நிலவியது. ஆகவே, எங்களைப் பொறுத்தவரை, இந்த நிலைமையைச் சீர்செய்ய வேண்டும். அனைவருக்கும் தேவையான மின்சாரத்தை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்தே இந்த அரசு சிரத்தையோடு செயல்பட்டு கடமையாற்றி வருகிறது.*

*பிற்பகல் 12-15*

*ஆனால், மின்சாரப் பற்றாக்குறை, மின் உற்பத்திக் குறைவு போன்ற பிரச்சினைகளை சரி செய்வது, சீர் செய்வது என்றால் அது ஒரு நாளில் முடியாது, ஒரு வாரத்தில் முடியாது, ஒரு மாதத்தில் முடியாது, ஓர் ஆண்டுகாலத்திலும் முடியாது. அதற்குப் பல நாட்கள் தேவைப்படும். இதிலுள்ள சிரமங்களை நான் ஏற்கெனவே எடுத்துச்சொல்லியிருக்கிறேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது நமக்கு ஏற்கெனவே மின் உற்பத்திக் குறைவாக இருந்தது. பலரும் எழுப்பிய கேள்வி, “சரி, இங்கே மின் உற்பத்திக்*

குறைவாக இருந்தால் வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை வாங்கலாமே, ஏன் வாங்கக்கூடாது?" என்பதுதான். நிச்சயமாக வாங்கலாம். அதற்காகத்தான் அந்த விளக்கத்தைச் சொன்னேன். நாங்கள் குஜராத் மாநிலத்தோடு ஒப்பந்தம் போட்டோம். 525 மெகா வாட் மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் போட்டோம். ஆனால், 230 மெகா வாட்தான் கொண்டுவர முடிந்தது. ஏன் என்றால், அந்த மின்வழித் தடத்தில் நெருக்கடி. அதற்குத்தான் இந்த விளக்கத்தை நான் ஏற்கெனவே அளித்தேன். மத்திய அரசுதான் மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்கும் இடையேயான மின்சாரம் பாய்வதற்கு வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழகத்திற்குப் போதுமான அளவில் அந்த மின்வழித் தடம் இல்லையென்றால் அதற்கு என்ன காரணம்? எந்த அடிப்படையில் மத்திய அரசு இந்த மின்வழித் தடத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது? நீண்டகாலக் கொள்முதல் ஒப்பந்தம் போட்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆக, நாங்கள் எப்போது ஆட்சிக்கு வந்தோம்? 2011 இல். ஆகவே, இந்த மின்வழித் தட நெருக்கடி ஏற்கெனவே இருந்த ஒன்று. ஏன் என்றால் 2006 முதல் 2011 வரை இருந்த முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நீண்டகால மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களைப் போடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சுயநல நோக்கத்துடன், சுய லாபம் கருதி வேண்டுமென்றே குறுகியகால ஒப்பந்தங்களைப் போட்டார்கள். அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கினார்கள். Case 1 bidding என்றால் என்ன? அதாவது, இன்று மின்சாரத்திற்கு யூனிட்டிற்கு இத்தனை ரூபாய் என்று என்ன விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ, இந்த Case 1 bidding-படி அதே விலைக்கு நீண்டகால ஒப்பந்தத்தைப் போட்டால், ஏழு ஆண்டுகள், 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தைப் போட்டால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு மின்சாரத்தின் விலை பல மடங்கு அதிகரித்திருந்தாலும்கூட இந்தக் குறைந்த விலைக்குத்தான் அவர்கள் மின்சாரத்தை வழங்கவேண்டும். அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் போடுகின்ற மாநிலங்களுக்குத்தான் மத்திய அரசின் வழித்தடத்தை ஏற்படுத்திக்கொடுக்கின்ற நிறுவனம் முன்னுரிமை அளித்து transmission corridor-களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அத்தகைய ஒரு ஒப்பந்தத்தைக்கூட முந்தைய தி.மு.க. அரசு போடவில்லை. அதனால், தமிழகத்திற்குத் தேவையான மின்வழித் தடம் கிடைக்கவில்லை. அதைத்தான் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



நாங்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, சில ஒப்பந்தங்களைப் போட்டோம். ஆனால், எங்களுக்கு முன்னுரிமை இல்லை, இந்த அரசுக்கு முன்னுரிமை இல்லை, ஏன் என்றால் இவை புதியதாகப் போடப்பட்ட ஒப்பந்தங்கள். அதனால்தான், குஜராத் மாநிலத்தோடு ஒப்பந்தம் போட்டாலும், 500 மெகா வாட்டிற்கு ஒப்பந்தம் போட்டாலும், 200 மெகா வாட் அளவிற்குதான் கொண்டுவர முடிகிறது. மத்திய அரசிடம் நான் 1,000 மெகா வாட் கேட்டதற்கு 100 மெகா வாட்தான் கொடுத்தார்கள். அதில்கூட 78 மெகா வாட்தான் இங்கே கொண்டுவர முடிகிறது. இன்னும் சில ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக 1,100 மெகா வாட் மின்சாரம் பெறுவதற்கு புதியதாக ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறோம். ஆனால், அவற்றில் வெறும் 85 மெகா வாட்தான் கொண்டுவர முடிகிறது. ஏன் என்றால், மின்வழித் தடத்தில் நெருக்கடி. மீண்டும் அதே பிரச்சினைக்கு வருகிறோம், அதே காரணத்திற்கு வருகிறோம். ஏன் தமிழகத்திற்குப் போதுமான மின்வழித் தடம் இல்லை. ஏன் என்றால் நமக்கு முன்னுரிமை இல்லை. ஏன் நமக்கு முன்னுரிமை இல்லை? ஏன் என்றால், நீண்டகால ஒப்பந்தங்களைப் பிற மாநிலங்களோடு போடவில்லை. அந்த நீண்டகால ஒப்பந்தங்களைப் போடத் தவறியது யார்? முந்தைய தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. கருணாநிதி தலைமையிலான மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் இந்த நிலைமைக்குக் காரணம்.

பிற்பகல் 12-20

சரி, மத்திய அரசாவது நமக்கு ஒத்துழைப்புத் தருகிறதா? மத்திய அரசிடம் பலமுறை மின்சாரத்தை வழங்குங்கள் என்று கேட்டுவிட்டோம். ஆனால், அவர்கள் வழங்கவில்லை. எத்தனை அமைச்சர்கள் இங்கே தமிழகத்தில் இருந்து சென்றிருக்கிறார்கள்! காங்கிரஸ் அமைச்சர்கள், தி.மு.க. அமைச்சர்கள், இன்றும் அமைச்சர்களாக இருக்கிறார்கள். தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுத் தர அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? அதுமட்டுமல்ல, தமிழகத்தை வஞ்சிக்கிறார்கள், நான் இப்பொழுது குறிப்பிட்டுச் சொன்ன பல மின் திட்டங்களில். அனைவரும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 அக்டோபர் 31

புதிய மின் திட்டங்களைத் தொடங்கவில்லை, தொடங்கவில்லை என்று சொன்னால் இது ஏதோ மேஜிக் மாதிரி செய்கின்ற ஒரு வேலை அல்ல. ஒரு புதிய மின் திட்டத்தை, மின் உற்பத்தி திட்டத்தைத் துவங்க வேண்டுமென்றால், மத்திய அரசிடமிருந்து பல ஒப்புதல்களைப் பெற வேண்டியுள்ளது. அதன் பிறகுதான் பணிகளைத் துவங்க முடியும். வேண்டுமென்றே தமிழ்நாட்டில் செயல்படுத்த திட்டமிட்டிருக்கும் பல பெரிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்காமல், தேவையான அனுமதியை வழங்காமல், காலத்தைத் தாமதப்படுத்துகிறது. காலதாமதம் செய்து வருகிறது. இதற்கு யார் காரணம்? இதற்கு இந்த அரசைக் குற்றம் சொன்னால் எப்படி? அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் விரிவாகச் சொன்னேன். பல அனுமதிகளை மத்திய அரசு தர வேண்டியுள்ளது. ஆனால் தர மறுக்கிறது. புதிய திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கவில்லை. ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்களுக்குப் போதுமான நிலக்கரியை வழங்குவது இல்லை. நமது மொத்தத் தேவையில், ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் மின் நிலையங்களுக்கு தேவைப்படுகின்ற நிலக்கரியில் 80 விழுக்காடுதான் கொடுக்கிறார்கள்.

ஆகவே ஒருபுறம் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு காட்டிய அலட்சியம், அக்கறையின்மை, நிருவாகத் திறமையின்மை. இன்னொருபுறம் மத்திய அரசு வேண்டுமென்றே நம்மை வஞ்சிக்கிறது. இருப்பினும், இதனால் நாங்கள் சோர்ந்துவிடவில்லை. முந்தைய தி.மு.க. அரசு என்ன தவறு செய்திருந்தாலும் அதை சரி செய்தே தீருவோம் என்ற வைராக்கியத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மத்திய அரசு நம்மை வஞ்சித்தாலும் வெற்றி பெற்றே தீருவோம், வாழ்ந்து காட்டுவோம் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ற வைராக்கியத்துடன் நாங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, என்னதான் மத்திய அரசு நம்மை வஞ்சித்தாலும் நாங்கள் இதில் தோல்வி அடையமாட்டோம். வெற்றி காண்போம். மீண்டும் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக ஆக்காமல் நான் ஓயமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*



2012 அக்டோபர் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் தொடர்ச்சியாக நான் அன்பார்ந்த தமிழக மக்களுக்கு இந்த மாமன்றம் மூலமாக விடுக்கின்ற ஒரு வேண்டுகோள் என்னவென்றால், தமிழக மக்களே! இன்றைக்கு நிலவுகின்ற மோசமான மின்வெட்டு நிலைமைக்கு இந்த அரசு காரணமில்லை என்பதைத் தெளிவாக எடுத்துச்சொல்லி விட்டேன். இருப்பினும், நீங்கள் நம்பி எங்களிடம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருப்பதால், நீங்கள் எங்கள்மீது நம்பிக்கை வைத்து, என்மீது நம்பிக்கை வைத்து, ஆட்சிப் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்திருப்பதால், உங்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த இலக்கை நிச்சயமாக அடைந்தே தீருவோம். மோசமான மின்வெட்டு நிலைமையைக் கடந்துவிட்டோம். அது முடிந்துவிட்டது. அது கடந்த காலத்தில் இருந்தது. என்னைப் பொறுத்தவரை தமிழக மக்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இத்தனை காலம் பொறுத்துவிட்டீர்கள். இன்னும் ஓராண்டு காலம் பொறுங்கள். ஓராண்டு என்றுகூடச் சொல்லமாட்டேன். அடுத்த ஜூன் மாதம் வரை சற்று பொறுத்துக்கொள்ளுங்கள். Bear with me என்று கேட்கிறேன். சற்று பொறுமை காட்டுங்கள். படிப்படியாக இனிமேல் விரைவில் மின் நிலைமை சீரடையும். மின்வெட்டு சீரடையும். நான் ஏற்கெனவே தெளிவாக எடுத்துரைத்தபடி, 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த மின்வெட்டு நிலைமை அறவே நீக்கப்படும். தமிழ்நாடு மீண்டும் ஒளிமயமான மாநிலமாகத் திகழும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மின் பற்றாக்குறை பற்றி திரு. துரைமுருகன் பேசியபோது, அனுமதி இல்லாமல் பேசியது, ஆதாரம் இல்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இதுபற்றி நிறையப் பேசியாகிவிட்டது. மீண்டும் பேச வேண்டாம். தற்போது நேரம் 12 மணிக்கு மேலாகிவிட்டது. இன்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன. ஆகவே, மேலும் இதுபற்றிப் பேச வேண்டாம்.*

[2012 அக்டோபர் 31

*பிற்பகல் 12-25*

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

### (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

### (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

[2012 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜீ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜீ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஊ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்)

சட்டமுன்வடிவு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஏ) தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு,* மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*பிற்பகல் 12-30*

## (ஏ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு,* மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்] [2012 அக்டோபர் 31

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article 205, read with clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the demands for further grants for the year 2012-2013".



2012 அக்டோபர் 31]

## 5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2012-2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29-10-2012 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2012-2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 281, திரு. வி. முத்துக்குமார்.*

**திரு. வி. முத்துக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அரசு வாகனம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.*

*"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 61, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.*

*வெட்டுத் தீர்மானம் எண் 255, திரு. ர.ம. பாபு முருகவேல்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆரணி தொகுதியில் ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்குகளுக்காக மாவட்ட சிறப்பு நீதிமன்றங்கள்*

அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*20,10,000*/-ல் ரூ.*1*/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *236*, திரு. எஸ். ஜாண் ஜேக்கப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *277*, திரு. க. பாலகிருஷ்ணன்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிதம்பரத்தில் உள்ள ஆதி திராவிடர் நலத் துறை பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி மாணவர் விடுதிகளில் தரமற்ற உணவு, பாதுகாப்பற்ற குடிநீர் வழங்கப்படுவதால் மாணவர்களுக்கு உடல் நலம் பாதிப்பதால் தரமான உணவு, பாதுகாப்பான குடிநீர் வழங்குவதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய *4* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*13,17,62,000*/-ல் ரூ.*1*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *138*, திரு. ஏ. லாசர்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விவசாயத்திற்கு இரவு *5* மணி நேரம், பகல் *5* மணி நேரம் மின்சாரம் வழங்குவதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய *5* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*876,47,24,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*82,80,000*/-ல் ரூ.*1*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *165*, திரு. ப. டில்லி பாபு.



**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டத்தில் தமிழக அரசு மரவள்ளிக் கிழங்கு (சேகோ) தொழிற்சாலை அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய *5* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*876,47,24,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*82,80,000*/-ல் ரூ.*1*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *131*, திரு. இரா. அண்ணாதுரை.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரையில் போலி ரேஷன் கார்டுகளைத் தடுத்து நிறுத்துவதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய *13* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*14,03,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/-ல் ரூ.*1*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *240*, திரு. க. பாண்டியராஜன்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி அரசு மருத்துவமனையில் தீக்காயத்திற்கான சிகிச்சைப் பிரிவினை நிலை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்!

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய *19* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*26,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,000*/-ல் ரூ.*1*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. இப்போது மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

***திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையும், கபடு வாராத நட்பும், சலியாத மனமும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் கொண்டு விளங்கும் எங்கள் கேப்டன் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தில் யார்க்கும் அஞ்சாதவர்கள்தான் ஒரு* case *போட்டவுடன்* Court-*க்குச் சென்று* Anticipatory Bail-*க்கு விண்ணப்பம் செய்தார்களா? (மேசையைத் தட்டும் ஒலி)*

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் கட்சி உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். பிறகு பதில் பேசட்டும்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஏன் இவர்கள் மூளி என்றவுடன் காதைத் தொட்டுப் பார்க்கிறார்கள் என்றே தெரியவில்லை. (குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார்? திரு. பாண்டியராஜன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானத்தில் சிறந்த தானம் நிதானம் என்பார்கள். அவர்களுடைய தலைவர் எப்பொழுதுமே 24 மணி நேரமும் நிதானமில்லாமல் இருக்கின்றார். (குறுக்கீடு)* Wait, wait. *(குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)*

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவரை பதில் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. விசி. சந்திரகுமார், உட்காருங்கள். அவர்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) திரு. க. பாண்டியராஜன், பேசுங்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் பேசுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் நீங்கள் பேசி முடிக்க வேண்டும். இதுமாதிரியான குறுக்கீடுகள் வேண்டாம். (குறுக்கீடுகள்) பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. க. பாண்டியராஜன்:** *முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் கட்சி உறுப்பினர் பாண்டியராஜன்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவரைப் பேச விடுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார், நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பாண்டியராஜனைப் பேசச் சொல்லியிருக்கிறேன்.*

திரு. வி.சி. சந்திரகுமார், அவர் உங்கள் கட்சி உறுப்பினர்தான். நீங்கள் அவரை பேசச் சொல்லுங்கள். இல்லையென்றால் நான் வேறு ஓர் உறுப்பினரை பேசச் சொல்ல வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)

**திரு. க. பாண்டியராஜன்:** நிதானம் என்பதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதையெல்லாம் சொல்ல கூடாது, உட்காருங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் பேசி முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய இந்தக் குறிப்பை—அவர் சொன்ன நிதானம் என்ற வார்த்தையையாவது அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்கவேண்டும். (குறுக்கீடுகள்) ஏனென்றால் தேவையே இல்லாத ஒரு பிரச்சினை. (குறுக்கீடுகள்) அதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். (குறுக்கீடுகள்) முதல் துணை நிதிநிலை அறிக்கை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதானம் என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலே இடம் பெறக் கூடாத சொல் அல்ல. எந்தத் தலைவர் நிதானத்தோடு இருக்கிறார், இல்லாமல் உள்ளார் என்பது மீனம்பாக்கம் விமான நிலையத்திலே நடைபெற்ற சம்பவத்தை பத்திரிகையிலே, தொலைக்காட்சியிலே பார்த்தவர்களுக்கு அந்தத் தலைவருடைய அருகதை, யோக்கியதை நன்றாகத் தெரியும் என்பது பத்திரிகையாளர்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். அவர் பேசுகிறார் அல்லவா? (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு நான் சொல்கிறேன். உங்கள் கட்சி



உறுப்பினரைத்தான் பேச அழைத்திருக்கிறேன். அவரை பேசச் சொல்லுங்கள். எது பேசுவதாக இருந்தாலும் அவர் பேசட்டும். பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இதுமாதிரி பேசக்கூடாது. நீங்கள் பேசுவதற்கு விருப்பம் இல்லையென்றால், நான் வேறு ஓர் உறுப்பினரைப் பேசுவதற்குக் கூப்பிட வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) அவரை பேச அனுமதித்திருக்கிறேன். உங்கள் உறுப்பினரை பேசச் சொல்லுங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாண்டியராஜன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் ஐந்து கருத்துகளை . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் என்னைப் பார்த்துதான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது பேச வேண்டுமென்றால் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரிடம் அனுமதி பெற்று பேசவேண்டும். ஓர் உறுப்பினர் எதிர்க் கருத்தைச் சொல்ல முற்படும்பொழுது மற்றோர் உறுப்பினர் அதனை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரிடம்தான் முறையிடவேண்டுமே தவிர, தங்களுடைய அதிகாரத்தை அந்த உறுப்பினர் எடுத்துக்கொள்ளக்கூடாது. அதை முதலில் இவர் புரிந்துகொள்ளவேண்டும் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தக் கருத்தைப் பேசுவதாக இருந்தாலும், பேரவைத் தலைவரைப் பார்த்துதான் பேசவேண்டும். நீங்களே நேருக்கு நேராகப் பேசுவது தவறு. இதை விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் இந்த கூடுதல் நிதிநிலை அறிக்கையின்மீது 5 கருத்துகளை மட்டும் எடுத்துக் கூற விரும்புகின்றேன். ஒன்று, மாண்புமிகு

நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையின் வாயிலாக அரசின் 51 துறைகள் 5,617 கோடி ரூபாய் அதிகமாக செலவு செய்வதற்கு சட்டமன்றப் பேரவையின் அனுமதியைக் கோரியிருக்கிறார். 515 இனங்களில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அதில் 128 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட செலவினத்தைவிட 5,617 கோடி ரூபாய் மிகையாகவே செலவாகும் என்று அரசு கூறியுள்ளது. அரசின் 54 துறைகளில், 35 துறைகள் அவர்கள் ஆறு மாதத்திற்கு முன் தந்த பட்ஜெட் கட்டுப்பாட்டை மீறி செலவு செய்ய அனுமதி கோரியுள்ளனர். செலவு கட்டுக்குள் இருக்குமா அல்லது அதிகம் ஆகுமா என்றுகூட அறிக்கை சமர்ப்பிக்க இயலாத துறைகள் மூன்று. 3,501 கோடி ரூபாய்க்குப் பொறுப்பேற்றுள்ள லேப்—டாப் உள்ளிட்ட பல திட்டங்களைச் செயல்படுத்த பொறுப்பேற்றுக்கொள்ளும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை; 222 கோடி ரூபாய்க்கு பொறுப்பேற்றுள்ள சுற்றுச்சூழல் துறை மற்றும் 18 கோடி ரூபாய்க்குப் பொறுப்பேற்றுள்ள சட்டத் துறை ஆகியவை ஏன் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க இயலவில்லை என்று அறிய விரும்புகிறேன். இரண்டு, நிதியமைச்சர் அவர்கள் இந்த வருடம் மார்ச் 26 ஆம் தேதியன்று அவையில் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தபோது, தமிழகத்தின் வருமானம் ரூ.1,00,590 கோடி என்று அறிவித்தார். மொத்த செலவு ரூ.1,20,422 கோடி ஆகும். மீண்டும் மே 16 அன்று இந்தத் சட்டமன்றப் பேரவையின் இறுதி நாளில், பட்ஜெட் தொடரின் இறுதி நாளில் நிதியமைச்சர் அவர்கள் பேசுகையில் இந்த மொத்த செலவு ரூ.1,28,505 கோடியாக உயர்ந்துவிடும் என்று கூறினார். முதலில் நிதிப் பற்றாக்குறையான ரூ.19,832 கோடியைச் சமாளிப்பதற்கே அரசு எடுக்க இருந்த கடன் ரூ.18,387 கோடி ஆகும். இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் கேட்டுள்ள, ரூ. 5,617 கோடியுடன் ஏற்கெனவே அதிகமான செலவினத்தையும் கூட்டினால் தமிழகத்தின் நிதிப் பற்றாக்குறை வரலாறு காணாத அளவிற்கு மொத்த உற்பத்தியில் 5 சதவிகிதத்தைத் தாண்டிவிடும். இந்த வருடம் தமிழக அரசு வாங்கவேண்டிய கடன் மட்டுமே ரூ.33,232 கோடியைத் தாண்டிவிடும். நமது உண்மையான மொத்த உற்பத்தியில் 5.4 சதவிகிதமாக இந்தக் கடன் இருக்கும். தமிழகத்தின் மொத்தக் கடன் ரூ.1,50,000 கோடியைத் தாண்டி நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தினை முழுமையாக மீறும். இந்தக் கடனுக்கு நாம் தரவேண்டிய வட்டி 10 சதவிகிதத்தைத் தாண்டி வருடத்திற்கு ரூ.15,000 கோடிக்கு மேல் வட்டி மட்டுமே தரவேண்டியிருக்கும். தமிழகத்தின் பொருளாதார ஆரோக்கியத்தை கேள்விக்குறியாக்கும் இந்த நிலைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும். குறித்த பட்ஜெட்டுக்கு மேல் ரூ.14,000 கோடி....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் முதல் தேதியில் தொடங்கி மார்ச் 31 ஆம் தேதி வரை உள்ள காலம் ஒரு நிதியாண்டு என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது நாம் கேட்டிருப்பது கூடுதல் செலவினங்களுக்காக பேரவையின் முன்னனுமதியைக் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அடுத்த 2013 மார்ச் மாதம் முடிய என்ன நடக்கப் போகின்றது என்பதை இவராகவே ஜோதிடம் பார்த்துக்கொண்டு இந்தப் பேரவையிலே கருத்துகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். இந்தக் கருத்துகள் ஏற்புடையவையல்ல. திரு. பாண்டியராஜன் அவர்கள் பொறுமையாக இருக்கவேண்டும். 2013 வரும்போது மாண்புமிகு அம்மா அவர்கள் நிதிப் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக நம்முடைய மாநிலத்தை உயர்த்திக் காட்டுவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** அதிகமான இந்தச் செலவினங்கள் எந்தத் திட்டங்களுக்காக கோரப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கலாம். உதாரணமாக இரண்டு திட்டங்கள். 6 துறைகளின் மூலமாக ஓராண்டு சாதனை விளம்பரங்களுக்காக செலவிட்ட தொகை ரூ.28 கோடியே 21 இலட்சத்து 49 ஆயிரம் ஆகும். ஐந்து துறைகள். ஒரேயொரு கதையை மட்டும் சொல்லிவிடுகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்தில் சொல்வார்கள். மூன்று இலட்சம் ரூபாய்க்கு ஒரு படம் எடுக்கவேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்த பணிகள், கடமைகள் மக்களிடத்தில் நேரிடையாகச் சென்று அடையவேண்டுமென்பதற்காக அவர்கள் அறிவதற்காக

கொடுக்கப்படக்கூடிய விளம்பரங்கள் இவையாகும். மக்களுக்குத் தெரியவேண்டும், இடைத்தரகர்கள் இந்த அருமையான திட்டங்களால் ஆதாயம் அடைந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு விளம்பரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இது வேறுவிதமான காரணங்களுக்காக அல்ல என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** இதே மாதிரி பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், ஆட்சியில் இருந்த காலத்தில் ரூ. 3 இலட்சத்திற்கு படம் எடுத்து அரசினுடைய சாதனைகளை விளம்பரம் செய்யவேண்டுமென்று ஒருவர் வந்தபோது, பெருந்தலைவர் காமராஜர் இந்த மூன்று இலட்சம் ரூபாய் இருந்தால் இன்னும் மூன்று பள்ளிக்கூடங்கள் கட்டுவேன் என்று சொல்லி அவரைத் திட்டினாராம். அதை மட்டும் சொல்லிவிட்டு இந்தக் கருத்தை நிறுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றபடி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறது. துறைதோறும், துறைதோறும் மக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கக்கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், பெரும்பாலான மக்களுக்கு என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன, அவற்றின்கீழ் எப்படியெல்லாம் நாம் பயனடைய முடியும், அதற்கு யாரை அணுகவேண்டும், அரசுத் தரப்பிலிருந்து என்னென்ன கிடைக்கவுள்ளன என்பதுபற்றித் தெரியாது. ஆகவே, இவையெல்லாம் மக்களுக்குப் போய் எட்டுகின்ற வகையில் தெரியப்படுத்தினால்தான் மக்கள் அந்தத் திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும், அதனால் பயனடைய முடியும், அதனால் இந்தச் சமுதாயம் ஆரோக்கியமான ஒரு வளர்ச்சியடைய முடியும் என்பதற்காகத்தான் இந்த ஓராண்டுக்கால சாதனை



விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. உண்மையான நோக்கம் அதுதான். அதைப் புரிந்துகொண்டால் சரி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மொத்தம் 5,617 கோடி ரூபாயிலே 5 துறைகள் மூலமாக மின் வாரியத்திற்கு அளிக்கவிருக்கும் மிகைச் செலவு மட்டும் ரூ.4,439 கோடி. மத்திய அரசாங்கத்தின் மின் சக்தி நிறுவனங்களின் நிதி சீரமைப்புத் திட்டங்களின்கீழ் பயன்பெற இந்த அளவுக்கு மிகைச் செலவு செய்ய வேண்டியிருக்கிறதென்றால், இன்றைக்கு 1,20,000 கோடி ரூபாய் Debt Re-structuring Scheme-நிதிச் சீரமைப்புத் திட்டத்திற்காக நாம் இதைச் செய்ய வேண்டுமென்றால், அதற்குமுன் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியங்கள் எதையும் செய்யாமல் இந்தச் செலவு செய்வது தேவையற்றது என நான் கருதுகிறேன்.

தமிழக மின் வாரியம், T.N.E.B. Limited, TANGEDCO Limited, TANTRANSCO Limited என்று மூன்று நிறுவனங்களாக இன்னும் முழுமையாகப் பிரிக்கப்படவில்லை. சொத்துகளையும், நிபுணர்களையும் பிரித்திட அரசுக்குத் தரப்பட்ட கால எல்லை இன்றுடன் (அக்டோபர் 31) முடிவடைகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் மட்டுமல்லாமல், இந்தியாவிலிருக்கிற அனைத்து மின் வாரியங்களும் இன்றைக்கு மின் உற்பத்திக் கழகம், மின் விநியோகக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் என்று மூன்று கழகங்களாகப் பிரிக்க வேண்டுமென்று மத்திய அரசு சட்டம் இயற்றியது. ஆனால், தமிழகம் இந்தச் சட்டத்திலே, இந்தக் கருத்திலே நமக்கு ஏற்பு இல்லை என்பதை பல முறை வலியுறுத்தியுள்ளது. இருந்தாலும்கூட ஒரு Uniform decision எடுத்து சட்டம் வரவேண்டும் என்பதற்காக ஒட்டுமொத்தமாக வலியுறுத்தி நமது மாநிலத்தில் சட்டம் அமல்படுத்தும்போதுகூட தமிழ்நாடு மின்சார வாரியம் அதனை ஏற்றுக்கொள்ள சற்றுத் தயங்கியது, காலந்தாழ்த்தியது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் அதை எதிர்த்தது. ஆனால்,

இந்தச் சட்டம் ஓரளவுக்கு மின் கட்டமைப்பு, நிருவாக அமைப்புகள் சீரமைப்பிற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம். நிருவாக அமைப்புகள் சீராகவும், செம்மையாகவும் இருக்கின்ற மாநிலங்களுக்கு இது தேவையில்லை. சில இடங்களில் நிருவாக அமைப்பு, நிருவாகக் கட்டமைப்பு சரியில்லாத காரணத்தால் அதை ஒழுங்குபடுத்துவதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இதனால், நிருவாகக் கட்டமைப்புள்ள மாநிலங்கள் பாதிக்கப்படும், தேவையில்லாத செலவினங்கள் கூடும் என்பதால் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம். இருந்தாலும்கூட மத்திய அரசு வற்புறுத்தியதன் காரணமாக, வேறு வழியில்லாமல் அதை ஏற்றுக்கொண்டோம். ஏற்றுக்கொண்டதற்குப் பின்பும்கூட இன்றைக்கு TANGEDCO—Tamilnadu Generation and Distribution Corporation உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தை ஒரு கழகமாகவும் TANTRANSCO என இரண்டு கழகங்களாகவும் நாம் பிரித்திருக்கிறோம். காரணம் என்னவென்று சொன்னால், மூன்று கழகங்களாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை. சட்டத்தை ஏற்றுக்கொண்டு மூன்றாகப் பிரித்தால், இன்னும் நிருவாகச் செலவு அதிகமாகும். தேவையில்லாமல் நிருவாகச் செலவை அதிகரிக்க வேண்டாம் என்பதற்காகத்தான் இப்பொழுது இரண்டு கழகங்களாகப் பிரித்து, ஒரே நிருவாக அமைப்பின்கீழ் இயக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** நம் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய சில சாதாரண விஷயங்கள் செய்யப்படவேண்டும். 20-10-2011 மற்றும் 20-11-2012 ஆகிய இரு வருடங்களுக்கும் ஆண்டு அறிக்கையும், ஆடிட்டர் அறிக்கையும் இந்த மூன்று நிறுவனங்களிலுமே இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. சென்ற சி.கி.நி. அறிக்கையில் ஆடிட்டர் குறிப்பிட்ட 1,300 கோடி ரூபாய்க்கு மேல் தாக்கமுள்ள 28 முறைகேடுகள் T.N.E.B., TANGEDCO, TANTRANSCO இவற்றில் இன்னும் சீர் செய்யப்பட்ட எந்தத் தகவலும் இல்லை. இவையெல்லாம் செய்யாமல் இன்னும் 4,439 கோடி ரூபாய் மக்கள் பணத்தை இந்த நிறுவனங்களில் கொட்டுவது 'விழலுக்கு இறைத்த நீராகும்' என்பது எங்கள் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதை முழுமையாகப் புரிந்துகொண்டு பேசினால் நன்றாக இருக்கும். மின் துறை இன்னும் சீரமைக்கப்படவில்லை என்று சொன்னால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எந்த நிதி உதவியும் செய்யக்கூடாது என்று உறுப்பினர் சொல்கிறாரா? என்ன பொருள்படப் பேசுகிறார் என்பதே புரியவில்லை. அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். நிதி ஆதாரங்கள் கொடுத்ததை நீங்கள் எதிர்க்கிறீர்களா அல்லது ஆதரிக்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** நிதி ஆதாரம் கொடுப்பது தேவையற்றதாக ஆகும். எப்பொழுது ஆகும் என்றால், மத்திய அரசாங்கம் கொடுக்கவிருக்கிற 1.2 இலட்சம் கோடி ரூபாய் Debt Relief Scheme-ல் நாம் தகுதி பெற்று அதனை விரைவாகக் கொண்டு வந்தோமானால், அவர்கள் கொடுக்கிற Debt-ஐயே நாம் equity ஆக மாற்றலாம். அதிலே மறுபடியும் equity கொண்டுபோய் போட வேண்டியதில்லை என்பது எங்களுடைய கருத்து.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய நலன்தான் இங்கு பிரதானம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலைமையைச் சீரமைக்க வேண்டிய ஓர் இக்கட்டான நிலைமை இருப்பதன் காரணமாகத்தான்—மாண்புமிகு அம்மா அவர்கள் விரிவான பதிலை நாளைக்கு அளிக்க இருக்கிறார்கள். இந்த நிதி நிலைமையிலும் கடந்த தி.மு.க. ஆட்சியில்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலைமைப் பற்றிப் பேசினார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து கடந்த ஆட்சிக் காலத்திலே ஆட்சிக் காலம் முடிகின்றபோது, அதாவது 1991-லிருந்து 1996 வரை ஆட்சி முடிகின்றபோது, ஏறத்தாழ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இருந்த மொத்தக் கடன் ரூ.4,900 கோடிதான். தமிழ்நாடு மின்சார

வாரியத்திற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு. அதுகூட, தமிழ்நாடு மின்சார வாரியம் 1957-லிருந்து ஆரம்பிக்கப்பட்டு, அந்த 1957-லிருந்து 1996 வரை ஏற்பட்ட இழப்பு. அம்மா ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மொத்த கடன் இழப்பு அல்ல.

ஆனால் அதற்குப் பின்பு வந்த தி.மு.க. அரசு தன்னுடைய நிருவாகத் திறமையின்மையின் காரணமாகவும், பல்வேறு காரணங்களாலும்—இன்றைக்குச் சொன்னால் அது அரசியலாகிவிடும்—திறமையற்ற நிருவாகத்தின் காரணமாக, ஏறத்தாழ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 40,359 கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்திவிட்டது ஏறத்தாழ 4,900 கோடி ரூபாயாக இருந்த கடனை 40,000 கோடி ரூபாய் கடனாக உயர்த்திவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வாங்கிய பொருட்களுக்கு 10,000 கோடி ரூபாய்க்கு outstanding, பணமே பட்டுவாடா பண்ணவில்லை, வாங்கிய அந்தப் பொருட்களுக்கு. இன்றைக்கு அந்த 10,000 கோடி ரூபாயையும் பட்டுவாடா செய்யவேண்டிய பொறுப்பும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குத்தான் இருக்கிறது.

40,000 கோடி ரூபாய் இழப்போடு 10,000 கோடி ரூபாய்க்கு பொருட்கள் வாங்கியமைக்கு கட்டணத்தை நிலுவையில் வைத்துச் சென்றுவிட்டார்கள். இப்படிப்பட்ட நிதி நிலைமையில் அரசினுடைய உதவி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தேவைப்படுகிறது என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்ததன் காரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சீரமைப்பதற்காக சென்ற 2011-2012 ஆம் நிதியாண்டில் மட்டும் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாகவும், பங்கு மூலதனமாகவும், உதவி செய்வதற்கு ஏறத்தாழ 7,913 கோடி ரூபாயை அம்மா அவர்களின் அரசு வாரி வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அது மட்டுமல்ல, இன்னும் சொல்ல இருக்கிறேன். 2012-2013 ஆம் நிதியாண்டிற்கு ஏறத்தாழ 5,200 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பிலே மொத்தமாக குறுகிய காலக் கடனும்,



நடுத்தரக் காலக் கடனும் என தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட கடனில், 50 சதவிகித கடனை, தமிழ்நாடு மின்சார வாரியம் கட்ட வேண்டிய ஏறத்தாழ 9,529 கோடி ரூபாய் கடனை இன்றைக்கு அம்மா அவர்களினுடைய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இந்த நிதியாண்டில் கடன் 4,300 கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த 4,300 கோடி ரூபாய் கடனிலும் 30 சதவிகிதக் கடனை ஏறத்தாழ 1,294 கோடி ரூபாய் கடனை, அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்குகிறது. இப்படியெல்லாம் நிதியாதாரத்தை வழங்கியது மட்டுமல்லாமல், அம்மாவினுடைய அரசு Tamil Nadu Power Finance Corporation (PFC) நிறுவனம், REC நிறுவனம் போன்ற பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு மாநில அரசினுடைய உத்தரவாதம், guarantee கொடுப்பதன் மூலமாக ஏறத்தாழ 21,000 கோடி ரூபாய் புதிய கடன் வாங்குவதற்கு இன்றைக்கு அரசே உத்தரவாதமும் வழங்கியிருக்கிறது. அரசு guarantee இல்லாமல் நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதற்குத் தயாராக இல்லை. அதையும் இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு அந்த நிதியைப் பெறுவதற்கு guarantee வழங்கி நிதி நிலைமையைச் சீரமைப்பதற்காக இவ்வளவு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த 6,000 கோடி ரூபாயைக் கொடுத்தது ஏனென்று சொன்னால் புதிய திட்டங்களுக்கு நிதி தேவைப்படுகிறது. ஏற்கெனவே கடந்த தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட இழப்பைச் சீர்செய்வதற்கு நிதி தேவைப்படுகிறது. ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு மின்சார வாரியம் மீண்டும் வலுப்பெற, தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கையினால், தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகத்தான் இவ்வளவு நிதிகளையும் இன்றைக்குக் கிள்ளிக் கொடுத்தால் போதாது என்று அள்ளிக் கொடுக்கின்ற வள்ளலாக அம்மா அவர்கள் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைக் குறை சொல்லாதீர்கள். இது மக்களுக்குச் செய்கிற துரோகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டியராஜன், நிறைய விளக்கங்கள் சொல்லியாகிவிட்டது. ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது.

பிற்பகல் 12-55

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு அதிகம் செலவு செய்தும், வளர்ச்சித் திட்டங்களுக்கும், மக்கள் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்படும் செலவினங்கள் குறைக்கப்பட்டுக்கொண்டே செல்கின்றன. உதாரணத்திற்கு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு மானியக் கோரிக்கை 19, இனம் 2-ல் மானியத்தை ஒதுக்கி அறிவிக்கப்பட்ட 2.25 கோடி மூன்றாவது முறையாக அவையில் கொண்டுவரப்பட்டுள்ளது. இன்னும் நிறைவேறவில்லை.

அதுபோல, மானியம் 27, இனம் 2-ல் கூறப்பட்டுள்ள மதுரை-தூத்துக்குடி, கோவை-சேலம் Industrial Corridors-தொழில் பாதை மேம்பாட்டுத் திட்டங்கள் முன்சாத்தியக்கூறுக்கு இந்த வருடம் 18 மாதங்கள் கழித்து ரூபாய் 39 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. சென்ற பட்ஜெட்டில் ரூ.200 கோடி ஒதுக்கப்பட்ட திட்டங்கள் இவை. ஆனால், சாத்தியக்கூறுகூட establish செய்யாமல் எப்படி திட்டத்திற்குப் பணம் ஒதுக்கப்பட்டது? இந்த 18 மாதங்களில் ஒரு செங்கல்கூட எடுத்து வைக்கப்படவில்லை. மதுரை-தூத்துக்குடி Industrial Corridor பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, உறுப்பினர் புரிந்து பேசுகிறாரா, இல்லையா என்று தெரியவில்லை. ஒரு புதிய பணி ஆரம்பிக்கின்றோம் என்று சொன்னால், அதற்கு D.P.R. என்ற Detailed Project Report வாங்கி, அதற்குப் பின்னால்தான் அந்தத் திட்டத்தைத் தொடங்குவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தப் பணிக்காகத்தான் அந்தச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இன்னொன்று. நீங்கள் பேசுகின்றபொழுது மின் துறையைப் பற்றி சொன்னீர்கள். கடந்தகால மைனாரிட்டி அரசில் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 153 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்காக ஒரு திட்டத்தை வகுத்தார்கள். ஆனால், அந்தத் திட்டத்திற்கு உண்டான நிதியை ஒதுக்கவில்லை. அதுவும் சர்க்கரை நிதியிலிருந்து STF என்று சொல்லக்கூடிய 352 கோடி ரூபாயை வாங்காத



காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் தமிழகத்தினுடைய மின் தேவையை உணர்ந்து, உடனடியாக நம்முடைய அரசிலிருந்து ரூ.352 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள் என்றால், இதைப்போன்ற செலவுகள்தானேயொழிய, நீங்கள் நினைப்பதுபோல கூடுதல் இல்லை என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு பேசவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, சிவகாசி அரசு மருத்துவமனையில் உள்ள தீக்காயப் பிரிவை சிறப்பு மையமாக மேம்படுத்துவதற்கு ரூ.4.50 கோடி அனுமதிக்கப்பட்டிருந்தது. இதனுடைய அளவு குறைக்கப்பட்டிருக்கின்றது என்ற பொருள்பட இங்கே எடுத்துக் கூறினார்கள். அது தவறு. அதாவது, கட்டுமான செலவிற்காக ரூ.2.25 கோடி போக, நிகர தொகை மானியக் கோரிக்கை எண் 19, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூ.1,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சியத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும் என்றுதான் இருக்கின்றது. இதில் எந்தவித நிதியும் குறைக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதி 4.50 கோடி ரூபாய் உறுதியாக தீக்காய சிறப்புப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டு, அது செலவழிக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி மருத்துவமனையைப் பொறுத்தவரையில், 17 மாதங்களுக்கு முன்னால் சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்ட திட்டம். இந்த மே மாதம் மறுபடியும் underline செய்யப்பட்ட திட்டம். அதை Supplementary Budget-ல் நீங்கள் கேட்பது ஏன்

என்பதுதான் என் கேள்வி. ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் இதுமாதிரி தடைப்பட்டுக்கொண்டே போகின்றன.

இரண்டாவது, Industrial Corridor பற்றி நான் சொல்ல வேண்டியது என்னவென்றால், Pre-Investment Feasibility Report-க்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இது ஆரம்ப நிலை கட்டம். DPR 3-வது கட்டம். இப்போது DPR ரூ. 39 இலட்சத்திற்கு இரண்டு Corridor செய்யமாட்டார்கள். அந்த மாதிரி consultants நாட்டில் கிடையாது. தயவுசெய்து Pre-investment Feasibility ….

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையை உறுப்பினர் சரியாகப் படித்தீர்கள் என்றால், இரண்டு பணிகளுக்கும் இரண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆரம்ப கட்ட வேலைக்காகத்தான் அந்தப் பணிக்குண்டான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு மீண்டும், மீண்டும் அதைத் திருப்பிக் கேட்பது என்பது, வேண்டுமென்றே குற்றம் சொல்வதைப்போல இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள். (குறுக்கீடு) திரு. பாண்டியராஜன், நன்றி சொல்லிவிட்டு, உட்காருங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. 20 நிமிடங்களுக்குமேல் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நிறைய பேர் பேசவேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டு, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். Vision 2023 என்பது பெரிய விஷயம். If vision does not translate into meaningful Budgets it will only remain a pipedream. இது நிறைவேறாத கனவாக போகக்கூடாது என்ற ஆதங்கத்தில்தான் இதையெல்லாம் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷன் *2023* என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான திட்டத்தினை, நிறைவேறாத கனவு என்று இவர் இங்கே சொல்லிகொண்டிருக்கிறார். இந்தத் தொலைநோக்குத் திட்டத்தில் என்னென்ன அம்சங்கள், சிறப்புக் கூறுகள் உள்ளனவோ, அவற்றையெல்லாம் உறுதியாக *2023* ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றிக் காட்டுவார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.*

*பிற்பகல் 1-00*

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் அளித்த ஒரு கொடை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திராவிடத்தின் திருவிளக்கே! எங்களின் குல விளக்கே! தமிழகத்தின் புரட்சியே! எண்ணிலா மக்களின் எழுச்சித் தலைவியே! அரியணைக்கு ஓர் அரிமா நோக்கைத் தந்த எங்கள் தலைவியே! எடுத்திடும் செயலில் நேர்மை, எண்ணங்கள் யாவும் தூய்மையென நிற்கும் தலைமையே! வார்த்தைக்கு அர்த்தம் வழங்க அகராதி போதும். ஆனால், வாழும் வார்த்தைகளுக்கு என் அன்னையேதான் அகராதி! *(மேசையைத் தட்டும் ஒலி)*

என் திசைகளும் எட்டிப் பார்க்க நினைக்கும் எழுச்சித் தலைவியே! ஆசியாவே கொஞ்சம் தலை நிமிர்ந்து பார்க்க ஆவலாயிருக்கும் என் அன்னையின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். பூலோக வைகுந்தமாம் ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட்டு வாகை சூடி, மூன்றாவது முறையாக முதலமைச்சரான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை எனக்குத் தந்து, இந்தப் பேரவையில் தாக்கல் செய்த துணை நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பை வழங்கி, தலைகளை மட்டுமே எண்ணும் தலைவர்கள் வாழும் இந்தத் தமிழ் மண்ணில், ஏழை இதயங்களை மட்டுமே எண்ணும் எங்களுடைய அரசியல் கீதை, (மேசையைத்

தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டில் நூறாண்டுச் சாதனைகளை அளித்த அம்மாவின் ஆட்சி சாதுரியங்களை, அந்த அதிசயங்களை மக்கள் இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், தனது திட்டங்களைச் சோறாகவும், அரிசியாகவும், விதை நெல்லாகவும் கொண்டிருக்கும் அந்த ஆற்றலை, மாண்புமிகு அம்மா அவர்கள் இயற்கையிலேயே பெற்றிருக்கிறார்கள். சோறு இன்றைய தேவை; அரிசி நாளைய தேவை; விதை நெல் எதிர்காலத் தேவை என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் உணர்ந்திருப்பதால்தான், தன்னை நம்பிய மக்களுக்கு ஒரு தாயாய் நின்று, நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமாய் நல்ல பல திட்டங்களை இந்த நாட்டுக்கு அளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போலத்தான் இருக்கிறது இந்தத் துணை நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், அது மிகையல்ல. எங்கள் தலைவியை மனதில் இருத்தித்தான்,

> 'தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழருக்குத்
> தடை செய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!'

என்று பாரதிதாசன் பாடினாரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சாதனைகளோடு, சாதனைகள் மாலையாய்ச் சேருகிறது. அப்படி வரவிருப்பதுதான் இந்தப் பேரவைக்கான ஒரு வைர விழா! ஆங்கிலப் புத்தாண்டு வரும் முன்பே, மக்கள் நாள்காட்டி பற்றிப் பேசுவதுபோல, தமிழ்ப் புத்தாண்டு வரும் முன்பே மக்கள் பஞ்சாங்கத்தைப்பற்றிப் பேசுவதுபோல, வைர விழா வரும் முன்பே, நான் வைர விழாவைப்பற்றிப் பேசுவதில் ஆச்சரியமில்லை.

சட்டமன்ற வரலாற்றில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலப் பெட்டகமாக வருகிறது இந்த வைர விழா! இந்தப் பூமியே என் அன்னையை அன்று வரலாற்றுத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடும். 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற குறளுக்கு முகத்துவாரமாய் விளங்கும் என் அன்னைக்கு,



அன்று எண் திசையெங்கும் பாராட்டு குவியப் போகிறது. அவர் தொட்ட துறைக்கு அழகு வரும்; அவர் தொடாத துறைக்கு அழுகை வரும்! அப்படிப்பட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கருக்கல் பொழுதிலிருந்து, காரிருள் பொழுது வரை, அவரது கருணை மனம் சுருங்கியதில்லை.

இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலும் எத்தனை அறிவிப்புகள்? தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அதன் நிதி மேலாண்மையை மேம்படுத்த உதவும் பொருட்டு, இந்த நிதியாண்டில், தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக ரூபாய் ஆயிரம் கோடி வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைக்கிணங்க, 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட உதவி மானியங்களுடன், கூடுதலாகத் தேவைப்படும் ரூபாய் 1,086.25 கோடியையும் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின்கீழ் இப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தவிர, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசின் பொருட்டு, இந்த ஆண்டு வழங்க வேண்டிய ரூபாய் 2,000 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்தில் ரூபாய் 18.10 கோடி செலவினத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கும், 68.17 கோடி ரூபாய் செலவில் பொன்னேரி மற்றும் நாகப்பட்டினத்தில் மீன்வளத் தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவுவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றை நிறுவுவதற்கு முறையே ரூபாய் 8 கோடி, ரூபாய் 14 கோடி ஒப்பளிப்பாக துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. தீரமிக்க தீயணைப்பு வீரர்களுக்கு 1,980 ஜோடி தற்பாதுகாப்புச் சாதனங்கள் வாங்கி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ரூபாய் 28 கோடி ஒப்பளித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூபாய் 8 கோடி, இச்செலவினங்களுக்காக, இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. காவலர் மற்றும் தீயணைப்புப் படையினருக்குச் சொந்தமாக வீடு வழங்கும் 'உங்கள்

சொந்த இல்லம் திட்டம்' என்றொரு திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்கள் திருக்கரங்களால் அண்மையில் தொடங்கி வைத்ததை இந்த நாடே அறியும். இவை தவிர, தெரிவு செய்யப்பட்ட 31 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 42 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ரூ.19.44 கோடி அனுமதித்துள்ளது.

பிற்பகல் 1-05

காவல் துறையின் ஒரு துணைப் படையாக, 'தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை' என்னும் படை ஒன்றினை அமைக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டத்தை, விதி 110-ன்கீழ், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதன்மூலம் தேவைக்கேற்ப நியமனம் செய்து, சுமார் 50,000 குடும்பங்களில் ஒளிவிளக்கேற்றப்போகிற நம் அன்னையை நாடு வாழ்த்திக் கொண்டிருக்கிறது. இப்படித் திட்டங்களை ஆராய்ந்து அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், அதைச் செயல்படுத்துவதில்தான் அதன் வெற்றியே இருக்கிறது என்பதை உணர்ந்தவர் நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட "சூரிய சக்திக் கொள்கை-2012"-ன்முன், எந்த வெளிச்சமும் மின்மினி வெளிச்சங்களே! கடந்த ஆட்சியால் ஏற்படுத்தப்பட்ட மின்வெட்டை சமாளிக்க, டில்லி மாநிலமானது மத்திய அரசுக்குத் திரும்ப ஒப்படைக்கவுள்ள மின்சாரத்தை தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென, அதற்குத் தடையாகவுள்ள மத்திய அரசை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். ஒரு மாநில அரசு, மக்களின் பிரச்சினைக்காக, அதற்குக் குறுக்கே நிற்கும் மத்திய அரசை எதிர்த்து, இன்றைக்கு இந்த நாட்டின் மிகப் பெரிய, உயரிய நீதிமன்றத்தின் வாசலைத் தட்டியிருக்கிறது. அதைத் தாங்கமாட்டாமல், ஒருவர் நையாண்டி தர்பார் செய்கிறார். "வழக்கு எப்ப முடியுமோ? மின்சாரம் எப்ப வருமோ?" என்கிறார். ஐந்து முறை ஆட்சிக் கட்டிலில் வெண்சாமரம் வீசிக் கொண்டிருந்தவர், இப்படி ஒரு வினாவை வீசுகிறார்! சுமார் 14 ஆண்டுகளாய் மத்திய அரசில் ஒரு 'பெவிகால்' ஆக இருந்த, இருந்தும் வருகின்ற ஒரு பெரியவரின் பெரிய கேள்வி இது! குடும்பத்தின் மேலிருக்கும் ஒரு தொலைநோக்குப் பார்வையை, இந்த நாட்டின்மீது செலுத்தியிருந்தால், இந்தக் கேள்வி பிறந்திருக்குமா? அவரது பேனாவும் அதன் மையை இழந்திருக்குமா? தன்மை இழந்தவர்களால் வரும் தவிட்டு வாதம் இது! மின்சாரம் பெறச் சரியான மின் தடங்கள் அவர்கள் ஆட்சியில் அமைத்திருந்தால், இந்தக் கேடு வந்திருக்குமா? இதைத்தானே மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர் வினாவாய் கேட்கிறார்? இப்படியெல்லாம் இவர்களின் தகிடுதத்தங்களைத் தகர டப்பாவாக ஆக்குவதால்தான், மாண்புமிகு அம்மா அவர்களின் கேள்விக் கணைகளை எதிர்கொள்ள முடியாத சில கரை சேராத கட்சிகள் இன்று ஒப்பாரி வைக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)



மாடிப் படியின் மேல் ஏறி ஓடுவது, மக்களை நிந்தனை செய்வது இந்த இரண்டுமே இதயத்திற்குக் கெடுதி! 'He who knows how to serve knows how to rule' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. அதாவது, எப்படி ஊழியம் செய்வது என அறிந்தவனுக்கு, எப்படி ஆள்வது என்பதும் தெரியும் என்பது அதன் பொருள். இதை அறிந்தவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அன்னையே! நெருப்பு வளையத்துள் பஞ்சுப் பொதியாய் விளங்கிய உங்களின் கடந்த காலப் போராட்டங்கள், எனது கருவிழியில் பாவையாய் உள்ளன. அந்தப் பாவை வழியாய்த்தான் இந்தப் பாரினைப் பார்க்கிற கொடுப்பனை எனக்கு! 'மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்' என்பது உலக நீதி! அந்த நீதியை நாம் பள்ளிக்கூடத்திலேயே படித்து இருக்கிறோம். ஆனால், அந்த உலக நீதியை இன்று சிலர் மறந்து போனார்கள். அதனால்தான், அதைப் பொறுக்கமாட்டாமல், நல்லவர்கள் இப்போது வெளியே வந்திருக்கிறார்கள். தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் குறைகளைப் போக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை அவர்கள் சந்தித்திருக்கிறார்கள். அதுவும் தொகுதி நலனுக்கான ஒரு சந்திப்பு! அதை ஏகடியம் பேசி, அவர்களுடைய தலைவர் சார்பிலே தனது தொகுதி குறித்து அம்மா அவர்களிடம் பேச வேண்டுமென ஒரு மனு கொடுத்திருக்கிறார். ஒரு எதிர்க்கட்சித் தலைவர், தைரியமிருந்தால், வீரமிருந்தால், நெஞ்சிலே திராணியிருந்தால் இந்தச்

[திரு. ஆர். மனோகரன்] [2012 அக்டோபர் 31

சட்டமன்றத்திற்கு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றம் நடக்கின்றபோது மக்கள் பிரச்சினைகளை, தொகுதிப் பிரச்சினைகளை அவர் பேசுவதற்கு வாய்ப்புகள் இருந்தும், சட்டமன்றத்திற்கு வராமல், இன்றைக்கு மக்களை ஏமாற்றுகின்ற ஒரு நாடகத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து, 'இந்த நாடகம் நீண்ட நாளைக்கு நிலைக்காது' என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஏதோ வேலைக்கு அப்ளிகேஷன் போடுவது போல, ஒரு அப்ளிகேஷன் போடுகிறார்கள். திருந்தியவர்களைக் கண்டு ஆசீர்வதிக்க வேண்டும். அப்படி ஆசீர்வதிக்காமல் சிலர் சபிக்கிறார்கள். சொல்லப்போனால், சிங்காரச் சீப்பு வாங்கியவர்களுக்கு, அதைக் கொண்டு சீவவும் நேரமில்லை, அப்படியிருக்கிறது அவர்களின் தலையில் ஈரும், பேனும்! சந்திப் பிழைகளைப் பற்றி இவர்கள் சிந்திக்கிறார்கள். இவற்றைப் பின்னர் திருத்திக் கொள்ளலாம். இப்போது சரித்திரம்தான் முக்கியம். கோபுரத்தில் ஏறுவதாய் நினைத்துக் கொண்டு, வாழை மரத்தில் வழுக்கிக் கொண்டிருக்கிறார்கள். கரையில் உலர்ந்து கருவாடான பின், நதி மீன்களுடன் இவர்கள் விளையாட நினைக்கிறார்கள். பொதுப் பணி நாளும் ஆற்றி, சித்திரை நிலவாய் நின்று, இத்தரை ஒளிரச் செய்யும் பத்தரை மாற்றுத் தலைவி எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் நல்லாட்சியில் என் தொகுதியின் சார்பில் ஒரு சின்னஞ்சிறு கோரிக்கை.

முடியாததையும் முடித்துக் காட்டும் வல்லமை வாய்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சுகப் பிரசவ பிரார்த்தனைத் தலமாகவும், ஒரு சுற்றுலா மையமாகவும், 271 அடி உயரத்திலுள்ளது திருச்சி மலைக் கோட்டை. இங்கே அருள்மிகு உச்சிப் பிள்ளையார் அமைந்துள்ளார். இந்த மலைக் கோயிலுக்கு வருகின்ற முதியோர்கள், இயலாதவர்கள் உள்பட எல்லோரும் எளிதாகச் சென்று வர, ஒரு கம்பிவட ஊர்தித் திட்டத்தை—Passenger Ropeway System அதாவது நீண்ட கால ஆய்விலிருக்கும் ஒரு திட்டத்தை, சீராய்ந்து, தங்களின் பொற்கால ஆட்சியில் இச்சிறப்பு அக்கோயிலுக்குக் கிடைத்திட, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென பரிவோடு கேட்டுக்கொள்கிறேன். பக்தர்கள் நெஞ்சம் குளிர, எங்கள் தாய் இதை நிறைவேற்றித் தர வேண்டுமென மீண்டும் வேண்டுகிறேன்.



2012 அக்டோபர் 31]

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மனோகரன், உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** செங்கோல் நிமிர, தானும் நிமிர தன்மானத் தங்கமாய், தலைதாழாச் சிங்கமாய், தமிழகத் தலைவியாய், இந்தியப் புரட்சியாய் இன்றைக்கும் விளங்கும் எங்கள் தலைவியை மீண்டும் வணங்கி, இத்துணை நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைச் சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு தொடர்ந்து மக்களைத் தாக்குவதற்கான அடுக்கடுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிறு வணிகத்தில் பன்னாட்டு கம்பெனிகளுக்கு அனுமதி, சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்குக் கட்டுப்பாடு, பென்ஷன் திட்டத்திலே அன்னிய நேரடி முதலீடு போன்ற பலவிதமான தாக்குதல்களை மத்திய அரசு தொடுத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், அதனால் இன்றைக்கு நாடு முழுவதும் மக்கள் அவதிப்படுகின்றபோது, அத்தகைய வேதனையிலும், வறுமையிலும் தமிழக மக்களும் ஆட்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, மத்திய அரசின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து நாடு முழுவதும் ஓங்கி வருகிற எதிர்ப்புக் குரலோடு நம்முடைய குரலையும் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை இங்கே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சிறு வணிகத்தில் அன்னிய முதலீடு, பன்னாட்டுக் கம்பெனிகள் இந்தியாவிற்கு வர அனுமதி வழங்கியிருக்கிறபோது, தமிழகத்திலே அப்படி பன்னாட்டுக் கம்பெனிகளை அனுமதிக்கமாட்டோம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவித்திருப்பதை இந்த

நேரத்திலே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வெறும் அறிவிப்பாக மட்டும் இல்லாமல், மத்திய அரசாங்கத்தினுடைய இந்த நடவடிக்கைகளை எதிர்க்கும்வகையில் தமிழக சட்டமன்றத்திலே தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு வலுவான எதிர்ப்புக் குரலைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கரும்பு விவசாயத்தையும், சர்க்கரைத் தொழிலையும் நாசப்படுத்தக்கூடிய முறையில் ரங்கராஜன் கமிட்டியினுடைய அறிக்கை மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை அமலாகும் என்று சொன்னால் தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலே கரும்புத் தொழிலும், சர்க்கரைத் தொழிலும் அழிந்துபோகின்ற ஆபத்து ஏற்படும். எனவே, அதையும் தமிழக அரசின் சார்பில் நிராகரிக்க வேண்டுமென்று, நம்முடைய அரசு கண்டனக் குரலை எழுப்ப வேண்டுமென்றும் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டப் பேரவையினுடைய வைர விழாவினை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப் பேரவையில் ஓர் அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிலே எந்த மொழியிலும் இல்லாத ஒரு டிஜிட்டல் லைப்ரரியை தமிழிலே உருவாக்க வேண்டுமென்று 27-9-2005 அன்று தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையிலே தீர்மானத்தை உருவாக்கினார்கள். அதற்குப் பிறகு ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் பின்னாலே வந்த அரசு அதைக் கிடப்பிலே போட்டுவிட்டது. உலகம் முழுவதும் இருக்கிற தமிழ் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் அறிவிக்கப்பட்ட அந்த டிஜிட்டல் லைப்ரரியை இந்த வைர விழா கொண்டாட்டத்தின்போது நம்முடைய முதலமைச்சர் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மின்வெட்டு சம்பந்தமாக ஏற்கெனவே இங்கே நிறைய விவாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிறைய விளக்கங்களையெல்லாம் இங்கே அளித்திருக்கிறார்கள். சொல்லப்போனால், இந்த மின்வெட்டு தமிழகத்தை எவ்வளவு பாதித்திருக்கிறது, அனைவருக்கும் கவலை அளிக்கிற விஷயமாக இருக்கிறது என்பதை நாம் அனைவரும்



அறிவோம். எனவே, இன்றைக்கு திரும்பிப் பார்க்கிறபோது, 1996 ஆம் ஆண்டு நம்முடைய நிறுவுதிறன் 6,908 மெகா வாட். 2012-லே 10,354 மெகா வாட்டாக நிறுவுதிறன் உருவாக்கப்பட்டிருக்கிறது. சற்றேறக்குறைய 16 ஆண்டுகளில் நாம் கூடுதலாக உருவாக்கி இருக்கிற நிறுவுதிறன் என்பது 3,446 மெகா வாட் மட்டுமே என்பதுதான் இன்றைக்குப் பிரச்சினைக்கு அடிப்படை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆண்டுக்கு சராசரி 500 மெகா வாட்டுக்கு செலவு அதிகரிக்கிறபோது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்களோ அப்பொழுதெல்லாம் மின்சார உற்பத்தியிலே கவனம் செலுத்தி தேவையான அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்குப் பின்பு வந்த தி.மு.க. ஆட்சி இதிலே அக்கறை எடுத்துக் கொள்ளாததன் விளைவாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சென்ற ஆட்சிக் காலத்திலே 2,512 மெகா வாட் அளவிற்கு மின்சார உற்பத்தி நிறுவுதிறன் உருவாக்கப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சியிலே வெறும் 206 மெகா வாட்தான் உற்பத்தி செய்யப்பட்டது. ஆகவே, இந்தப் பிரச்சினை இன்றைக்கு ஏற்பட்டு இருப்பதற்கு காரணத்தைப் பற்றி பொதுப்படையாக நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடாது. குறிப்பாக, அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 2,512 மெகா வாட் உற்பத்தி செய்திருக்கின்ற நிலையிலே, வெறும் 206 மெகா வாட் உற்பத்தி செய்த தி.மு.க. அரசுதான் இந்த மின்வெட்டுக்குப் பொறுப்பேற்க வேண்டுமே தவிர, பொதுப்படையாக இதிலே நீங்கள் சொல்வது சரியான வாதமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லி விடுகிறேன். உங்களுக்குப் பயன்படும் என்று கருதுகிறேன். ஒருவேளை தி.மு.க. ஆட்சி இந்த

அளவிற்கு மின்சாரப் பிரச்சினையில் அக்கறை எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் கடந்த தி.மு.க. ஆட்சியிலே அன்றைக்கு இருந்த மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இந்தத் துறையை தனியார் துறையாக மாற்ற வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டார். அவரே ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார். அதற்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் விளைவாக அதிலே அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார். ஆகவே, ஒருவேளை இந்தப் பொதுத் துறை நிறுவனத்தை மெல்ல மெல்ல சீரழித்து அது நலிவடைந்து விட்டால் தனியாரிடம் தாரைவார்த்துக் கொடுத்து விடலாம் என்ற எண்ணத்தோடுகூட, அவர்கள் இதிலே கவனம் செலுத்தாமல் இருந்திருக்கலாம். அதற்கு வேண்டுமானால் நான் ஆதாரமும் தருகிறேன். இங்கே தனியாருக்கு வழங்க முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஒப்புதல் வழங்கியது இந்தச் சட்டமன்றக் குறிப்பேட்டிலே இருக்கிறது. 1998-ல் தொகுதி 61, பக்கம் 122-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் சொல்கிறார்.

"இந்தியாவிலேயே பொதுவாக மாநில அரசாங்கங்கள் மத்தியிலே மின்சார வாரியம் இலாபகரமாகச் செயல்பட வேண்டுமானால் Distribution, Generation, Transmission இவை எல்லாம் தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இப்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இன்று மராட்டியத்திலே, மேற்கு வங்கத்திலே விநியோகம் தனியாரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல இங்கேயும் ஒப்படைக்க முடியுமா என்று நாங்கள் யோசித்தோம். யார் சொல்வது? ஆற்காடு வீராசாமி அவர்கள். "அதற்கு தொழிற்சங்கங்கள் கொஞ்சம் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. அவர்களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய ஒப்புதல் பெற்று எந்த அளவிற்கு, Distribution, Generation-ஐ மட்டும் தனியாருக்குக் கொடுக்க முடியும் என்பதை இந்த அரசு பரிசீலிக்கிறது. Transmission-ஐப் பொறுத்தவரையில் மின்சார இலாகாவே அதை நடத்துவது என்று முடிவு செய்திருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பேசியிருக்கிறார். ஒருவேளை இந்த மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனத்தைத் தனியாரிடம் தாரை வார்த்துக் கொடுப்பதற்காக இதிலே அவர்கள் கவனம் செலுத்தாமல் இருந்திருக்கலாம். ஆனால்,



இன்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். புள்ளிவிவரங்களுடன் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினைக்கு எந்தவிதத்திலும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எள் அளவல்ல, எள் முனையளவுகூட பொறுப்பில்லை என்பதை மீண்டும் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். நான் இங்கு குறிப்பிட விரும்புவது 16 ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சியும், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியும் உற்பத்திக்கு திட்டமிட்டிருந்தார்கள் என்பது உண்மை. ஒப்புநோக்கின் தி.மு.க. ஆட்சி போதுமான அளவிற்குத் திட்டமிடவில்லை என்ற உண்மையும் இருக்கிறது. ஆனால், ஒட்டுமொத்தமாக 16 ஆண்டுகளில் 3,446 மெகா வாட் மின்சாரம்தான் கூடுதல் நிறுவுதிறன் வந்திருக்கிறது என்று சொல்கிறபோது, 16 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு 500 மெகா வாட் திட்டமிருந்தால்கூட 8,000 மெகா வாட்டுக்கு திட்டமிட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட திட்டமிடுதலிலே குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத்தான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அடுத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 2013 ஆம் ஆண்டிலே நம்முடைய நிலைமை .......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்த அளவிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற ஆட்சிக் காலத்திலே மட்டும் மொத்தம் 2,512 மெகா வாட்டும், அதற்கு முந்தைய நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏறக்குறைய 1,302 மெகா வாட்டும் அன்றைக்கு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது; ஆக மொத்தம் 3,810 மெகா வாட். இதிலே நீங்கள் சொல்கின்ற அளவிலே புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அன்றைய தேவைக்குத் தகுதியாக மின் உற்பத்தி இருந்தது என்பதை உங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழகத்தின் மின் தேவை சரியாகிவிடும் என்கிற விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஓராண்டு காலத்திற்கு, இந்த அளவிற்குக் கடுமையாக இல்லாவிட்டாலும்கூட மின்வெட்டு, மின் பற்றாக்குறையால் தொடர்ந்து சிரமங்கள் நீடிக்கிற அந்தக் கவலையளிக்கிற நிலையென்பது இருப்பதை அவர்களும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நான் இங்கே வற்புறுத்த விரும்புவதெல்லாம், நம்முடைய உற்பத்தியை அதிகப்படுத்துகிற அதேநேரத்தில், கிடைக்கக்கூடிய மின்சாரத்தை வைத்துக்கொண்டு மாற்று ஏற்பாடுகள் மூலமாக இந்த ஓராண்டிற்கு தமிழக அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் சில நிவாரணங்களை— மின் வெட்டின் கடுமையான பாதிப்பிலிருந்து மக்களுக்கு நிவாரணத்தை கொடுக்க முடியும், அவர்களை நெருக்கடியிலிருந்து விடுவிக்க முடியும் என்கிற அடிப்படையிலே யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக சுமார் 7,500 மெகா வாட் மின்சாரம் தமிழகத்திலே கிடைக்கிறது என்று சொன்னால், அதிலே 2,500 மெகா வாட் மின்சாரம் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. வீடுகளுக்கு மட்டும் என்று பார்த்தால், சற்றேறக்குறைய 500 மெகா வாட் மின்சாரம் வீடுகளுக்கு போனால்கூட 2,000 மெகா வாட் மின்சாரம் இங்கே இருக்கிற தொழிற்சாலைகள், மற்றவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மொத்தத் தமிழகமே இன்றைக்கு மின்சார வெட்டினால், சிறு தொழில்கள் பெரு ஆலைகள் எல்லாம் முடங்கிக் கிடக்கிற சூழ்நிலையில், நாங்கள் இங்கே வற்புறுத்துவது என்னவென்று சொன்னால், 500 மெகா வாட் மின்சாரம் சென்னையைச் சுற்றியுள்ள வீடுகளுக்குப் போக மீதம் உள்ள மின்சாரத்தை



சமநிலை மின் விநியோகம் என்ற நிலையை கடைப்பிடிப்பார்களேயானால் தமிழகம் முழுவதும் உள்ள மக்களுக்கு இந்த மின்வெட்டிலிருந்து சற்று கடுமையைக் குறைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக இன்றைக்கு மத்திய அரசு நமக்கு வழங்க வேண்டிய மின்சாரம் 2,676 மெகா வாட்; முறைப்படி அவர்கள் வழங்க வேண்டும். ஆனால், 1,800, 1,816 மெகா வாட்தான் நேற்று வரை வழங்கியிருக்கிறார்கள். வடமாநிலங்களிலிருந்து மின்சாரத்தை வாங்க, மின்பாதை அமைத்து ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்பதும் தமிழகத்தை வஞ்சிக்கிறார்கள் என்பதும் நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். ஆனால் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிற 2,676 மெகா வாட் மின்சாரத்தை கட்டாயப்படுத்தி மத்திய அரசிடமிருந்து வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, இன்றைக்கு ஜெனரேட்டரை வைத்திருப்பவர்கள் சற்றேறக்குறைய 3,500 மெகா வாட் அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். எனவே தமிழக அரசுக்கு நிதி நெருக்கடி என்பது வாஸ்தவம்தான். ஆனால் கடுமையான மின்வெட்டிலிருந்து அந்த மக்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் ஜெனரேட்டர் வைத்திருப்பவர்களுக்கு மானிய விலையில் டீசலை வழங்குவதன்மூலம், இந்த மின் பற்றாக்குறையை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மத்திய அரசு வழங்க வேண்டிய மின்சாரத்தை வழங்குவதற்கு அம்மாவின் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒருமுறை அல்ல, பலமுறை மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறார்கள். கொடுக்க வேண்டிய மின்சாரத்தை கொடுப்பதோடு அல்லாமல், கூடுதலாக 1,000 மெகா வாட் மின்சாரம் தற்காலிகமாக ஒதுக்கும்படி கேட்டார்கள். ஆனால் அவர்கள் 100 மெகா வாட் மின்சாரம் தருகிறார்கள். எல்லாம் விரிவாகச் சொன்ன பின்பும், நமது அரசு, மத்திய அரசு நமக்கு

வழங்க வேண்டிய மின்சாரத்தைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்காததுபோன்ற தோற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, டெல்லி மாநில அரசு அங்கே திரும்ப ஒப்படைத்துள்ள 1,721 மெகா வாட் மின்சாரத்தை தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று அம்மா அவர்கள் கேட்டு, அதற்கும், மத்திய அரசு செவி மடுக்காததன் விளைவாக இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கும் அளவிற்கு அம்மா அவர்கள் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இந்தியாவில் எந்த முதலமைச்சரும் செய்யாத அளவிற்கு துணிவோடும், ஆளுமைத் திறமையோடும், மத்திய அரசை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்று வழக்குத் தொடுத்து மின்சாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கிறது என்று சொன்னால், எந்த அளவிற்கு மின்சாரத்தைப் பெறுவதற்கு அக்கறையுள்ள அரசு அம்மாவின் அரசு என்பதை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே வற்புறுத்த விரும்புவது, கிடைக்கிற மின்சாரத்தை சமநிலையில் பகிர்ந்து கொடுத்து, ஜெனரேட்டர்களுக்கு மானிய விலையில் டீசல் கொடுக்கவேண்டும். கிராமங்களிலே இப்போது மின்சாரம் இல்லாததால் குடிநீருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே கிராமங்களுக்கு, ஊராட்சி மன்றங்களிலே ஜெனரேட்டர் வாங்கிக்கொள்ள அனுமதிப்பது போன்ற இடைக்கால நடவடிக்கைகள் மூலம் மின்வெட்டின் கடுமையைப் போக்குவதற்கு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ‘தானே’



புயலால் மக்கள் பாதிக்கப்பட்டபோதே பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உடனடியாக நீர் வழங்க வேண்டும் என்பதற்காக— மின்சாரம் தடைபட்ட காரணத்தினால் ஜெனரேட்டர்கள் வாங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்கள். அதைத் தொடர்ந்து எதிர்காலத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் மக்களுக்கு வரக்கூடாது என்பதற்காக, தமிழகம் முழுவதிலும் உள்ள பஞ்சாயத்துகளிலும், ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், ஜெனரேட்டர்கள் வாங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு வாங்கப்பட்டு, மின்சாரம் இல்லையென்று சொன்னாலும் ஜெனரேட்டர்கள் மூலமாக நிறைவான குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெங்கு காய்ச்சல் என்பது தமிழகத்திலே மோசமான பாதிப்பை உருவாக்கியிருக்கின்றது. நம்முடைய அரசு தலைமை மருத்துவமனைகளிலேகூட இந்த டெங்கு காய்ச்சலுக்குத் தேவையான, இரத்த தட்டணுக்களை எடுத்து வழங்கக்கூடிய, சோதனை செய்வதற்கான ஏற்பாடுகள் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, அந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். கொசுவை ஒழிக்கக்கூடிய நடவடிக்கைகளில் அரசு முனைப்பாகச் செயல்படவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். டெங்கு காய்ச்சலால் இறந்தவர்களுக்கு அரசு நிவாரணம் கொடுக்க வேண்டும். பாம்பு கடித்தால் அவர்களுக்கு நஷ்ட ஈடு உண்டு. கொசு கடித்து டெங்கு காய்ச்சலால் இறப்பவர்களுக்கு நஷ்ட ஈடு இல்லை என்று சொல்வது பொருத்தமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது. இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச உள்ளார்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உட்காருங்கள்.

(குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவது தொடர்பாக 23-5-2012 அன்றும், 10-10-2012, 15-10-2012 ஆகிய தினங்களிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன. அந்த ஆய்வுக் கூட்டங்களில் டெங்கு காய்ச்சலுக்கு காரணமாக விளங்கும் கொசுக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளவும், இந்த நோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், பொது இடங்களில் கொசுக்களைக் குறைத்து அதன்மூலம் ஏற்படும் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வகையில் புகை மருந்துமூலம் கொசுக்களை அழிப்பதற்கான வழிமுறைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுமட்டுமல்லாமல் பருவமாற்றம் காரணமாக பூச்சிகள் மற்றும் நீர்மூலம் பரவும் நோய்கள் வராமல் தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுப்புற சுகாதாரத்தை பேணிப் பாதுகாப்பது, வீடுகளில் மழைநீர் தேங்காதவண்ணம் பாதுகாத்துக்கொள்வது, குடிநீரை காய்ச்சிப் பருகுவது, நீர் தங்கியிருக்கும் பாத்திரங்களில் கொசுக்கள் புகாதவண்ணம் மூடிவைத்துப் பாதுகாத்தல், காய்ச்சலுக்கான அறிகுறிகள் ஏற்பட்டால் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது அரசு மருத்துவமனைகளை அணுகி சிசிச்சை பெறுதல் போன்ற பல்வேறு விழிப்புணர்வுப் பணிகளும், நடவடிக்கைகளும் அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் கொசு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஏற்கெனவே 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காய்ச்சல் நிலைமை நாள்தோறும் கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மொத்த மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு மக்களுக்கு காய்ச்சல் ஏற்படுவது என்பது ஒரு வழக்கமான நிகழ்வாகும். மழைக்காலங்களில் இந்த அளவு இரண்டு விழுக்காடு அதிகரிக்கக்கூடும். இவ்வாறு வரும்



காய்ச்சல் அனைத்தையும் டெங்கு காய்ச்சல் என்று கருதமுடியாது. அனைத்து மருத்துவமனைகளிலும் எலிசா இரத்தப் பரிசோதனை மூலமாக டெங்கு காய்ச்சலை உறுதிசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், விரைவு இரத்தப் பரிசோதனை மூலமாக டெங்கு காய்ச்சலை உறுதிப்படுத்த இயலாது என்பது தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சல் ஓர் உயிர்க்கொல்லி நோய் அல்ல. மேலும், ஒருவரிடமிருந்து மற்றவருக்கு நேரடியாகப் பரவும் தொற்று நோயும் அல்ல. டெங்கு காய்ச்சலைப் பரப்பும் கொசுக்கள் நமது வீட்டிலும், சுற்றுப்புறத்திலும் உள்ள உபயோகமற்ற பொருட்களில் தேங்கியுள்ள நீரின்மூலம் உற்பத்தியாகின்றன. தகுந்த நேரத்தில் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை அளித்தால் இறப்பினைத் தவிர்க்க இயலும். கொசுக்களின் உற்பத்தியினை ஒழித்தால்தான் நோயினைக் கட்டுப்படுத்த இயலும். தற்போது தமிழக அரசின் தீவிர முயற்சியால் டெங்கு காய்ச்சல் நோயின் நிகழ்வுகள் தமிழகத்தில் படிப்படியாகக் குறைந்து வருகின்றன. இன்றைய நிலவரப்படி, நாள் ஒன்றுக்கு 50-லிருந்து 90 நபர்கள் சராசரியாக தமிழகமெங்கும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வருகிறார்கள். ஏற்கெனவே மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் அதற்குரிய சிகிச்சையினைப் பெற்று பூரண குணமடைந்து படிப்படியாக திரும்பிச் செல்கிறார்கள். மேலும், தீவிர டெங்கு காய்ச்சலுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சையளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, டெங்கு காய்ச்சல் குறித்து பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை என்பதையும், அதைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) 2 நிமிடம் கிடையாது. நன்றி சொல்லி முடியுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கரும்புக்கும் நெல்லுக்கும் இன்னும் விலை அறிவிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் புது சப்ஜெக்டிற்குப் போகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

***திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டின் முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலங்களில்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்கள் தீட்டப்பட்டு மக்கள் முழுவதும் பயனடைகிறார்கள். அம்மாவின் ஆட்சிக் காலங்களில்தான் மக்கள் நிம்மதியாக இருக்க முடிகிறது. அம்மாவின் ஆட்சியில் மட்டும்தான் பொதுமக்கள் நிம்மதியாக இருக்கின்றார்கள். புரட்சித் தலைவர் ஆட்சிக் காலங்களிலும், அம்மாவின் ஆட்சிக் காலங்களிலும் மட்டும்தான் சட்டத்தின் ஆட்சி நடக்கின்றது. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் தவறு செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மக்களின் குறைகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மக்கள் தங்கள் இதயங்களில் வைத்துக்கொண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் ஆட்சியைப் பற்றி பேசினால் பேசிக்கொண்டே இருக்கலாம். எழுதினால் எழுதிக்கொண்டே இருக்கலாம். இன்றைய தமிழக அரசியல் தலைவர்களில் நம் இதய தெய்வம் அம்மாவைப் போல பல மொழிகள் பேசத் தெரிந்தவர் யாரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டவர் எங்கள் அன்னை. அம்மா அவர்களை நம்பியவர்கள் யாரும் கெட்டதில்லை. அம்மாவை நம்பாமல் கெட்டவர்கள் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)



துரோகிகளை மன்னிக்கும் மனப்பாங்கு கொண்டவர் எங்கள் தாய். அம்மா அவர்களை வீழ்த்த நினைத்தவர்கள் எல்லாம் வீழ்ந்துபோனார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு அரசியலில் முகவரி தந்தவர் நீங்கள்தான் அம்மா. எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருக்கின்ற எங்கள் அன்னையே, உங்களால்தான் எங்களுக்குப் பெருமை அம்மா. உங்கள் காலத்தில் நாங்கள் வாழ்கிறோம் என்பதே எங்களுக்கு கிடைத்த பெரும் பேறாகும். 100 ஆண்டுகள் சாதனைகளை ஓராண்டில் நிறைவேற்றி தமிழக மக்களுக்கு ஏற்றம் தந்த எங்கள் தாயே; இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ தொலைநோக்குத் திட்டங்களைத் தந்து மற்ற மாநிலங்களை தமிழகத்தின் பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்த எங்கள் பொன்மனத் தலைவியே; தமிழகத்தில் பொற்கால ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருசில சாதனைகளை இம்மாமன்றத்தில் பேச அனுமதி வேண்டுகிறேன்.

மகளிர் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் காவல் நிலையம் அமைத்து அதன் மூலம் மகளிர் பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகை செய்தார்கள்.

பெண் சிசுக் கொலைகளை தடுப்பதற்காக இந்தியாவிலேயே முதன்முறையாக தொட்டில் குழந்தை திட்டத்தை கொண்டு வந்தவர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பக்தர்களின் பசிப் பிணியைப் போக்குவதற்கு கோவில்களில் அன்னதானத் திட்டம் கொண்டு வந்தவர் தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகும். பின்னர் இத்திட்டத்தை கிறிஸ்தவ தேவாலயங்களிலும், முஸ்லிம் தர்காக்களிலும் விரிவுபடுத்தியிருக்கின்றார்.

ஏழைப் பெண்களுக்கு தாலிக்கு 4 கிராம் தங்கம் மற்றும் ரொக்கத் தொகை வழங்குவது, ஏழைப் பெண்களுக்கு பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், இல்லத்தரசிகளுக்கு அவர்கள் மகிழும் வண்ணம் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறிகள் வழங்கும் திட்டம்; குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்; படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிளும், விலையில்லா மடிக்கணினியும் வழங்கும்

திட்டம்; மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா நோட்டுப் புத்தகம், விலையில்லா யூனிபார்ம் போன்ற பல்வேறு திட்டங்களை அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் இதுபோன்ற ஏராளமான திட்டங்கள் மூலம் மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள்.

ஏழை விவசாயிகளுக்கு விலையில்லா ஆடுகளும், கறவை மாடுகளும் வழங்கி தமிழகத்தில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களே ஆகும். கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடையும் வகையில் அம்மா அவர்களின் ஆட்சியில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

*பிற்பகல் 1-35*

வேளாண் துறைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக நாட்டின் ஏற்றுமதியைப் பெருக்குவதில் நெசவுத் தொழில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்தொழிலின் வளர்ச்சிக்கு அம்மா அவர்கள் முன்னுரிமை அளித்து வருகிறார்கள். இதன் அடிப்படையில் விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணத்தில் கூடுதல் சலுகை அளித்து நெசவுத் தொழிலாளர்கள் வளமான வாழ்வு வாழ வழிவகை செய்துள்ளார்கள் நம் இதய தெய்வம் அம்மா அவர்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ள முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வரலாற்றில் நின்று நிலைத்திருக்கக்கூடிய மாபெரும் திட்டம் என்பதனை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய பாமர மக்களும் உயர் தர சிகிச்சை பெற்றுக்கொள்ளும் இத்திட்டம் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டம் ஆகும்.

மாற்றுத் திறனாளிகளுக்கு நாட்டிலேயே முதன்முறையாக ஆதார வள மையம் அமைத்தல், இரக்க சிந்தனையுள்ள இதயங்களை பூரிப்படைய செய்யும் முன்னோடித் திட்டமாகும். மேலும், அரசுப் பணிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து அம்மா அவர்கள் அறிவித்தது அவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். காலம் உள்ள வரை அவர்கள் அம்மா அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது துறைமுக மேம்பாடும், தொழில் வளர்ச்சியும் ஆகும். இவை ஒன்றோடொன்று இணைந்துள்ளதால் நாகப்பட்டினம் துறைமுகத்தை பொது—தனியார் கட்டமைப்பு அடிப்படையில் மேம்படுத்த அம்மா அவர்களின் அரசு முடிவெடுத்தள்ளது சிறப்பான ஒரு நிகழ்வாகும். இதனால் துறைமுகத்தின் வருவாய் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தி படைத்த அம்மா அவர்கள் காவிரிப் பாசனக் கட்டமைப்புக்காக 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுகளில் திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் காவிரி, வெண்ணாறு கல்லணைக் கால்வாய் பாசன அமைப்புகளில் ஒரு பகுதியைச் சேர்ந்த நான்கரை இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகின்ற வகையில் அம்மா அவர்கள் திட்டங்களைத் தீட்டி செயல்பாட்டுக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இதனால் விவசாயத் தொழில் மேம்படும். விவசாயப் பெருமக்கள் வாழ்க்கையில் வளம் காண்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நம் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பழமைவாய்ந்த, புகழ்வாய்ந்த கலைநயமிக்க புராதனச் சின்னங்களாக விளங்கும் கட்டடங்கள், கோயில்களைப் பாதுகாக்கவும், புனரமைக்கவும் அறிவாளிகளைக் கொண்ட தமிழ்நாடு ஹெரிடேஜ் கமிஷன் அமைத்துள்ளார்கள். 17 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு ஹெரிடேஜ் கமிஷன் புராதனச் சின்னங்கள் பாதுகாக்கப்படவும், புனரமைக்கப்படவும் தேவையான வழிகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அளிப்பதன்மூலம் அம்மாவின் அரசு புராதனச் சின்னங்களைக் காப்பதில் எந்த அளவுக்கு அக்கறை கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

நாட்டின் மின் தேவையின் அவசியத்தைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கூடங்குளத்தில் அணு மின் உற்பத்தியை விரைவாக செய்து முடிக்க துரித நடவடிக்கையினை எடுத்து வருகின்றார்கள். இன்றைக்குக் காலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மின் உற்பத்தியைப் பற்றி விரிவாக, விளக்கமாக இங்கு பதில் கூறியிருக்கின்றார்கள். இதைப்பற்றி இங்கு அமர்ந்திருக்கக்கூடிய எதிர்க்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அம்மா அவர்கள் அளித்த

[திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி][2012 அக்டோபர் 31

விளக்கத்தை அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று இந்த நேரத்திலே நான் நம்புகின்றேன். கூடங்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மக்களின் அடிப்படை வசதிகளை செய்து முடிக்க அம்மா அவர்கள் போதிய அளவு சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்து அப்பகுதி மக்களின் வரவேற்பையும், பேராதரவையும் பெற்று மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருக்கின்றார்கள்.

மேலும், குறிப்பாகக் கூறவேண்டுமானால் வழக்கறிஞர்களைப் பற்றி இந்த நேரத்திலே விளக்கமாகக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். முக்கியமாக வழக்கறிஞர்களின் சேம நல நிதி இதுவரை இல்லாத அளவுக்கு, வழக்கறிஞர் சங்கங்களே வியக்கும் அளவுக்கு அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியில் மிதக்கும் அளவுக்கு, புரட்சித் தலைவி பொன் மனத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் அனைத்து வழக்கறிஞர்களும் பலனடையும் வகையில் வழக்கறிஞர் சேம நல உதவியை ஐந்தேகால் இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழக்கறிஞர் சமுதாயத்தின் ஒட்டுமொத்த ஆதரவையும் அம்மா அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். இது வேறு எவராலும் செய்ய முடியாத மாபெரும் சாதனை என்று அனைவரும் பாராட்டுகிறார்கள். கேட்காமலேயே கொடுக்கக்கூடியவர் நம் தங்கத் தாரகை அம்மா அவர்கள் ஆகும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியில் வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்களையும், நன்றியுடையவர்களையும் நினைவு கூரத் தவறுவது இல்லை. அவர்களின் சேவையைப் போற்றி நினைவுச் சின்னங்களை அம்மாவின் அரசு அமைத்துள்ளது.

பிற்பகல் *1-40*

தென் தமிழகத்தின் வளத்துக்காகப் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையே முல்லைப் பெரியாறு அணையை உரிய காலத்தில் கட்டி முடிக்க தனது சொந்த நிதியையும் செலவு செய்த பென்னி குயிக் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவருக்கு மணிமண்டபம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோல் *18* ஆம் நூற்றாண்டில் சுதந்திரப் போருக்கு வித்திட்ட தீரன் சின்னமலைக்கு வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்ட சங்ககிரி கோட்டையில் நினைவுச் சின்னம்



2012 அக்டோபர் 31] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]

அமைக்க அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மாவட்ட மக்கள் பேராதரவு வழங்குவது மட்டுமின்றி, கொங்கு மண்டலமே அம்மாவுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்துள்ளது. தியாகத்தைப் போற்றும் அரசாக அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை அனுமதிக்க முடியாது என்று மத்திய அரசுக்கு புரட்சித் தலைவி அம்மா திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள். இதன்மூலம் *4* கோடி பேர்களின் வாழ்வாதாரத்தை அம்மா அவர்கள் காப்பாற்றி உள்ளார்கள். அவர்கள், சில்லறை வர்த்தகர்களின் பாதுகாவலராக அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள்.

திருப்பூரில் சாயக் கழிவுப் பிரச்சினையால் உயர் நீதிமன்றம் உத்தரவின்படி சலவை, சாயப் பட்டறைகள் மூடப்பட்டதனால் திருப்பூர் பகுதியிலுள்ள தொழிற்சாலைகள் மூடப்பட்டன, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்து மிகவும் பாதிக்கப்பட்டதை இதய தெய்வம் அம்மா அவர்கள் கருத்தில் கொண்டு *15* பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு *127* கோடி ரூபாயை வட்டியில்லாக் கடனாக வழங்கி மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய சுத்திகரிப்புக் கருவிகளை நிறுவவும், நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த திருப்பூர் சாயக் கழிவு நீர்ப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து, திருப்பூர் தொழில் வளர்ச்சியில் முன்னேற அம்மா அவர்கள் வழிவகுத்துள்ளதை தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் விவசாயப் பெருமக்கள் பாராட்டியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்ற பல நல்ல திட்டங்களை வழங்கியுள்ளார்கள். அதே நேரத்தில் மாநில அரசு எந்தத் திட்டங்கள் கொடுத்தாலும் அதை மத்திய அரசு நிராகரிக்கிறது. மத்திய அரசு, மாநில அரசின் அதிகாரத்தில் தலையிடுவதை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போதும் அனுமதிப்பது கிடையாது. வாய்ப்பு கிடைக்கிறபோதெல்லாம் சுட்டிக்காட்டத் தவறுவது இல்லை. மத்திய அரசு, மாநில அரசு வைக்கும் எந்தவித கோரிக்கைக்கும் செவி சாய்ப்பது கிடையாது. மத்திய அரசிடம் கூடுதல் நிதி கேட்டும், கூடுதலாக மின்சாரம் வழங்கக் கோரியும் அம்மா அவர்கள் அனுப்பும் கடிதங்களை மத்திய அரசு கண்டுகொள்வது கிடையாது. மாநில அரசை மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துகிறது.

எனது சங்ககிரி தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திருச்செங்கோடு செல்லும் சாலையில் சங்ககிரி ஆர்.எஸ். என்னுமிடத்தில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையாக உள்ளது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா கருணையோடு பரிசீலித்து இந்தப் பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சங்ககிரி ஒன்றியம் வடுகப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட அரசு மருத்துவமனையாக நிலை உயர்த்த அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சங்ககிரி ஒன்றியம் அரசிராமணி பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ளது, வெள்ளூத்துப் பெருமாள் கோயில் புராதன காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் சூரியவனம் என்ற இந்தப் பகுதிக்கு முதன் முதலாக வந்ததாகவும், அவர்களைப் பார்க்க சூரிய வனத்துக்கு கிருஷ்ணபரமாத்மா வந்ததாகவும் மக்களால் நம்பப்படுகின்ற இந்தக் கோயிலுக்கு ஏராளமான பொதுமக்கள் வந்து தரிசனம் செய்கின்றனர். இந்த பழமை வாய்ந்த வெள்ளூத்துப் பெருமாள் கோயிலுக்கு தார்ச் சாலை வசதி செய்து கொடுத்தும், எடப்பாடியிலிருந்து பஸ் வசதியும் செய்து கொடுக்க வேண்டுமாய் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு இரவு பகலென்று பாராமல், தமிழக மக்களுக்காக, அவர்கள் வாழ்வு வளம் பெற வேண்டுமென்கின்ற வகையில் தமிழகத்தில் மூன்றாம் முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்று மிகச் சிறப்பான நல்லாட்சி நடத்தி வருகின்றார்கள்.

அதனால் அம்மா அவர்களுடைய ஆட்சியில் இவ்வாண்டு கொண்டு வந்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை வரவேற்று,



பேசுவதற்கு வாய்ப்பு அளித்த நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானிய கோரிக்கைமீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகம் முழுவதும் பொருளாதார நெருக்கடி மிகக் கடுமையாக உருவாகியுள்ள இச்சூழ்நிலையில், முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்து மிக வலிமை வாய்ந்த நாடாக தன்னைக் காட்டி வந்த அமெரிக்க நாடு, பொருளாதாரத்திலும், இயற்கை சீற்றத்திலும் கடுமையாகப் பாதிப்பு அடைந்துள்ள இந்த நேரத்தில், இந்தியாவில் சுயசார்பு பொருளாதாரக் கொள்கைகளைக் கைவிட்டு உலகமயமாக்கல் கொள்கை என்ற தவறான பொருளாதாரக் கொள்கைகளை 1990 ஆம் ஆண்டுகளில் நாட்டில் அறிமுகப்படுத்திய மன்மோகன் சிங்—ப. சிதம்பரம் கூட்டணி மீண்டும் மத்திய அரசில் முக்கிய பங்கு வகிக்கும் நேரத்தில் நாம் கூடியிருக்கிறோம். உலகமயமாக்கல் கொள்கையில் நாடு விவசாயத்திலும், தொழில் வளர்ச்சியிலும் சிறந்து விளங்கும் என்று ஆருடம் கூறினார்கள். ஆனால் இன்று விவசாயம் அழிந்து நாட்டின் தொழில் வளர்ச்சி 7 சதவீதத்திற்கே தள்ளாடிக் கொண்டிருக்கும் சூழலில், மேலும் மேலும் நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் விதத்தில் அன்னிய முதலீடுகளை ஈர்க்கிறோம், வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறோம் என்று வெற்று சவடால்களை அறிவித்து பாராளுமன்றம் நடைபெற்று முடிந்த பின்னால், மத்திய அமைச்சரவையைக் கூட்டி இந்தியா முழுவதும் சுயமுதலீட்டில் சுயவேலைவாய்ப்புகளை உருவாக்கி, நாட்டு மக்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் இடையே பாலமாக விளங்கி வரும், சிறு வணிகத்தில், சில்லறை வர்த்தகத்தில், 51 சதவிகிதத்திற்கு அன்னிய பெருமுதலாளிகளை அனுமதிக்கின்ற மோசமான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. நாட்டின் ஆன்மாவையே அன்னிய முதலாளிகளுக்கு, முதலீடுகளுக்கு அடகு வைக்கும் போக்கை மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு செயல்படுத்துகிறது. இதை எதிர்த்து, நாடு

முழுவதும் அனைத்துப் பகுதி மக்களும் மகத்தான எதிர்ப்பைத் தெரிவித்த பிறகும், மத்திய அரசு பிடிவாதப் போக்கை கடைப்பிடிக்கிறது. ஆனால், நமது தமிழக முதல்வர் அன்னிய முதலீட்டைத் தமிழகத்தில் அனுமதிக்கமாட்டேன் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்ததை (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மனதார வரவேற்கிறேன். எதிர்காலத்தில் தமிழக சில்லறை வர்த்தகருக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுத்தும்விதமாக அதை இந்தச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-45*

அதேநேரத்தில், இன்றைக்கு சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலை, மதுரவாயல் பகுதியில் பாரத்-வால்மார்ட் என்று இணைந்து Best Price Modern Wholesale என்ற அடிப்படையில் ஆறாயிரம் சதுர அடியில் வணிக வளாகம் கட்டும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. டிசம்பரில் ஒரு வணிக வளாகத்தைத் திறப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அதையும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மத்திய காங்கிரஸ் அரசைப் பொறுத்தவரை தொடர்ந்து தமிழ்நாட்டு நலனுக்கு எதிரான ஆட்சியாகவே செயல்படுகிறது. தமிழகத்தின் மின் தேவைகளைச் சமன்படுத்துகின்ற பல நடவடிக்கைகளை தமிழக அரசு எடுப்பதை நான் வரவேற்றிருக்கிறேன், வரவேற்கிறேன். காலையிலே மிக விரிவாக, விளக்கமாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மின்சாரம் எப்படியெல்லாம் உற்பத்தி செய்யப்படாமல் இருந்தது என்பதை விளக்கமாகச் சொல்லியதோடு மத்தியில் இருக்கக்கூடிய காங்கிரஸ் அரசும், அதன் கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்து தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய நியாயமான மின்சாரத்தைக் கொடுக்க மறுப்பதோடு நாம் ஒப்பந்த அடிப்படையில் பெறக்கூடிய மின்சாரத்தைக்கூட கொண்டு வருவதற்கு எப்படித் தடையாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, இன்றைக்கு நமது தமிழக



முதல்வரைப் பொறுத்தவரை மரபுசாரா மின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் தருகிற வகையில் சூரிய மின் சக்தியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் மிகச் சரியான மின் கொள்கையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தில் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரியனைக்கூட எப்படி கையாள்வது என்ற வித்தை தெரிந்த ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய சூரிய சக்தி மின்சாரக் கொள்கைத் திட்டத்தை அறிவித்ததன் மூலமாக தமிழக மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** 30 சதவிகித மானியம் தருவதாக அறிவித்திருக்கிறார்கள். தயவுசெய்து அதை 50 சதவிகித மானியமாக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சூரிய மின் உற்பத்தியில் பல்வேறு நிறுவனங்கள் இன்றைக்கு ஈடுபடுவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனங்களுடைய தரம் அல்லது குறைந்தபட்சம் மூன்று, நான்கு ஆண்டுகள் உத்தரவாதம் தருகின்ற வகையில் அதை உறுதிப்படுத்தித் தர வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். உலகத்திலேயே ஜெர்மனி நாட்டில்தான் இன்றைக்கு சூரிய மின் சக்தியைப் பயன்படுத்துகின்ற மிகப் பெரிய ஆற்றலை, திறமையை வைத்திருக்கிறார்கள். அங்கே மின் சக்தியை மக்களோடு இணைந்து செயலாற்றுகிறார்கள். மக்கள் சிறு நிறுவனங்களில் அல்லது வீடுகளில்கூட சூரிய மின் சக்தியைப் பயன்படுத்தி தங்கள் தேவைக்குப்போக அரசுக்கு விற்பனை செய்யக்கூடிய நடைமுறையையும் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, அந்த நடைமுறைகளையும் நீங்கள் அறிந்து இதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல உடனடியாக மின் விநியோகத்தை சீரமைக்கிற சில நடவடிக்கைகளில் கோவை போன்ற பகுதிகளிலே கொஞ்சம் கூடுதலாக மின் விநியோகம் கொடுப்பதற்கான நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசை வலியுறுத்தி நெய்வேலி மின் உற்பத்தி முழுவதும் நமது தமிழகத்திற்கு பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதைப்போல இன்றைக்கு டெங்கு காய்ச்சல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழக மக்களின் உடல்நலத்தைப் பாதுகாப்பதோடு சுகாதாரத்தை மிக, மிக அவசியமாக கடைப்பிடிக்க வேண்டும். தமிழகத்தில் இப்போது மட்டுமல்ல, கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளாகவே டெங்கு காய்ச்சல் சிக்குன்குன்யா போன்ற பல்வேறு காய்ச்சல்கள், அதைப்போல நோய்க் கிருமி தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு அடிப்படை, முக்கிய காரணமாக நான் பார்ப்பது தமிழ்நாட்டிலே சுகாதாரச் சீர்கேடுகளும், குடிநீர் சுகாதாரமற்ற வகையில் உள்ளதுமேயாகும். தமிழகத்தில் பெரு நகரங்கள் முதல் சிறு குக்கிராமங்கள் வரை குப்பைமேடுகளும், கழிவுநீர்ப் பிரச்சினைகளும் மிகப் பெரிய சீர்கேடுகளாகத் தமிழகத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. இவற்றை முறைப்படுத்தி தமிழகத்தை சுத்தமான, சுகாதாரமான மாநிலமாக மாற்ற தமிழக அரசு கண்டிப்பான, முழு அளவிலான திட்டத்தை உருவாக்குவது காலத்தின் அவசியம். அனைத்து மட்டங்களிலும், சுகாதாரப் பணியாளர்களை அதிக அளவில் நியமித்து....

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டெங்கு காய்ச்சலைப் பற்றி பேசுகின்றபொழுது குடிதண்ணீர் வாயிலாகவும் இந்த நோய் வருகின்றது என்று சொன்னார்கள். அது தவறு. குடிதண்ணீர் வாயிலாக வருவதில்லை. நீண்டகாலமாக இருப்பிலே இருக்கின்ற தண்ணீரிலேதான் அந்தப் புழு உற்பத்தியாகிறது. அதுபோன்று இருப்பிலே தண்ணீர் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு தீவிரமான நடவடிக்கையை எடுத்து வருகிறது. எல்லா நகராட்சிகளிலும், பேரூராட்சிப் பகுதிகளிலும், அங்கே இருக்கின்ற ஆணையாளர் முதற்கொண்டு செயலாளர் வரையில் நேரடியாகக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொன்று, குப்பைமேடுகளாக இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். குப்பைமேடுகளை அகற்றுவதற்காகத்தான் முனைப்பான முறையில் செயல்பட்டு, இங்கே இருக்கின்ற குப்பைமேடுகள் முழுவதுமாக அகற்றி வரப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மேலும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு, சுகாதாரப் பணியாளர்களை கூடுதலாக நியமிக்க வேண்டும். அதற்காக புதிய நவீனக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல சுகாதாரத்தைப் பேணுவது அரசினுடைய கடமையாக மட்டும் பார்க்கவில்லை. மக்களும் அதில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு பள்ளிக்கூடங்களில் சுகாதாரத்தைப் போதிப்பதற்கு மிக முக்கியமான ஒரு பாடத் திட்டத்தை உருவாக்கி அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில் அடிப்படைப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்கூட வெறும் 5 சுகாதாரப் பணியாளர்கள்தான் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அங்கு மிகப் பெரிய சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது. உடனடியாக எல்லா மருத்துவமனைகளிலும் கூடுதலான சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மருத்துவமனைகளில் செவிலியர்கள் கிட்டத்தட்ட 6,000 பேருக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் பல திட்டங்களின்கீழ்

பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒப்பந்தம் போடும்போது 2 ஆண்டுகளில் அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், 4 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகளை வரை இந்தத் திட்ட ஒப்பந்தத்தில் பணியாற்றக்கூடிய செவிலியர்கள் இதுவரை நிரந்தரம் செய்யப்படாத நிலையில் அவர்கள் வெறும் 5,000 ரூபாயிலேயே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதை நமது தமிழக முதல்வர் அவர்கள் கவனத்தில் கொண்டு உடனடியாக 6,000 பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்வதற்கான ஒரு சூழலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பேசியது போதும். இன்னொரு நாளில் பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சு. குணசேகரன்:** அதைப்போல இன்றைக்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வரைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழர்களை பாதுகாக்கிற சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில்கூட ஈழ மக்களுக்கான பிரச்சினைகளை தீர்க்கிற விதமாக ஈழத்திலே நடந்த இனப் படுகொலையை கண்டிக்கிற விதமாக இலங்கையின்மீது பொருளாதாரத் தடையை கொண்டு வர வேண்டுமென்ற ஒரு மகத்தான தீர்மானத்தை நிறைவேற்றி, உலகம் முழுவதும் இருக்கிற தமிழர்களுக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தினார்கள். ஆனால், அந்த யுத்தம் நிறுத்தப்பட்டு 3 ஆண்டுகளுக்குப் பின்னால்கூட இலங்கையிலே தமிழர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத நிலையில் மத்திய அரசு தொடர்ந்து இராஜபக்சேவுக்கு அதிக அளவிலே ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை ஏற்று, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளினுடைய முழுமையான ஒத்துழைப்போடு, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்த அந்தத் தீர்மானத்தை, அந்த நடவடிக்கையை, ஜனநாயகபூர்வமாக இலங்கை அரசு, இராஜபக்சே அரசு சிந்திக்காமல் அந்த அரசே அதனுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்தக்கூடிய பத்திரிகைகளின் வாயிலாக நமது தமிழக முதல்வரை கொச்சைப்படுத்துகின்ற விதமாக கருத்துப் படங்களையெல்லாம் இன்றைக்கு வெளியிட்டு தமிழக மக்களை அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதை இன்றைக்கு மத்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு மனப் புண்ணாக நாங்கள் இங்கே பார்க்கிறோம்.



எனவே, இலங்கை அரசினுடைய இத்தகைய நடவடிக்கைகளை மீண்டும் கண்டிக்கிறவிதமாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அவையிலே ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதோடு, இன்றைக்கு யுத்த நேரத்திலே நடைபெற்ற இனப் படுகொலையைப் பற்றிய விசாரணை ஐ.நா. சபையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழர்களினுடைய நலன், அதைப்போல உலகத் தமிழர்களினுடைய நலனைப் பார்க்கிற நேரத்தில் மத்திய அரசினுடைய செயல்பாடு என்பது நம்பகத்தன்மை இல்லாத இந்த நேரத்தில், நமது தமிழக முதல்வர், ஐ.நா.விலே நடைபெறக்கூடிய விசாரணையில் நமது தமிழக பிரதிநிதிகளும் கலந்து கொள்கிற விதத்தில் மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் இப்போது பேசுகின்றபோது தமிழ்நாடு அரசின் மின் சக்தி தயாரிப்புத் திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். சில நாட்களுக்கு முன்புதான் தமிழ்நாடு அரசின் மின் சக்தி தயாரிப்புக் கொள்கையைப் பற்றி ஒரு புத்தகத்தை வெளியிட்டோம். இந்த அரசின் கொள்கையை ஒரு அறிவிப்பாக, ஒரு புத்தகமாக வெளியிட்டோம். அதில் இதே வாசகங்களைப் பயன்படுத்தி இருக்கின்றோம். மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இதற்கு முன்பு எப்படி இந்த அரசு ஒரு மக்கள் இயக்கமாகக் கொண்டு வந்து செயல்படுத்தியதோ, அதைப்போலவே சூரிய மின் சக்தி தயாரிப்பதையும் ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்தும் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள். 5 நிமிடத்தில் உரையை முடியுங்கள். நீங்கள் மிகவும் நன்றாகப் பேசுவீர்கள். சீக்கிரம் பேசி உரையை முடியுங்கள்.

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு 7 நிமிடங்கள் தாருங்கள். தாங்கள் எனக்கு அளித்த வாய்ப்பிற்கு வணக்கத்தையும், வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். சில முக்கியமான கருத்துகளை இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு Madam அவர்கள், அடி, அடி என்று காங்கிரஸ் கட்சியை அடித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு மத்திய அரசு எப்போதும் ஆதரவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் 1,900 கோடி ரூபாய் செலவில் மின் தடம் அமைப்பதற்கு மத்திய அரசு முன்வந்திருக்கிறது என்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், கூடங்குளம் அணு மின் நிலையத்திலிருந்து 1,000 மெகா வாட் மின்சாரத்தைத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசு கேட்கிறதைப்போல காங்கிரஸ் கட்சியும் வலியுறுத்தி இருக்கிறது என்பதையும் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழக காங்கிரஸ் கட்சியும் அதற்குத் தயாராக இருக்கிறது. தமிழகம் மின் தடை இல்லாத மாநிலமாக விளங்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. அதை நிறைவேற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பல்வேறு நலத் திட்டங்கள் இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கின்றன. அனைத்தையும் நான் வரவேற்கிறேன். நல்ல திட்டங்களை எந்த அரசு செய்கின்றபோதும் அதற்கு ஆதரவு அளிக்கின்றோம்.

நாகப்பட்டினத்திலே மீன் வளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நாகப்பட்டினத்தைச்



சேர்ந்தவர். என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே மீனவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். சுமார் 2,000 மின் படகுகளை வைத்து, மீனவர்கள் கடலுக்குச் சென்று, இலட்சக்கணக்கான மீன்களைக் கொண்டு வருகிறார்கள். வெளி மாநிலத்தவர்கள் அவற்றையெல்லாம் விலைக்கு வாங்கி, அவற்றை process செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அதனுடைய பயனை அடைகிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்ட மக்கள் அந்தப் பயனை பெற்றுக்கொள்ளவில்லை. நான் கேட்பது என்னவென்றால், அங்கு அதற்கான ஒரு Research Centre, ஒரு மீன் வள ஆராய்ச்சி மையம், மீன் பதனிடும் நிறுவனம் ஆகியவற்றை எங்களுக்குத் தந்தால், நிச்சயமாக எங்களுடைய கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்களுடைய வாழ்வாதாரம் முன்னேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவுகூர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் அத்தகைய ஒரு நிறுவனத்தை அமைப்பதற்கு உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலே குளச்சல் மீன்பிடித் துறைமுகத் திட்டம் 4 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. அந்தப் பணி நடைபெறவில்லை. அதைப்போலவே தேங்காய்ப்பட்டினத்திலும் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படாமல் உள்ளது. சீக்கிரமாக மீன்பிடித் துறைமுகம் முடிந்துவிடும், அவர்களுடைய மீன்வளத்தைப் பெருக்கிக்கொள்ளலாம், வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்பது மக்களுடைய எதிர்பார்ப்பு. ஆனால், அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்தப் பணியை விரைவுபடுத்துமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு முக்கியமான பிரச்சினை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து இந்த அவைக்கு சரியான தகவலைத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சென்ற தி.மு.க.

மைனாரிட்டி ஆட்சியிலே அந்த குளச்சல் மீன்பிடித் துறைமுகத் திட்டம் சரியாகத் தீட்டப்படவில்லை. அந்தத் திட்டத்திற்கு 27.10 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. alignment சரியாகப் போடப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் அது சரியாக ஆய்வு செய்யப்பட்டு Central Water Project Research Station-ல் திட்ட மதிப்பீடு 66.21 கோடி ரூபாய்க்கு தயார் செய்யப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகளுக்கு வருகிற டிசம்பர் மாதம் 12 ஆம் தேதி டெண்டர் திறக்கப்பட உள்ளது என்பதை மட்டும் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொண்டு, அதேபோல தேங்காய்ப்பட்டினத்திலும் 40 கோடி ரூபாய் அளவில் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. கடல் அலை சீற்றத்தினாலே அந்த அலைத் தடுப்புச் சுவர் உயரமாக இல்லாத காரணத்தினாலே பாதிக்கப்பட்டிருந்தது.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** இரண்டு, மூன்று முறை திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டும் சரியாக வரவில்லை. ஆகையால், அலை அதிகமாக உள்ள காரணத்தினால் உயரமான தடுப்புச் சுவர் போட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க இன்றைக்கு தேங்காய்பட்டினத்திலும் 69.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்திற்கும் டிசம்பர் மாதம் 12 ஆம் தேதி டெண்டர் திறக்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. உங்கள் பணி சிறக்க வேண்டுகிறேன். சீக்கிரமாக இந்தப் பணியை முடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் மணல் தட்டுப்பாடு ஏற்படுவதால் கட்டுமானப் பணிகளெல்லாம் நிறுத்தப்பட்டு, தொழிலாளர்களெல்லாம் பணி செய்ய முடியாமல் அவதிப்படக்கூடிய சூழ்நிலையிலே, சோதனையிலே தள்ளப்பட்டிருக்கிறார்கள். இங்கு இந்த அவல நிலை என்றால், திருச்சியிலிருந்து நான்கு, ஐந்து யூனிட் மணல்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தின் ஆணைப்படி மண் குவாரிகள் மூடப்பட்டன. இப்பொழுது சுற்றுச்சூழல் அனுமதி பெற்று மீண்டும் மண் குவாரிகள் திறக்கப்படவுள்ளன. விரைவில் இந்த மணல் தட்டுப்பாடு உறுதியாக நீங்கும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** விரைவில் உரையை முடித்துவிடுகிறேன். மாற்றுத் திறனாளிகள் பிரச்சினையிலே இந்த அரசு செய்திருக்கக்கூடிய அற்புதமான திட்டத்தை நான் வரவேற்கிறேன். Special Camp அமைத்து அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் பயனுள்ள வகையில் உதவித் தொகை வழங்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், ஒரு கோரிக்கையை மட்டும் வைக்கிறேன். 50 விழுக்காடு பாதிப்புக்குள்ளாகிய மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு உதவித் தொகை மறுக்கப்படுகிறது. ஏனென்றால், பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரையில் 35 விழுக்காடு பாதிப்பு இருந்தாலே போதுமானது. 50 விழுக்காடு பாதிப்புக்குள்ளாகிய மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு உதவித் தொகை மறுக்கப்படுகிறது என்றால் நிச்சயமாக......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், இன்னொரு வாய்ப்பு வரும்போது பேசிக்கொள்ளலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (வியாழக்கிழமை) 1-11-2012 காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*11. தமிழ்நாட்டில் பூப்பெய்திய மகளிருக்கான சுகாதார நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் பிரசவித்த தாய்மார்களுக்கு சானிடரி நாப்கின்களை வழங்குவதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக சுய உதவிக் குழுக்களிடமிருந்து கொள்முதல் செய்தது குறித்து 18-5-2012-ஆம் நாளிட்ட நிதி (சம்பளங்கள்) துறையின் 162 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*12. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் 28-8-2006 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2)/ஊ.வ.ஊ/442(d)/2006 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து 25-8-2011ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.2) துறையின் 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*13. அரியலூர் மாவட்டத்திற்காக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களாக அமைந்துள்ள உள்ளூர் பகுதிகளைக் கொண்டு மாவட்ட ஊராட்சி ஒன்றை ஏற்படுத்தியது குறித்து 25-8-2011ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.2) துறையின் 49 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*14. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*15. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*





*16. 2010-2011 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*17. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*18. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*15. 2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)*

*16. 2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)*

*17. 2012-2013 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

******